4

4

தேரையர் வைத்தியம் வா
வைத்திய அட்டவணை

எழுதியவர். திருப்புகழ்மணி [illegible]

309

309

Part I

தேதி: 6.3.63.
புத்தகத்தின் பெயர்: தேரையர் வயித்தியம் (அ) வைத்திய அட்டவணை.
எழுதியவர்: குப்புசாமிப் புலவன்.
எடுக்கப்பட்ட இடம்: எச்.எம்.

309

....

தேரையர் வயித்தியம்.

விக்கலுக்கு.

அன்ன விக்கலென்றும் ஆனதோர் தமிலா விக்கல்
மின்னிய க்ஷுத்திர விக்கல் விளங்குங் கெம்பீர விக்கல்
மன்னிய மகத விக்கல் யென்று மானிடவர்க்கெல்லாம்
இன்னிவை விக்கலை யஞ்சும் யென்று நீ தெரிந்து கொள்ளே.

இந்த பாடலுக்கு மருந்து:-

சிறுபூளை வேர் கொண்டு வந்து தோலைத் தட்டி எடுத்து மட்மைடை. கணுசமாய் எடுத்து வைத்துக் கொண்டு நன்று வளை தண்ணீரைக் கொண்டு வந்து. இதை நன்றாய்த் தெரிய வைத்து இந்தத் தண்ணீரை விட்டு நல்லா அரைத்துக் காய்ச்சி அரைக்கால் படி தண்ணீர் அல்லது மூன்று வீசம் படி தண்ணீராகக் காய்ச்சி விக்கலுக்கு கொடுத்தால் ஒரு நேரம் அல்லது இரண்டு நேரம் அல்லது மூன்று நேரமாகிய ஒன்றரை நாளையில் நிற்கும். இது கை கண்டது. இது சிவாயி விக்கலுக்கு:

மிக்குறு பாகம் பூளை வேர் தனைப் பேத வரைத் தொடு: ஒரு நாழித் தண்ணீரில்
சுக்கிடு வல்லியிலா ஆன நொந்து அடர்ந்திடும் விக்கலும் வேளையல் வெள் விரைந்தோடுமே.

விக்கலுக்கு இரண்டாவது பாடல்:-

நடு மாதளை நேர் பொரி சர்க்கரை
தேடு திப்பிலி தேனிற் குழைத்திட
பீடை செய்யும் பெருகு சுத்தி விக்கலே
ஓடு ஓடு மௌத் தூரத் தோடுமே.

மாதளம் பிஞ்சு கொண்டு வந்து காயப் போட்டு நறுக்கி நெல்லும் பொரியையும் நறுக்கித் திப்பிலியில் இடித்து இந்த மூன்றும் பொடி செய்து ஒன்றாய்ச் சேர்த்து வைத்துக் கொண்டு வாந்திக்கும் விக்கலுக்கு தேனில் ஒரு வெரு கடி பிரமாணம் சாப்பிட்டால் மூன்று நாளைக்குள் நிற்கும்.

சாதிலிங்கம் வெங்காரம் இரண்டு கூறு தக்க வாமனுக்கு முந்த
நாலு கூறு ஓதியதோர் நேர் வாளம் மெட்டுக் கூறு
உடனே கலந்து அரைத்தண்டை குன்றி போல்
போதிற் குளிர்ந்த தண்ணீரில் வயிறு போகுமே..
பொருந்த வெந்நீரருந்திடவே வயிறு கட்டும்
ஓதிய தோர் வாத யெல்லாம் பத்தி நாலு
உடன் பிறந்த குன்ம மொடு கறப்பான் போமே.

இதற்கு சுத்தி:-

சாதிலிங்கம் வேண்டுமானதை வாங்கி வந்து மகிழ் முலைப்பாலில் ஊற வைத்து நாழிகை எடுத்துத் தண்ணீர் விட்டு அலம்பி எடுத்து வைத்துக் கொள்ளுகிறது.

வெள்ளை வெங்காரத்தை வேணுமானதை வாங்கி வந்து எருமைச் சாணியிலே புதைத்து 60 நாழிகைக்குப் பிறகெடுத்துத் தண்ணீர் போட்டு அலம்பிக் காய வைத்து எடுத்து வைத்துக் கொள்ளுகிறது. நேர்வாளம், அதை வேண்டுமானதை வாங்கி வந்து எருமைச் சாணியைக் கரைத்து அதிலே போட்டு வேக வைத்து மேலோடு நடுவில் உள் சதையும் வெளிச் சதையும் நீளே இந்த மூன்றையும் எடுத்துப் போட்டு கத்தாழை மடல்

கொண்டு வந்து ஒரு புறமும் நரம்பெடுத்து அதில் சொருகி உமிக் காந்தலிலே வைத்து மட்டல் வெந்து போயிருக்கிற நிதானம் பார்த்து எடுத்து ஆற வைத்து எலுமிச்சம் பழச் சாத்தில் 60 நாழிகை வரையில் ஊற வைத்து எடுத்து வைத்துக் கொண்டால் வேண்டியதற்கு எவ்வளவு கணக்கோ அவ்வளவு போட்டுக் கொள்ளலாம்.

பித்தத்துக்கு:-

பஞ்சசாரை நாற் களஞ்சு பருத்த மதுரம் முக்களஞ்சு
நாற் களஞ்சி பருத்த மதுரம் முக்களஞ்சு
இஞ்சி, சுக்கு இரு களஞ்சி யேலஞ் சீரகம் ஒரு களஞ்சி
அஞ்சுங் கூட்டி பொடி செய்து ஆவின் பாலில் கொள்வீரே
மிஞ்சி வந்த பயித்தியங்கள் வெள்ளோக்காளம் உள் மயக்கம்
அஞ்சிப் பித்தம் க்ஷயமே அடவே தெட்டி அடைந்திடுமே.

காயம் அரத்தை திப்பிலியும் கடிய சுக்கு கொடிவேலி
நேய வகுத்துப் பொடி செய்து நெய்யில்த் தேனில்க் கொள்வீரே
மாயப் பித்தம் வலி குன்மம் வலியதாக வுள் மயக்கம்
வாய்வு பத்தந் தான் தீரும் வலப் பஞ்சாக்கினி சூரணமே

கெந்தமொன்று யிரத மொன்று வாள நாலு
கிழர் கடுகு ரோகணியும் ஆறு கூட்டி
முந்த யிள நீரதிலே அரைத்துக் கொண்டு
முதிர்ந்த பசும் பயறளவு உருண்டை செய்து

மருவிய வாய்வு குன்மம் வாத குன்மங்களோடு
சருவிய பித்த குன்மம் தானெறி குன்மமாகும்
பரவிய வலிய குன்மம் பரந்தெழு சன்னி சத்தி
இரவிய குன்ம மாகு மிவை யெட்டும் பகர்ந்து பாரே.

[illegible]ந்த பல சுரத்துக்கு இளநீர்ப் பாலால் வகை யறிந்து கொடு. சுரம் போம் வயறு போகும் [illegible]ந்திரமாம் மிருதி வாத குளிகை யொன்று தொல்உலகில் பேறுகச். சொல்லுவீரே.

[illegible]சம் சுத்தி:-

ரசம் வேண்டுமானது வாங்கி வந்து மஞ்சள் சாறு பண்ணி அதில் ரசத்தைப் போட்டுக் கை விரல் விட்டு [illegible]ளாவி இரண்டு நாழிகை அல்லது நாலு நாழிகை நேரம் [illegible]லி வெத்திலைச் சார் விட்டு அந்த சாத்தில் இந்தரசத்தைப் போட்டு ஊற வைத்து [illegible] நாழிகை ஊற வைத்து எடுத்து வைத்துக் கொள்கிறது.. பின்பும் கொடிவேலி தழைச் சாறு விட்டு நாலு நாழிகை ஊற வைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

சுரத்துக்கு வாய் தாக்காலு:-

வாத சுரத்துக்கு ஆறு நாள் வகுத்த பித்தத்துக்கு மேழு நாள்
[illegible] அய்யம் 9 நாள் உகந்த தொந்தம் ய நாள்
[illegible]தம் சொன்ன நாட் சென்றால் நில்லாச் சுரமும் பக்குவமாம்
[illegible]ாதம் பெரிய சுரத்துக்குப் பகர்ந்த நாளம் அறிந்து கொள்ளே.

[illegible]ரு சுரத்துக்கு:-

கொட்டை கறந்தை பாவாடை கூடும் பொரிமி கஸ்திற் கொடுத்து
[illegible]ட்டிக் கொள் ஆடாதோடை உரை சேர் வீழியிலை யாரும்
[illegible]ட்டிக் கொள்ளுங் காச்சலெனவும் கசாயமிலே செய்வீரால்
[illegible]ட்டுப் போகும் சுரங்களெல்லாம் வேறே மருந்து வேண்டாமே.

நல்லிக்காய் கெந்தகம்:-

இரும்புக் கரண்டியிலே போட்டு காய வைத்தால் உருகும். பச்சைப் பசும்

பால் பக்கத்தில் வைத்துக் கொண்டு பசும் பாலை சாய்க்கிறது. மறுபடி எடுத்து கரண்டியிற் போட்டு உருக்கிறது. இந்தப் படிக்கு பத்து விசை உருக்கிப் பார்லிற் சாய்த்து எடுத்து வைத்துக் கொண்டு தண்ணீர் விட்டு அலம்பி எடுத்து வைத்துக் கொள்கிறது.

இன்னொரு விதமாய் கெந்தகம் சுத்தி:-

ஒரு சட்டியில் பசுவின் பால், பச்சைப் பால் விட்டு மேலே வேடு கட்டி அதின் பேரிலிட்டால் நெல்லிக்காய் கெந்தகத்தை ஒன்று இரண்டாய் பரத்தி மேலே ஒரு சட்டி மூடி எருமுட்டையில் மாட்டு எருமுட்டையைக் குவித்து முட்டியிலே தீ வைத்து அந்த புடத்தில் உருக்கி பாலில் இறக்கினால் கெந்தகஞ் சுத்தி.

மூலத்துக்கு:-

காட்டு கருணை கரிக் கருணை கருத்த பிரண்டை செம்பிரண்டை
தோட்டு வெருகு மருட்க் கிழங்கு, சுக்கு மிளகு திப்பிலியும்
மாட்டு மோரில் கொள்ளாமல் மற்ற மோரில் கொள்வீரேயில்
சுட்டிவாள மூலமெல்லாம் சுப்பிட்டோடும் கண்டீரே.

விளாங்காய் வில்வைப் பத்திரிக்காய், விரும் பருத்தி மாதளங்காய்
இலங்காய் வாழைப் பிஞ்சுடனே இகள் வாரை புளியாரை
உளந்தான் சுருள் இவை யுலர்த்தி ஒன்றாய் இடித்து உழக்கு கொண்டால்
ஊளாங்காக்கி குராகிக் கழிச்ச லெல்லாம் ஏளா யோடுங் கண்டீரே.

தனியுள பண்டிதரே வியாதிக் கெட்டு தானங்கள் உண்டாகும் தான் வெள்ளை தோல்
திறவியுள நாடி கணங்கள் சுருபந் தந்தம் மற்றேகத்திசள் பரிசம் வாளம் நாக்கு
பிரணம் மல மூத்திரங்கள் யிவை யோரெட்டு மிகம் படவே தான் பார்த்து குறிப்புக் கண்டு
பரனி பின்னுள் மகன் மூத்தோர் யிருப்பார் பாகம் பண்புடனே யொள்ளி நரப் பண்டிதர் செய்வீரே.

கடுக்களி சுக்கு கிந்திப்பு கல்மதம்.
கோடு. அங்கை அடுக்கிய நீர் விட்டரைத்துக் குடிக்கக்
கயற் கொண்டி ஊழ உலையீர் வயிறு
காழ முழுள கள்ழ முளழ களமுள்ளவே.

கடுக்காய் நான்கு பங்கு, களிப்பாக்கு மூன்று பங்கு, சுக்கு இரண்டு பங்கு, இந்துப்பு ஒரு பங்கு இந்த நாலும் ஒன்றாய் நன்றாய் நறுக்கி ஒன்று சேர்த்து இளநீர் விட்டு கலக்கி குடிக்கவும்.

பேதி மீறினால் வேர் முருங்கை ஈர்க்கு ஒரு படி வசம்பு ஒரு தட்டெடை இது இரண்டையும் நொறுங்கத் தட்டி ஒரு சட்டியில் போட்டு ஒரு படி சாறு விட்டு நாலு படி சலமாய்க் காய்ச்சி சாப்பிட்டால் சகல பேதியும் நிற்கும்.

இதற்கு நிற்காதே போனால் நல்ல சந்தனக் கட்டையை அரைத்து தொப்புள் தொட்டு அடி வயிறு வரை அப்பிப் போட்டால், சகல பேதியும் நிற்கும்.

கிறுணிக்கு மருந்து:-

பறக்கும் பருத்திப் பருப்பொரு சீர்கம் பாளை திப்பிலி
சிறக்கு நல்லேலை மராமு நெற் பொரி தேன் சர்க்கரை
மறக்கு மிளா வார்த்தி அரோசிகம் பித்த மயக்கமுடன்
இருக்கும் ஆவேசம் கிறுணி யுந்தீர்த்திடுமே யந்தி மழையே.

தோஷத்துக்கு:-

வாச மிகு சந்தனம் புனுகு சாந்து மருவிய ஊத்சர் பாசிலையும் சிவந்த ஆட்டே
பாச மிகு நெய் பாலோடன்னம் வெண்ணெய் பருகு நல்ல வெல்ல மொடு பனையின் வெல்
ஆசை மிகு பெண் போகம் இவைகளெல்லாம் அகத்தி விடாயி மிகுவை யெல்லாம் ஆனந்த பேர்க்கு

[illegible]யாய்க் கூறல் மாதே [illegible]ரத்தில் மேலே தோஷம் வேறு மென்றுலகில் சொல்லுவீரே.

<u>சகல சுரத்துக்கு கசாயம்:-</u>

ஆடாதோடை பேய்புடலும் அடவாரு சீந்தி பற்படாகம்
நீடே கண்டங்கத்தரி வேர் நிலவேம்புடனே நிரை சுக்கு
வாடா மூடிநீ ரெட்டிலொன்றாய் வகையாய் காய்ச்சி குடிப்பீராய்
கோடா கோடி சுரந் தனியும் குளிருந் தாகந் தீர்ந்திடுமே

இலந்த யிலை நன்னாரி சீந்தித் தண்டு யிருவேலி விலாமிச்சம்
யெழில் பூநாகம் அலைந்ததொரு பேய்புடலை முத்தக் காசு
அ[illegible] கோஷ்டம் சுக்குடனே ஆடாதோடை நலம் புகழும் யிஞ்சிரசம் முலைப் பாலுஞ்
சேர்த்திவை சமனாய்க் கூட்டி நீருந் தாகங் கொள்ளு உலைந்த சன்னி ஈத முதல் தோஷ
மூன்றும் [illegible]

<u>சகல சுரத்துக்கும் கசாயம்:-</u>

கொடுத்திடுஞ் சுரத்துக்கெல்லாம் கூறிய விலாமிச்சஞ் சீந்தி
யெடுத்த காஞ்சோரி முத்தம் இனிய பற்படாகத் தோடே
மருத்திடு வேம்பு கோஷ்டம் வளரி கண்டங் கதலி தேக்கு
கடுத்த திப்பிலியுஞ் சுக்குந் தன்னுடன் கசாயங் கொள்ளே.

நோயருதி னுருந்தன்னை நன்மையாய் வழைத்து வந்து
[illegible]யினிலிருத்தி வைத்து பரிவுடன் அவரை நோக்கி
[illegible]ய் தந்தை போலே யெண்ணி தன் கையில் நாடி காட்ட
[illegible]ர்ந்தவன் சொல்ல வல்லான் அவன் குரு நாதனுமே.

<u>பாட மாத்திரை:-</u>

சுக்கு [illegible]ட்டெடை.1, மிளகு [illegible]ட்டெடை.1, திப்பிலி [illegible]ட்டெடை.1, சாதிக்காய் [illegible]ட்டெடை.1, சாதிபத்திரி [illegible]ட்டெடை 1, ஏலம் [illegible]ட்டெடை.1, கிராம்பு [illegible]ட்டெடை.1, [illegible]க்காய் [illegible]ட்டெடை.1, காசிக்காய்ப் பருப்பு [illegible]ட்டெடை.1, அபினி [illegible]ட்டெடை.1, [illegible]டயம் [illegible]ட்டெடை.1, ஆக வகை 11 [illegible]ட்டெடை வாங்கி பதினொரு வகை சரக்கு [illegible]சையாய் நறுக்கி அபினி ஒன்று தவிர மற்றதெல்லாம் பச்சையாய் நறுக்கி நல்ல [illegible] பச்சக் கஞ்சாவை கொண்டு வந்து நரம்பு கோல் குச்சி எடுத்து தழையை உரலிற் [illegible]போட்டு இடித்துச் சாறு பிழிந்து அந்த சாற்றை விட்டு மேல் கண்ட சரக்கை போட்டு [illegible]விடாமல் நாலு சாமம் அரைத்து [illegible] விளாங்காய் பிரமாணம் உருட்டி [illegible] புதுச் சட்டியிலே காய வைத்து ஒரு [illegible] அல்லது பாரி [illegible] காற்று புகாமல் [illegible] வைத்துக் கொள்கிறது.

இதுக்கு தீரும் வியாதி முகத்தில் சீ ரத்தம் வயிறெருப்பு, சேறு போல் கழிகிற [illegible].

<u>[illegible]க் கடுப்புக்கு:-</u>

<u>[illegible] தலை போலே மலம் விழுகிற கடுப்பும் இப்படிக்கு நாலு விதமான அபான கடுப்புக்கு கொடுக்கிற விதம்:-</u>

எருமைத் தயிரிலே 3 நேரம் 1½ நாள் கொடுக்கவும். இதில் சகல கடுப்பும் [illegible]ம். இதில் நில்லாமல் போனால் வாழைப்பூ கொண்டு வந்து சருகெடுத்து உரலில் போட்டு இடித்து சாறு பிழிந்து ஒரு இரும்புக் கரண்டியைக் காய வைத்து ரசத்தை விட்டு [illegible]ங்க வைத்து இந்த சாற்றில் மேற்கண்ட குளிகையை ஒன்று உரைத்து கொடுக்க சகல பேதியும் [illegible]ர்த்தியாகும்.

<u>[illegible] சுரத்திற் குறும் குணத்தின் லட்சணம்:-</u>

வாத சுரம் உடம்பு சிலுக்கும். வயிறு மந்தங் காணும். கண்ணில் நீர்ப் பாயும். [illegible]ளைப்புக் காணும். பிக்கும். உடல் வலியாகும்.

பித்த சுரம் மயக்கங் காணும். மலத்தை போக்கி விடும். வயிறப் பிராத்தக் செல்லும். கருக் காணும். வாந்தி கொள்ளும். மனம் பிரட்டும். இந்த வகை காணும்.

சிலேற்பன சுரம் :-

முகம் வெளுக்கும். மலம் சலம் வெளுத்து விழும். காச்சலில் மந்தமான சுரம் அடிக்கும். குளிருங் காணும். தலை பாரிக்கும். சிரசே நிமிர்ந்து பார்க்கொட்டாது.

தொந்த சுரம் :-

வாத பித்தம். சிலேற்பனத்தின் சுரத்துக்கு கான வேண்டிய லட்சண மெல்லாம் இந்த சுரத்துக்கு காணும்.

அசீரண சுரத்துக்கு :-

சாதத்தைக் கண்டால் மனங் கொள்ளாது. நச்சு காச்சல் காணும். நச்சு குளிர் காணும். வயிறு மந்தம். வாய்வு பரியாது. அடி வயிறு முளுதுக்கும் கத்திப் போல் இருக்கும்.

அபிகாத சுரத்தில் லட்சணம் காலமே தலைவலி காணும். நால் நாழிகை கிடுமத்து காச்சல் வரும். 2 நாழிகை கழிஞ்சால் மத்தியானத்துக் கெல்லாம் சுர தோஷங் காணும் வாய் பினத்து காணும். சாய்ந்திரத்து வரைக்கும் இருக்கும். அல்லது உளரிக் கொண்டேயிருந்து பொக்குன்னு பிராணன் போய் விடும். இந்தப் படிக்கு இதனுடைய லட்சணம்

சன்னி பாத சுரம் :-

காலமே நேர மென்னும் மத்தியான நேர மென்னும் பொழுதோடே யென்னும் இவையில் லை யென்னேரமோ அபிகாரத்துக்கு தலை வலி காணும். உடம்பு சிலக்கும். உடம்பு விறு விறுத்து போகும். நாலு நாழிகைக்குள்ளே தோஷங் காணும். சாப்பாடு கொள்ளாது. மலஞ் சலத்தை கட்டும். வாய் நாற்றம். இந்த லட்சணம் காணுற காயம் ஒளிகி விடுகிறது. உண்டு இரண்டு நாள் வரை இவை யத்து யிருந்து 3 நாளிருந்து அப்புறம் பிராணன் போறதுண்டு.

இதுக்கெல்லாம் அப்பவே மருந்துகள் உதவில் தப்பும். தப்பின போதிலும் காயம் மிஞ்சாது. யெச்சு இந்த அபிகாத சுரமும் சன்னி பாத சுரத்துக்கும்

மருந்து கிடைத்த போதிலும் பிரயாசம் இது தவிர வாத பித்தம் சிலேற்பன தொந்தம் அசீரண சுரம் இந்தரும் பிராயாசப் பட்டு மருந்து நாலெசிச்சை செய்து லகுவு படுத்தலாம்.

தேள் கடித்த பேருக்கு மூக்கில் நாள் விடுகிறது :-

வெள்ளாட்டு புழுக்கை அல்லது குளம்பிலுப் போல் இருக்கிற ஒதப்பையைக் கொண்டு வந்து ஒரு சட்டியிற் போட்டு அடுப்பேத்தி சாம்பல் செய்து இந்த சாம்பலை வஸ்திர காயம் செய்து எருக்கம் பால் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் கழித்து பிறகு இப்படி மூன்று பால் விட்டு விட்டு அட்டி காய வைத்து ஆறின பிறகு நன்று நாக்சிப் பொடியாக ளொப்பந்தமாய் நனுக்கி பத்திரப் படுத்தி க் கொண்டால் தேள் கடித்த பேருக்கு நாசியில் விட்டால் உம்மல் தும்பலுக்கு நெரி இறங்கும். கடி வாயி விஷமும் இறங்கும்.

பித்த சுரத்தின் குணங் கேளாய் பித்த மிகுந்தே நித்திரை போய்
உத்தம லத்தைப் போக்கி விடும் ஒங்காரிக் கேப்ப மிகவுண்டாம்.

வாத முற்பத்தி யில்லாமலே வுடல் வலிவு அற்ற வலிகள் வராது காண்
சாத பித்த முற்பத்தியில்லாமல் தலையைச் சுற்றவில்லையே சேற்றமம்
போத வுற்பத்தியில்லாமலே வுடல் புதிய நெளவு களவுராது காணுமே
நாத முற்ற குயில் தொனி மங்கையே நங்கையே யென்று நாட்டில் விளம்புமே

யில்லையே வாதம் யெழில நடை கோழியாம்
யில்லையே பித்தம் யெழும்பிருக் கவலையாம்
யில்லையே சிலேற்பனம் சேர்ந்தோர் சர்ப்பமாம்

சகல சன்னிக்கு குழாய் வைத்து மூக்கிலூதத் தூள்:-

பசுவிட்ட (காட்டிலே காஞ்சு யிருக்கிற) எரு மட்டையைக் கொண்டு வந்து ஒரு சட்டியில் வைத்து அடுப்பேத்தி சாம்பலாக்கி இதை நன்றாய் நறுக்கி வஸ்திர காயஞ் செய்து இதில் ஏழு தரம் எருக்கன் பால் விட்டு வூட்டி கிளறி கிளறி பாவாட்டி காயவைத்து காட்டி கதனையாய் இருக்கிறதை நன்றாய்த் தூள்ப் பண்ணி பத்திரப் படுத்தி வைத்து இருந்தால் சன்னி வந்தவர்களுக்கு மூக்கில் குழாய் வைத்து இந்த தூளை முன்னே போட்டு அப்புறம் மூக்கில் குழாய் வைத்து ஊதினால் சகல சன்னியும் நிவர்த்தியாகி பேசும். அப்புறம் அதற்கு தகுந்த சிகிச்சை செய்ய வேண்டும்.

இன்னம் சன்னி சகலத்துக்கு திரி:-

ஒரு சாண் நீளம் அல்லது ஒன்றரைச் சாண் நீளமும் அகலமும் இப்படி பழமான சீலைத் துணியாய்க் கிழித்து திருவ கள்ளிப் பாலில் ஏழு பால் காயக் காய ஏழு நாளைக்கு வட்டி எருக்கம் பாலும் ஏழு நாள் காயக் காய ஊற்றி நாலாம் நாள் நல்ல மந்தமாகும். இந்த துணியை திரி பண்ணி சுருட்டி வைத்திருந்து அப்போதைக்கு திரி கிழிச்சு ஒரு அகல்முள்ள சிறு சட்டி அல்லது விளக்கு அல்லது சிறு தட்டச் சட்டியில் வேப்பெண்ணெயை விட்டு திரியை நன்றாய் நனைத்து அந்த திரியை மிருதோ கிளி மூக்கொப்பாக முனையவனைத்து அடுப்பேத்த எண்ணெய் உரையும் வரையில் விழுகத் தக்கிற சுடர் திரி சொட்டு விழுகிற போது கீழே ஒரு கிண்ணத்தை வைத்து விழுந்திருக்கிற தயிலத்தை ஒரு பீங்கானில் அல்லது சிமிழில் அடைத்து எடுத்து வைத்து இருந்தாலும் அல்லது அப்போதைக்கு இறக்கிக் கொண்டாலும் அந்த தைலத்தை விரலில் தொட்டு மூக்கிலுறுஞ்சச் சொன்னாலும் அல்லது மூக்கில் உருஞ்ச சத்தியில்லாமல் குழாயிலே ஊதின போதிலும் அல்லது விரலில் தொட்டு உச்சி பொரிகைச் சந்து கால் சந்து அல்லது அவளை விட்டாலும் அப்பவே சன்னி நிவர்த்தியாகும். இந்த தயிலம் சன்னி பாத சுரத்துக்கு

சிலேற்பனம், வாய்வு நாடல், சிரசில் சலவிடத்திலும் எவ்வகை விசத்திலும் தலை பரிச்சு பாரங் கொண்டு சிரசில் சலந் கொண்டு அதனால் சில வித்தியாசங்களுண்டானால் இருமல் காய்ச்சல் மூக்கடைப்பு கடம் இப்படிக்கு கண்டால் இதுக்கு சூரணம் மருந்து சுண்டை வேர்த் தோல் வெள்ளை பூ தும்பை வேர் தோல், வெள்ளை பூ, தும்பை வேர், தோல் தனித் தனியாகக் கொண்டு வந்து இதை கோல் எடுத்து காய வைத்துப் பிறகு இடித்து வஸ்திர காயம் செய்து ரெண்டையும் நிறுத்தி ஒவ்வொரு நிறையாய் சமன் சேர்த்து எடுத்து பத்திரப் படுத்தி வைத்துக் கொண்டு பிறகு இரண்டு வருஷத்திய பழைய உப்பைப் புண்ணாக்கைக் கொண்டு வந்து அடுப்பில் ஓடு வைத்து அதில் புண்ணாக்கை வைத்து சாம்பலான பிறகு இந்தச் சாம்பலும் மேல் கண்ட சூரணம் இரண்டும் சரி நிறையாய் சேர்த்து ஒரு குழாய் அல்லது குடுவையில் இவை வைத்துக் கொண்டால் மேல் கண்ட நசியப் பாரக் காரர்களுக்கு கொடுக்கிறது. மேல் கண்ட பேர்களுக்கு சுகமாகும்.

தலைப் பாரம், ஒருத் தலைவலி, இருந் தலை வலியும் நாசிக் கனப்பும், முகம் வலி குடைச்சல் இழுப்பும், சன்னிக் காரருக்குக் கொடுக்கவும்.

சகல தோஷத்துக்கு:-

உப்பைப் புண்ணாக்கு பழம் பற்படகம் கொண்டு வந்து பெண் பிள்ளைக்கு வந்தால் ஆண் பிள்ளையில் திருப்பயனை சிறு நீர் விடச் சொல்லி அதில் இந்தப் புண்ணாக்கை உடைத்து இடித்து பச்சையாய் வஸ்திர காயம் செய்து வைத்துக் கொள்கிறது. இதை ஒரு ஓட்டியில் வைத்து மூடி அந்த ஓட்டில் இருக்கிற சிறு நீரில் வைத்து நசுக்கி பிசைந்து அந்தப் பொட்டணத்தை மூக்கில் இரண்டு சொட்டு மூன்று சொட்டு விட்டால் சில பேர்க்கு தும்பல் வரும். சில பேர்க்கு தும்பல் வராது. இது கண்டது.

வாய்வுலே மலஞ் சலங் கட்டிடும்
வாய்வுலே மரு பிராணங்கள்
வாய்வுலே வாங்கிடு மேல் மூச்சு
வாய்வுலே வருந்துகிற பிரகமே.

மருவிய வாத குன்மம் வாய்வு குன்மங்களோடு
சருவிய பித்த குன்மம் நாளெரி குன்மமாகும்
பரவிய வலிய குன்மம் பறந்தெழு சத்தி சன்னி
விரவிய அய்ய குன்மம் இவை யெட்டு பகர்ந்த பாரே.

வலிக்கு விபரம்:-

முயல் வலி, குதிரை வலி, காகவலி, குமர கண்ட வலி, மாந்தவலி, ஆக வலி. 5.

வீச்சு விபரம்:-

மன் வீச்சு, பிர வீச்சு ஆக். 2. வாயுவில் முன்பும் தீரும். பிரபாசம்.

அடி வயிற்றில் கட்டியாய் கட்டுகிறது கிரந்மடா அம்மிக் கல்லை எடுத்த வயிற்றுல் கர்ப்பம்படியாக கட்டியாய் கட்டுகிறது.-ருத்திர வாய்வு.

நெஞ்சிலே மூச்சு வாங்குறது, அப்புறம் அடைச்சல் காணுறது. அபான வாய்வு காட்டுறது. சாதத்தின் பேரில் தேட்ட மிராமல் சுப்ப பேர்சனங் கொள்கிறது இப்படிக்கு இருக்கிறது - இது தமரக் வாய்வு.

வாதத்தில்	80	சன்னி	13	சூலை	18
பித்தம்	40	தோஷம்	9	வெகுமூத்திரம்	6
சிலேற்பனம்	20	குன்மவலி	5	சலக்.கட்டு	6
மேகம்	2	வீச்சு	2	சுரம்	7
குன்மம்	8	குப்படம்	18	நாள்	60
				அருக்கம்	60

விருமே திரிகடு சிற்றப்புக்காய்விளங்கு நன்றாய்
யிருமேல் மூலம் யிரு சீரக மொடனிஞ்சி ரசம்
கொருமே யுலத்தி பொடியாக்கித் தேனுண்ண குன்ம மன்றி
யெருமே பல பலவாய் வெல்லாம் செல்ல யேந்திழையே

திருமூல சாமியார் வயித்தியர் சொல்லிய வயித்திய நூல்:-

இரத்தப்பு திப்பிலி இடை பீதரோகனி
நந்திப்புச் சாத்தில் நயந்தே வுரைத்திடும்
அந்தகன் கண்ணுக்கு அருந்தி தோளிடும்
நந்திக்கு நாதன் நயந்துரைத்தாரே.

இரா. விரங்கு நீர் தானெப்படித் தன்மம் போட்டு
நாவரிய பதப் பாதில் ஆண்டி நவச்சாரம்
வுரமடா வார் வெருப்பாதில் கருப்பதாகில்
வாமடவார் மஞ்சளிக்கி வெருப்பதாகில்

யிருந்த மட நாளெடுத்து மியல் வாய்ப் பார்க்கில்
தப்பாத சிவக்கில பார்க்கில் தீரும்
மறப்பில் உலை பார்க்கில சனத்தில் தீரும்
மறப்பில் உலை தீரு மென்றுல் வாளோர்க்கே.

மன்னில் வேந்தன மாமலை யானரும்
உன்றுர் சேர்த்தக் குளிசி கொருப்பரும்
கண்ணில் மூக்கிலுங் காதிற் புழிந்திட
விண்ணிற் போன விஷமது தீருமே.

பெரிய மூங்க குழாயிருக்கிற இப்பை புண்ணுக்கு சிகப்பு மூங்க குழாயிருக்கிறது. வுரியிலே நன்றாய்ப் பிடிக்கும். பெரிய வாய்வுகளுக்கு குருடு மனி கூளை சிறு குழந்தைகளுக்கு அது உள்ளடக்கம் விரிஞ்சு யிருக்கிற மூங்கில் வெள்ளை குழாயிருக்கிறது.

தோஷத்துக்கு இது சாதிலிங்க குளம்பு.1,
மிருத்வாத குளிகை யிது சகல சுரத்துக்கு.

<u>இது சகல சுரத்துக்கு</u>:- 7.3.63.

வாத சுரத்துக்கு பசுவின் பால். ~~[illegible]~~ பித்த சுரத்துக்கு இளநீரில். தொந்த சுரமாயிருந்தால் இதுவும் அதுவும் இரண்டிலும் சேர்த்து குடிக்க சுரம் நிற்கும்.

இந்த குளிகை யிருக்கு குளாயிடக்க எழுத்து எழுதிய கபாட குளிகை யிருக்கு மூங்கில் குளாய் இந்த குளிகை கடுப்பு வயிரெடுப்பு சீதம் இது கேட்கும்.

இன்னொரு கூடு மூங்கல் குழாயிலிருக்கும் தென்பழனி ஆண்டி இடத்திலிருந்த மகா அக்கினி குமாரன் மாத்திரை குளிகை யிருக்கும் மூங்கில் குழலாயி.

மூன்று விரற் கடை நீளமிருக்கும் கூடு மூங்கில் குழாயிலிருக்கிறது அக்கிரச சஞ்சிவி தோஷத்துக்கு முலைப்பாலில் தமும் போடுகிறது இது இருக் குழாயி நாலைந்து குழாயி யிருக்கிறது. சகல தோஷத்துக்கு நவச்சார குளாயி.1 குளாயி. 6.

பலகை கற்பூரமும், பால் சாம்பிராணியும் ஒன்று அரைத்தால் குழம்பாகும்.

சாதிலிங்கம் வாங்கி வந்து அங்கி பூட்டி நெருப்பை வைத்தால் பத்திக்கும். சாதிலிங்கம் மாத்திரை ஆகும். இது சன்னிக்கும் சுரத்துக்கும் தோஷத்துக்கும் கொடுக்கலாம்.

சன்னிக்கு இஞ்சி இதுவும் பொங்கல்
சுரத்துக்கு சுக்கு இதுவும் பொங்கல்
தோஷத்துக்கு சித்தரத்தை இதுவும் பொங்கல்.
இது இலந்தைப் புருடையுல் செய்து வைத்து இருக்கிறது.

ரச கற்பூரமும் ஒரு தட்டெடை. பலகை கற்பூரமும் பால் சாம்பிராணியும் இரண்டும் இரண்டு தட்டெடை இது இரண்டும் அரைத்தால் குழம்பாகும். அது நன்று மிஞ்ச விட்டு ரச கற்பூரத்தைத் தடவி காய வைத்து தீயைப் பத்தி விட்டால் எரியும் தீயை ஆற விட்டு கையில் பிடித்தால் கட்டிப் போகும். எடுத்து வைத்துக் கொண்டால் தோஷத்துக்கு சித்தரத்தைப் பொங்கலில் இஞ்சிப் பொங்கல்
சுரத்துக்கு சுக்கு இதுகளில் சுரசம் செய்து கொடுக்கலாம்.

இருப்பு உருண்டை யாட்டவும்.
உருக்கு உருண்டை யாட்டவும்.

இருக்கு மாத்திரை கல்லு உருண்டையைப் பத்திரமாய் வைத்திருந்து சீவன் பட்டுப் போய்ப் பிரக்கினை தப்பி மயக்கமாய் இருக்கும். சீவனுக்கு பழைய தோழாந் கட்டியைக் கொண்டு வந்து இடித்துத் தாளிப் பனி கசாயம் வைத்து இரட்டை மடிப்பு துணியில் மேடு கட்டி அந்த கசாயத்தில் இந்த மாத்திரையை மாத்திரைக் கல்லில் கசாயத்தை விட்டு உரைத்துக் கொடுத்தால் சீவன் அதிஷ்ட மிருந்தால் பிழைக்கும். இல்லா விட்டால் கண் விழித்து பூாராது பேசி விட்டுப் போகும்.

அந்தப் பிராண பூபதி மாத்திரை -1
இன்ன சிகப்பு மாத்திரை 1
கருப்பு குளிகை மாத்திரை 1

இந்த மூன்று இன்னத்துக்கு ஆகு மென்றும் யின்ன மாத்திரை யென்றும் எஜமானருக்குச் செப்பு.

<u>சிமிளிலிருக்கிற அர்த்தகுரி குளிகையின் குணம்</u>:-

சுரக்காரருக்கு இடது புற நிற்கிறது. வலது புறத்து வெள்ளாட்டு முலைப்பால், வலது புற இருக்கிற இடது முலைப்பால் இரு புறத்து முலைப் பாலில் ஒரு வயித்தியனுமிருந்தால் இது வேண்டியது இல்லை. மிருத்வாத குளிகையை கொடுத்தால் சுரம் நின்று போகும். ~~இது இருப்புச் சிமிழில் இதெல்லாம் ஒரு கடுதாசியில் இருக்கிறது.~~

குகை நீர்:

<u>குகை நீர்:-</u>

உடல் அனல்க் கொண்டு கடுப்புக் கண்டால் அருகன் வேர் கொண்டு வந்து நன்று கருவெல்லாம் அரைத்துப் போட்டு ஒரு புட்டி திரங்கை நெய்த் கட்டிப் போட்டு மிளகு ஒரு கட்டெடை பச்சையாய்ப் போட்டு இவ இரண்டையும் எட்டிலொரு பாகமாய்க் காய்ச்சிப் பசுவின் பச்சை வெண்ணெய் ஒரு கழற்சிக்காய் அளவு கசாயத்தில் போட்டு ஒளாவி இரண்டு விரல் கொண்டு குகைநீர் எடுத்து அதில் போட்டு ஒளாவி எடுத்து சாப்பிட்டால் உடம்புக்கு நல்ல தெம்பாகும். அப்பேர்ப்பட்ட.

~~…க்கு குருமென்ற சம்பாதித்த~~ குகைநீர் கடுதாசி 1 வெள்ளை வெங்கார மிருக்கு கடுதாக்கு. 1, என்னெய் வெங்காரம் தட்டாருக்கு ஆகப்பட்டது இது பண்டிதருக்கு ஆகாது. ஆனால் ஒரு வியாபகத்துக்கு வேண்டியதென்று எழுதிய பழைய பற் இருக்கப்பட்ட கடுதாசிக்கு 1 இந்த பற்பம் சயத்துக்கு ஆகும். காலமே நெய் சாய் திந்திரம் தேனில் குங்குமப் பூ கோரோசனை இந்த இரண்டும் சயிலத்துக்கு வடி கஷாயத்துக்கு போடலாம். குங்குமப்பூ வில் கொள்ளைப் பூ வேருங்குமப்பூ என்று சொல்வார்கள் சிலபேர். அப்படியல்ல சீமை குங்குமப்பூ நாவில் வைத்தால் மஞ்சள் நிறமாயிருக்கும் எருமை கோரோசனை கப்பு இதுவும் மாட்டுக் கோரோசனை மஞ்சள் நிறம் இந்த கடுதாசு இரண்டுக்கு ஒரு சீட்டு கடுதாசு 1 காவிக் கல்லு கடுதாசு 1 இது சுரக் கொ வலிக்கு நாடங்கம்மத் சோத்து தண்ணீரில் உரைச்சு கொடுத்தால் வியாதி தீரும்.

உள்ச் சுருங்கி கடுத்தாக்கு. 1, வெளி மூலத்துக்கு சேர்ப்பட மருந்துடனே இதை சேர்த்துப் போடலாம்.

எருமை கொம்பு சிமிழில் இருக்கப்பட்டச் சர்வ சுரத்துக்கு மாத்திரை யிதை ஒரு கடுதாசியில் கட்டி இருக்கிறது 1 நவசித்திரதி குளம்பு இருக்கு யிப்பி. 1 காம்பவு யிருக்கும் கடுதாசி. 1.

இரத்த புருடிருக்கும் கருப்பு குளிகை இன்ன குளிகை என்று தெரிய இல்லை. 1 பீதரோகனி யிருக்கும் கடுதாசி. 1, யிதில் பிர்தலாட்டமுண்டு.

கூர் மாத்துக்கு பீத ரோகணியை உரைத்தால் தங்க மாத்துக்கு சரியாக இருக்க வேணும் இதுக்கு குறைந்தால் மட்டமென்று கண்டு கொள்ள சுத்தி பண்ணின கெந்தக மிருக்கு கடுதாசி. 1, கஸ்தூரி யிருக்கிற கடுதாசி, யிதில் பிர்தலாட்டமுண்டு.

அது எப்படி என்றால் .கத்தாழை மடல் புட்டி பொடியாய் அறுக்கிறது. ஒரு பாத்திரத்தில் அந்த ரசத்தை பிடித்து இளங்காய்ச்சலாய்க் காய்ச்சி நல்ல கட்டியாய்ப் போய்விடும். அதை உடைத்து ஏள்ப் பண்ணி கத்தாழை வேர் சாறு விட்டு அரைத்து சுக்கின காலுக்கு புசிஞல் அதுக்கு பேர் தக்கோமூரான் என்றும் பெயர். அந்த ஏழை சின்ன செம்பிலிச் கடாக் முட்டி புருக்கை அடைத்து அந்த புருக்கையைக் காய்ச்சி அதில் இதைப் போட்டு நிறைய உபாயமாய்ப் போட்டு சுருக்கு தைத்து காய வைத்து வைத்துக் கொண்டு இதை கஸ்தூரி என்று கடைக்காரர் கொடுப்பார்கள்.

கிளிஞ்சி ரசம் கால்படி, வெடியுப்பு அரைக்கால் படி, இந்த இரண்டையும் ஒரு சட்டியில் போட்டு மெள்ளத் தீ எரித்தால் தகடு தகடாய் ஆகும் அது ஒரு நிறை நவச்சாரம் ஒரு நிறை இது இரண்டையும் சேர்த்து குழிக் கல்லிலரைத்தால் சுக்கையே கபுட விபூதி போலே ஆகும். அதை பனியில் வைத்தால் இராக் காலத்தில் செய நீராகும். சவ்வீரம் வேண்டுமானது கொண்டு வந்து அதுக்குப் பூசி வெய்யிலில் இரண்டு நாள் அல்லது மூன்று வைத்தால் மெழுகு ஆகும். நல்ல இளந்த மெழுகாக விட்டு அதை எடுத்து ஒரு பரணியாகப் பட்ட பாத்திரத்தில் வைத்துக் கொண்டு ஒரு கிராகனிடை வெள்ளிக்கு ஒரு பணவிடை மெழுகு உருக்கு முகத்தில் வைத்தால் வெள்ளிக்கு வெங்காரம் வைத்து தண்ணீர் விட்டு உருக்கும் போது இந்த. மெழுகே கொடுத்தால் மாற்றுத் தங்கமாகும். இது கை கண்ட சித் இந்தப் படிக்கு செய்விச்சு புன்னைக் குடுகையில் போட்டிருக்கும் சிகப்பு நெடி முதக்க

வாலை ரசம் யிரண்டு பனிகுடுக்க யிருக்கிறது -1

சுத்தி செய்த ரசம் கலந்தப் புருட்டுக் குழிருக்கிறது -1.

கலங் கொம்பு படிய கடுதாசி -1
சுத்தி செய்த லிங்க நேர்வாளம் யிருக்கும் கருப்பு உள்ள முட்டை 1 சுத்தி செய்த சாதிலிங்க கடுதாசி.. 1 .வெள்ளை அழுக்குத் தனி கடுக்கா.1,.

தாம்பிர கசாயம் எப்பேர்ப்பட்ட வயிற்று வலிக்கும்:-

இரண்டு சட்டி வாயி சேர் மண் சட்டியாய் சம்பாதித்து ஒரு சட்டியிலே இரண்டு வெற்றிலை கொண்டு வந்து ஒரு வெற்றிலையிலே பிறத்தி நரம்பு பக்கத்தில் மூன்று வெள்ளையில் யெந்த வெள்ளையாவும் தடவி மற்றொரு வெற்றிலையில் பின் பக்கம் நல்ல காரமுள்ள சுண்ணாம்பு களி வெண்ணெய் ஒப்பந்தமா இருக்கிறதே தடவிலும் சரி அல்ல களிச்சிக்காய்ப் பிரமாணம் தனி தனியா கூ வெத்திலையின் பின்பக்கம் வைத்து ஒரு சட்டியில் வைத்து மேல் சட்டி மூடுகிறது அந்த உள் புகை வெளியே வராமல் சீலை மண் செய்து அடுப்பு மேலே வைத்து எரித்து எல்லாம் கருக்கி சாம்பலாய் விடும். அதின் பின்பு வாப்பாட்டுக்கு சுத்திய சீலை மண் எடுத்து மேல் சட்டியை வாங்கி கருக்கி சாம்பலா கண்ணு சிக்காமல் போயிருக்கும் சட்டியில். சீரகம் மூன்று விரற்கடை விரல் அகலம் பெரு விரல் அடியில் நிற்கத் மேல் தொள்ளி விரல். நிறைந்திருக்கும் சீரகம் எவ்வளவோ அவ்வளவு சீரகத்தை சட்டியில் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு அரைப்படி தண்ணீராகக் காய்ச்சி சீரகத்து புகை அடங்கிற வரையில் சட்டி மேல் மூடி அந்த பக்குவத்துக்கு இறக்கி கொடுத்தால் சகல வயிற்று வலியும் நிவர்த்தியாகும்.

கல்லுப்பு கட்டு பற்பம்:-

வேண்டுமான உப்பு எடுத்து நன்கு நொறுக்கி குப்பைமேனி சாறு விட்டு நல்ல சாந்து போலே அரைத்து திரட்டி வட்டோடு செய்து இதில் வைத்து அதின் மேலே ஒரு வாய் சேர்ந்த ஒடு மூடி சீலை மண் செய்து பசுவின் காஞ்ச யெரு மட்டை கொண்டு வந்து ஒரு முழக் குழி வெட்டி பாதி எருவடுக்கி இதின் மத்தியில் மருந்தின் பாத்திரத்தை வைத்து இதின் மேலே எருவடுக்கி முட்டியிலே தீ வைத்து காலமே வைத்தால் சாயந்திரம் சாயந்திரம் வைத்தால் காலமே புடத்தை எடுத்தால் அதில் கட்டியாய் இருக்கும். உடைத்தால் உடைபடாது. நிதானமாய் ப்பொடித்து ஒரு பாண்டத்தில் எடுத்து வைத்துக் கொண்டு அஜீரண முதலாகிய சகல வாய்வு தீரும். பக்க விரல், பெருவிரல், பிடித்தாலதில் எவ்வளவு வருதோ அவ்வளவு கம்மத் சோற்று தண்ணியில் போட்டு கலக்கி சாப்பிட்டால் நெஞ்செரிப்பு வயிற்று வலி அஜீரணம் புளியேப்பம் முதலாகிய மேல் எழுதியதெல்லாம் நிவர்த்தியாகும். பத்தியமில்லை.

வாய்வு பதார்த்தம் பித்தம் பிதற்றம், புளி புன்கயிலை இப்படியிருக்கும் பதார்த்தம் தவிர நெல்லுச் சோறு துவரப் பருப்பு நெய் மோரு தயிரு பால் இச்சாப்பாடு ஆகும்.

கல்லுப் பென்றும், கரியுப்பென்றும், லவண மென்றும் சொல்லப்பட்ட உப்பு கட்டு பற்பம்:-

கல்லுப்பு வேண்டுமானது கொண்டு வந்து கொடிவேலி தழைச் சார் விட்டு நல்ல மெழுகு போல் அரைத்து ஓட்டு மேலே ஒடு மூடி சீலை மண் செய்து புடத்தில் வைத்து எடுத்தால் கட்டியாய்ப் போகும். இதை உடைத்து நல்ல பொன் மயமாய் நொறுக்கி ஒரு பாண்டத்தில் வைத்துக் கொண்டால் இந்த பற்பம் பக்க விரலு பெரு விரலுங் கூட்டிலுள்ளதில் எவ்வளவு நிற்கிறதோ அவ்வளவு பெருங்காயம் சேர்த்து நீர்ச்சத் தண்ணியில் போட்டு கொடுக்கவும். அபஸ்மார குன்மத்துக்கு இது கொடுத்தால் சுகுவாகும்.

உப்பு செந்தூரம் செய்யும் விதம்:-

கல்லுப்பு வேண்டுமானது வாங்கி வந்து நாயுருவி தழைச் சாற் விட்டு அரைத்து ஓட்டில் வைத்து கீழோடு மேலோடு மூடி சீலை மண் செய்து புடத்தில் வைக்க செந்தூரமாகும். இது மலம் தளிச்சலுக்கு கொடுத்தால் மலத்தைக் கட்டும். இச்சா பத்தியம்.

கல்மதம்.1, கல்நார்.1, சூலந்தொம்பு.1, கற்பூர சலாசத்து.1, காரீயம்.1, ஜூபிப்பம்.5, சயம்.8, பிரிவு சயம்.614..

க்ஷயம் 8, பற்பம் பவள பற்பம்:-

வேண்டுமான பவளம் அல்லது பவழத்தில் உதிர்ந்து நெருங்கி யிருந்த பொடியாய் இருந்தாலும் சரி கொண்டு வந்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு 60 நாழிகை ஊற வைத்தால் வெளுப்பாகும். அதை சுரண்டி எடுத்து தொட்டியி நடயம விட்டு வடிக்காம எடுத்து கீழ்காய் நெல்லி மூலங் கொண்டு வந்து நன்றாக சாந்து போலே அரைத்து இரண்டு வட்டோடு பண்ணி ஒரு ஓட்டில் தப்பட்டையாய் ஒரு விரல் மந்தத்துக்கு வைத்து நடுவே குழி பண்ணி அதில் இந்த பவளத்தை வைத்து மேலே விரல் மந்தம் கீழ்காயி நெல்லி சந்தே வைத்து பொருத்தி மேல் வட்டோடு மூடி யேழு சீலை மண் செய்து ஒரு முழக் குழி வெட்டி பாதிக் குழியில் எரு வடுக்கி அதின் மேல் வட்டோடு வைத்து மேலே எரு வைக்கொட்டி முட்டையின் மேல் அக்கினி வைத்து சிவ கணபதி சிவ சுப்பரமண்யர் வாலை புவனே திரி புர வருக்கி நாதனில் பொதிய மாமுனி யிவாளை தியானம் செய்து அல்லது விநாக பசை செய்து இந்த காரியங்கள் நடப்பி வைக்கிறது. எடுக்கும் நடப்பி வைக்கிறது. புடம் ஆறி எடுத்து பார்க்கும் போது பூரண சந்திரனுடைய நிறமாய் இருக்கும். பற்பத்தை குழி அம்மியிலே போட்டு நேக அரைத்து வஸ்திர காயம் செய்து நசுக்கி ஒரு கடுதாசி அல்லது ஒரு பாத்திரம் சிமிழியில் வைத்துக் கொண்டு ஒரு நேரம் ஒரு நெல்லிடைப் பிரமாணம் கொம்புத் தேனில் போட்டு ஒரு பட்டிடை தேன் அளிசத்துக்குக் கொடுத்து இரண்டு நேரமும் சாப்பிட்டு வரும் ஒரு நோயாளிக்குப் பத்தியமாகு முறை முருங்கைப் பிஞ்சு யீக்கியைப் போலிருக்கும் பிஞ்சைக் கொண்டு வந்து நறுக்கிப் பாதி வெந்த பிறகு சலமிறுத்து அதில் மிளகாய் கடுகு வெள்ள வெங்காயம் பெருங்காயம் இது தவிர மற்ற சம்பாரம் பொரித்து அரைத்துப் போட்டுப் பொரியல்க் குழம்பு செய்து காரம் உப்பு சங்கிலே போட்டுச் சட்டியில் வருத்துப் போட்டுக் கொள்ளவும்.

அகத்திப் பிஞ்சு முருங்கைக் கொழுந்து கத்தரிமுட்டப் பிஞ்சு அவரை வாழைப் பிஞ்சு மேல்தோல் வாங்கி நார் வராத தான் இருக்கத் தகுந்த பிஞ்சைச் செதுக்கிக் கொள்ளவும். புடலங்காய் அரைப் பிஞ்சு பீர்க்கன் காய் கூடாது. பழைய புளி 2-ல் 3 சுட்டுக் கரைத்து ரசஞ் செய்யலாம். அப்பிங்கனம் செய்து கொண்டால் அன்றைய தினம் மருந்து இரண்டு நேரமும் நிறுத்திப் போட வேண்டும். பெண் மோக மாகாது.

நெல்லுச் சோறு அவ்ரைப் பருப்பில் வருத்த பருப்பு உள் மூள போட்டதாயிருந்தால் பருப்பை வருத்துக் கொள்ள வேண்டும். பசுவின் நெய், மோர், தயிர் கால் மண்டலம் அரை மண்டலம் இதற்குள்ளாகச் செய்தால் கேட்கும்.

மேகத்துக்கு வெள்ள வெங்க பற்பம் செய்யும் விதம்:-

வெள்ள வெங்காயம் வேண்டுமானது கொண்டு வந்து ஒரு சட்டியிலே போட்டு அடுப்பு மேலே வைத்து செண்பகுருவி பச்சைக் கோல் கொண்டு வந்து கத்தை கத்தையாய் கட்டி நாலஞ்சு கத்தையைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு அடுப்பு மேலிருக்கும் வங்கத்தை அவரை அவரை பொடி இதுகளை சட்டியில் போட்டு வருத்தெடுத்தா வெப்படியே அப்படிக்கு இந்த நாயெரிஞ்சி கத்தைக் போல் தீபத்திலாவது அலாவ சடப்புட என்கிற சத்தமாய்க் காணும். இந்த சத்தம் அடங்கும் வரைக்கு துழாவி வர வேண்டும். சத்தம் அடங்கினால் துழாவி நிறுத்தி ஆற விட்டு ஒரு யெனத்தில் சீலை வேடு கட்டி அதில் போட்டு வஸ்திர காயம் பண்ணி மண் கொஞ் சஞ்ச மிருந்தால் அதை தள்ளிப் போட்டு அந்த பற்பத்தை ஒரு பாத்திரத்தில் பத்திரப் படுத்தி வைத்துக் கொள்ளவும். இதுக்கு சோதினை ஒரு செம்பிலே சலங் கொண்டு வந்து நிறைய வைத்து ஒரு கொள்ளத்தி உடன் பற்பத்தை மேலே தூவினால் மாசி போலே பரவும். அதின் மேலே வீசம்படி கொள்ளுப் போட்டால் இந்த வீசம்படி கொள்ளும் ஒவ்வொரு கொள்ளாப் போட்டால் அதைத் தாங்கும் இந்தப் படிக்கு தாங்கினால் பற்பம் கை கண்ட சித்தி.

மேக ரோகாரருக்கு நேரம். 1, கால் பணவிடை பிரமாணம் நித்தம் கொம்பு தேனில் சாப்பிட்டு வருகிறது. இதுக்கு மேல் சுக்கு பவள பற்பத்துக்கு சொல்லிய இச்சா

பத்தியம் சிவகாடை ஒன்றேனே புலாவில் சேர்த்தக கொள்ளலாம்.

<u>வேதாந்த சாரம்:- திருமூலர் பாடல்:-</u>

பத்தைப் பெருகும் புலி யானை பனிரெண்டு
மிக்கவர் நால்வர் விஜயகரை வர்
த்தவர் மூவர் முதலே மருந்தவன்
வித்தை யரிந்தவன் குருவாமே.

நாதகிருப்பது நடு மண்டலத்திலே
நாதாங்கி போடாமல் நாலாம் வீடு
நாதாங்கி பூட்டி நலந்தோடிருந்த
வேதாவி நா உள வீடு உலயாமே.

கொள்ளு காடி கொமுட்டிக்காய் கோழி பன்றி செம்புளியும்
முள்ளங்கி பெரிய பாகற்காய் முழு நல்ல பூசனிக்காய்
கிர்ரக் கீரை அரைக்கீரை கிடங்கில் படரும் செம்புடனே
யென்னத் தினை நீர் சிற்பீரால் யெல்லா மருந்து இழந்தீரே.

மாங்காய் இளநீர் வாழைக்காய் மரப் பண்டம் புளி கடுகு சுக்கு
தேங்காயி மேதை நெய் பாவற்கள் வெங்காயம் பெருங்காயம்
தீக்கா மோகம் அவரியும் நேசம் பயிற்று சர பானம்
வாங்காதிவ களவெல்லாவு அருக்காதிருக்க மருந்தாமே.

மாதுர் கேளீர் அவுஷதங்கள் வருந்தி யருந்தி மனிதருக்கு
காலில் வாழ முயலடும்பு காடை செல்ல கௌதாரி
கடுகு பெருத்த வெள்ளாட்டு உப்பு கண்டம் செம்பிலு
மீனே கிழும் தின்பீரால் கிருய் மருந்து யிழந்தீரே.

<u>அமுர்த சர்க்கரை செய்யும் விதம்.</u>

பசுவின் பால் பச்சைப் பால் வாங்கி ஒரு சட்டியில் ஒரு படி பால் விட்டு நல்ல குருகக் காய்ச்சி ~~மொசுமொசுக்கை~~ முசுமுசுக்கை வேர் ஒரு வேர் உள்ளே போட்டுஇரும்பு கரண்டி போட்டு சும்மா பிரட்டினால் சர்க்கரையாய்ப் போகும். இந்த சர்க்கரையில் மொந்த வாழைப் பழம் சேர்த்து ஒரு பாண்டத்தில் போட்டு ஒரு மடிப்புத் துணி போட்டு வேடு கட்டி பனி யிலே வைத்து காலமே யெடுத்து பரு விரல் பருமம் பழம் மூன்று விரல் கனட அகலத்துக்கு கீழ் பெருவிரலில் நின்றால் மேல் அகல யெவ்வளவோ அவ்வளவு சர்க்கரை எடுத்து சாப்பிட்டால் காலமே ஒரு நேரம் சேத்தி வந்தால் இதுக்கு தீரும் வியாதி உள்ச் சுரம் உள்க் காச்சல் உள் சிகை காந்தல் கெர்ப்ப ருடு இப்படி யிருகிற காங்ள தீரும். இது பத்தியமில்லை. முக்கியமான வர்ய்வு பதார்த்த பித்த பதார்த்தம் தள்ள வழி.

<u>சீந்தி சர்க்கரை பண்ணும் விதம்:-</u>

சீந்தி கொடி நல்ல மஞ்சள் நிறம் போலே வளைந்து திரண்டு இருக்கும் அடி மண்ணுக்குள் இருக்கும் வேரை கொண்டு வந்து மேல் தோலி எடுத்துப் போட்டு அடியில் பச்சப்பு இருக்கும். அது ~~நன்றா~~ நன்றாக சீவி யெடுத்துப் போட்டு உரலில் போட்டு நொறுங்க யிடித்து ஒரு பாண்டத்தல் போட்டு ஒரு குடம் தண்ணீர் விட்டு மத்துப் போட்டு கடைந்து மேலே நுரை வரும். அந்த நுரையை யெல்லாம் யெடுத்து யெறிந்து போட்டு பிறகு அந்த சர்க்கை யெல்லாம் எடுத்து எரிந்து போட்டு தண்ணீர் குடுகின திணம் பார்த்து ஒரு வள்ள மணல் கொண்டு வந்து பரப்பி அடியில் தண்ணீர் கலந்து இருக்கு ஒத்தச் சேரை தண்ணீர் இருக்கும் போது ரட்டை மடிப்புத் துணியை நொய் மணல் கரை கட்டி குழி பண்ணி அதில் துணி போட்டு அதில் பாலேனையக மூந்திறல் அந்த துணியில் சீந்தி சர்க்கரை நிற்கும். இது யோக புஷ்டி நன்றாய் விளைந்தாலெப்படியோ அப்படி யாகும். அதை எந்த மருந்துக்கு சேர்த்துக் கொள்ள வேண்டுமோ அதுக்கு சேர்த்தவாம் நல்ல காய விட்டு எடுத்து கடுதாசில் வைத்துக் கொள்ளலாம்.

சீந்தி சர்க்கரை இன்னொரு விதம் செய்யும் முறை:-

சீந்தி கொடி நன்றாய் மஞ்சள் நிறமாயிருக்கும் அடி வேரை ஒரு சுமை கொண்டு வந்து அதை இரண்டு விரல் கடையாய் நறுக்கி மேல் தோல் உள் பசை யெடுத்துப் போட்டு ஒரு கண்டத்தை நாலா ஐந்தாய் கிழித்து நன்றாய் காய வைத்து உரலில் போட்டு இடித்து நரம்பெல்லாம் யெடுத்துப் போட்டு ஈரவஸ்திர காயம் பண்ணி ஒரு படி மாவுக்கு ஒரு வள்ள பச்சை சலம் விட்டு இந்தப்படி ஒரு நாள் சலம் விட்டு மறு நாள் வடித்து அப்பவே புதுச் சலம் விட்டு மறு நாள் வடித்து இப்படி பத்து முறை வடித்து 11-வது நாள் கைக்கோளன் காடி கொண்டு வந்து ஒரு வள்ளம் விட்டு ஊற வைத்து வடித்து 12 நாள் எருமை மோர் விட்டு ஊறப் போட்டு 13 நாள் பசுவின் பால் ஒரு படி கொண்டு வந்து அதை பக்கம் வைத்துக் கொண்டு நன்றாய் நொய் மணலா இரண்டு வள்ளம் மணல் கொண்டு வந்து பரப்பி கொஞ்சம் குளி பண்ணி இரட்டை மடிப்புச் சீலை மேலே போட்டு இதை அதில் ஊத்தி நல் யிஞ்ச விட்டு ஒரு காலே சட்டி சம்பாதிச்சு அதில் யிதை யெடுத்து தகடு தகடா யெடுத்து வைத்து பச்சை பசுவின் பால் விட்டு பிசைந்து முள்ளிக்காய் பிரமாணம் அந்த சாத்தில் பிடி வைத்து நிழலில் காய வைத்து நறுக்கி வஸ்திரப் பருத்தி வைத்து யெண்ணை லேகியம் கிருதம் கசாயம் வேண்டுவதோ அதற்கு சேர்த்துக் கொள்ளலாம்.

வாத சுரத்தின் குணம்:-

உளைவு முடம்பு தனிலெங்கு முளையாதிருக்கு முடப்புகளையும். களைவு மிருந்து வயிறுளத்தும் கனக்கரந்து வாய் நீரும் விளைவு வெப்புத் தானுண்டாம். விடாதே யிருந்தா கனக்கும். வளையும் பிருவதும் தழளே வளமாம் வாத குணமிதுவே.

இதுக்கு மருந்து:-

வெங்காயப் பருப்பு பலம்.6, சுக்கு பலம்.1, மிளகு பலம்.1, திப்பிலி பலம்.1, இந்துப்பு பலம்.1, கொடிவேலி வேர் பலம்.1, நிலவாகை வேர் பலம்.1 கத்தாளை வேர்சாறு படி.1, ஆக 8 வகையும் கொண்டு வந்து ஒரு வள்ள சலம் விட்டு பாகு போல் ஆன பிறகு கசாயத்தில் சுக்கு, மிளகு, திப்பிலி வாய்விளங்கம், சித்தரத்தை இந்த 5 வகையும் 5 கட்டெடை வாங்கி வந்து வறுத்து பொடி செய்து பசுவின் நெய்யில் சேர்க்கை பண்ணி கசாயத்தில் போட்டு மகா புரளதி லேகியம் செய்யும் விதம்.

நொட்டிச் சிந்து யிசை:-

~~சிந்~~ சித்தர்கள் மகு மாக்கள் சொன்ன நொண்டிச்
சிந்தையு மகிழ்ந்து செய்ய செப்புகிறேன் கேளும்

அத்தி முகனரு நினையைப் போற்றி வாலை யருமுகன் சிவகாமி, அம்பிகையையே வாழ்த்தி 2 பத்தமுடன் மனதை பழு புட்டி யிவர் பாதமதை கெவுனத்தில் சிலசிதக் கூட்டி 3 புத்தியுடன் மகா புரளதி செய்யும் புலவர்களே புகலுகிறேன் பூமியில் மூலிகையே 4. ஆக தருவு.1 காரணமாம்.

வில்லி வேர், சீந்திக் தண்டு கனமான ஆடாதோடை காஞ்சொரியும் வேர்.5, தாரணக் கதலிக் கிழங்குச் சாறு நல்ல தாழை விழுதுடனே சந்தனக் கட்டை யின் தூள்.6, வாரணமாம் அஸ்வ கெந்தி வேரும் பின்பு வளவான சாதிவிளை நிலப் பனைக் கிழங்கும் 7 யாரும் சந்தேகம் வேண்டாங் காணச் சொன்னேன் நல்ல அருகு விலாமிச்சி வந்த பலம் வேரும் 8 தருவு உ வகைக்கோவ்வொரு பலங்கள் கூட்டி நல்ல வன்மையுடனே சீவி யிடித்தே பானையில் போட்டு 9 கிகைக்கொண்டு நாழி சலம் விட்டு தீயை திவ்யமிதாமாயெரித்து நாலு படியாக்கி 10 (நொண்டி லேகியம்).

வகையுடன் பாண்டத்தில் வார்த்து அதில் வாகுடனே பால் படியும் வஸ்தை வொரு படியும் 11 பகையாமல் நாலு பல சர்க்கரையும் போட்டு பாகு பதங் கண்டவுடன் பண்புடனே கேளும் 12 ஆக தருவு. 3 விக்சிற; கண்ட மருந்து தானும் அதில் விழுவதை

புகல்கிறேன். விபரமாக 13 சுக்குடன் இரும்பு சாதிக்காயும் நல்ல சொகுசான சித்தரத்தை
இரும்பு சாதிக்காயும் நல்ல சொகுசான சித்தரத்தை வால்மிளகு, கோஷ்டம். 14,
அக்கிருக் காரம், சடாமாஞ்சி, மிளகு, அதிமதுரந் தாளிசை பத்திரியும், வாங்கி 15
பக்குவமுடன் கசகசாவு நெல்லிப் பருப்பு வுக்கிறமுள்ள லவங்க பத்திரியும். 16,
ஆக தருவு 4 சிந்தையும் மகிழ்ந்து சரக் கெல்லாம் வகை வகையாய் செம்மையுள்ள வனி மருந்
தோர் பலமும் வாங்க 17 விந்தையுடனே யிடி நிற்க மற்ற விதமாய் சரக்குகளெல்லாம்
மூ வறுப்பாய் வாட்டி 8 முந்தின மருந்துக் கரைவாசி கோற கற்பம் மூர்க்கமுடனே
நிறுத்து சேர்க்கு வகையாக 19 பந்முடன் அம்பலியிலே வேக வைத்து யெடுத்தானே பதமாய்
வருத்தெடுத்த பாங்குடனே சேர்த்து 20 ஆக தரு. 5.

வைத்திய நொண்டி.

சேரு நீ மருந்து வகையெல்லாம் கசாயத்தில் திறமாக வேக வைத்து
தேன்படி யொன்று —வாரு நீ ஒரு படி நெய்யும் விட்டு வாக யடுப்பேத்தி வன்மையுடனே
தான் ~~212~~ ஆராதாரப் பொருள் போற்றி நல்ல அன்புடனே பதங் கண்டு யின்பமுடன் ~~213~~
காராணை முகவாணை வாழ்த்தி நல்ல கருத்தினில் யீஸ்பரியை யென்னும் போற்றி ~~214~~
ஆக தருவு 6 சீராக பணவிடை கொண்டால் திரேகத்தில் தினவு சிறு சிரங்கு மூலச் சூடதவும்
~~215~~ பாரா யெரிச்சலுங் கிராணி பெரும் பாடும் புகைச்சலும் குத்திருமலுந் தீரும். ~~216~~ தீராத
மூலக் கடுப்பதவும் ரத்தம் சீய் விழுதல் நீரழிவு வெள்ளைப் போக்காட்டும் ~~217~~ தேராத
உள் சுரமுங் கணையும் தாது விர்த்தி செப்பமுடன் துடியாக உரப்ப நமாதாகு ~~218~~
ஆக தருவு 7 பின்டத்தில் எரி அனமேகங்கள் மயக்கும் பேச்சொரியாதாச்சயந்தள் காச்சலு
தீரும். ~~219~~ குண்டல் கராத்திலுள்ள சூடும் அதில் குனெல்டைகள் செய்து வரும் குமுறு வாகும். 30

மண்டலத்திலுள்ள சனங்களுக்கு வரும் வயிற்றுவலி குடைச்சல் வாய்வு உபத்திரமும்
~~311~~ கண்டதொரு வாத பித்தம் சுரம் இதில் கலந்து தொந்தங்கள் செய்து கனரேகந் தீர்ந்து
~~312~~ ஆக தருவு. 8.

அழகு சவுந்திரியந் தோன்றும் நல்ல அழகான மன்மதனைப் போலவுமிருக்கும். இளமை
யதான வயதோர்க்கும் நல்ல யெளவனமாகிய பெருக்குந் துடியாம். ~~314~~ தளர்ந்த பிராயக்
காரருக்கும் சாதிச் சால சவுக்கியமுந் திராணி தாவடடிகந் தோற்று ~~315~~ கிழவரும் இதை
உண்டு வந்தால் நன்றும் கிருபையுடனே உண்டு. பால் நெய்யும் சேர்த்தால் ~~316~~ ஆக தருவு. 9,
விந்து நஷ்டமாக யிருப்போர்க்கு லேகியம் விரும்பி அனுசரித்து விதமுடனருந்த ~~317~~ தந்திரம
தாமந்திரேகம் நல்ல சொகுசுடனே இருக்கும் சூடுகள் தீரும் ~~318~~ பந்தமுள்ள ஸ்திரிகளைக்
கண்டால் ஒரு கை பார்க்கலாமென்று யென்னி கீரிடிக்கத் தோற்றும் ~~319~~ இந்த விதமாய்
நடத்தி வைக்கும் யிதை யியல்புடனே உண்டு யின்பமுற்று இருப்போர் ~~410~~ ஆக தருவு 10
யாருக்கும் பால், தயிர் நெய்யும் சாப்பாடு பரிவுடனே கொள் மிகுதியாக ~~411~~ நேராக
போகத்தை வேண்டும். அனுசரிதை நித்திய மருசரித்தால் நிலமையதாக ~~412~~ பேரா மகா
பூரகுதி லேகியத்தை பிரியமுடனெடுத்து அறிவாய்க் கொண்டால் ~~413~~ தாவலகி லானந்தத்தீரும்.
உண்போர்க்கு சக்தியில் விக்கினங்கள் தீருமென்றே. ~~414~~ ஆக தருவு 11 முற்றும்.

அகவல்: -

பரங்கிப் பட்டை பருத்திக் கொட்டை சரக்குடனிருந்து சரியாய் வருத்த
புதியாய்ப் புடித்து புங்கொள்ளை விட்டு சுடு நீர் விட்டு குறைம் போட்டு அதக்கே பாதி
அமுற விழுதி மலவு கொஞ்சம் வஸ்த்து விட்டு கடுகொரு புடியும் கஞ்சாப் பொடியும்
புடமது வைத்த புத்தில் புதைத்து ஒரு வார முதல் உள்ளே பதங்கம் மறு வாரத்தில் வகையாய்
எடுத்து ~~215~~ எருமைச் சாணி இடு மருதாணி மருமத வயல்குள் சாரது வார்த்து
சர்க்கரை சேர்த்து ஆறப் பொருந்து அத்தையு நிறுத்து நரையா ஜேடா நாய்ப் பின்னை
கீரி குரி காடாந்தை குயில் வல்லூந்தை யிரி புலிக்காகம். இரு தலை நாகம் வளி
முயலோந்தி வள கொல்டலைத்தி களி பரிகாடை சுழு உடனுரை கிரியன் விலாங்கு விரித்தே வாங்கு.

சிட்டுக் குருவி செடி மரப்புவு ஒட்டுப்பூச்சி ஓன் நமுங்கு

கெருடன் வாலருகி கிளி மீன்குரு பெருக் கொசு கெச்சம் பிறந்தட நெஞ்சம்

கீரியின் பிச்சு கிரியுட நெஞ்சம் வாரியி லேரையும் வலியான் பிச்சு
கரிக் குருவிரட்டை காட திரட்டை குரியாங் கான குவியது புறுவும்
வருத்துக் கரிக்கி மையில் நெரித்து நாக்கி நொறுக்கி நசிக்கிப் பிசிக்கி 35
அரைத்து வசுத்த அவிச்சுக் குவிச்சு இருந்து நிசந்த இடை குறையாமல்

பிச்சுகளெடுத்து பெய் தண்ணி விட்டு மெச்செனக் காச்சி மிக மிரப்பச்சி
மரக்கடை விட்டை மரா மரப் பட்டை மக்குட நெச்சம் கோட்டா நெச்சம்
குதிரைக் கந்தம் முள்ள நரி நத்தம் கரு வாரி ஈரல் காட்டிடும் பெச்சம்
ஒட்டன் கைப்புபுடம் ஓயீரல் சட்டப் புனை தன்னுட நெஞ்சம். 4,
புகுட் சட்டம் போட்டொரு வட்டம் தருவிய அரனை தன்னுட நலி வால்
இது வெல்லாஞ் சேர்த்து யிரக்கியே தயிலம் பரமாக மாக பதங்கமே செய்து
சூரணப் பொடிகள் குட்ச லேகியங்கள் ஒரிடமாக ஒரு முகப்படுத்தி
பண்டி தக்கலவைப் பாத்திரத்திட்டு நெண்டிய குளவி நெருக்கியே அரைத்து
பக்குவம் வந்த பக்குவம் தெரிந்து சிக்கென யெடுத்து சிமிழில் அடைத்து
முருகனைத் தானே சிந்தையில் நினைத்து தவமது வாக மாலமுஞ் செய்து
வீட்டை மெழுகி மேன்மையதாக ஆடை தரித்து அரனை நினைந்து

மஞ்சளில் விநாயகனை வல்லமையுடனே அஞ்சலி செய்து அருகது குட்டி
நீறது பசி நிலமை சந்தனமும் வாரியே கந்தகளபமு மணிந்து
மல்லிகை முலை மருகு செவந்தி நல்ல தும்பைப் பூ.5
அர்ச்சினை செய்து அவிர் சிதம் வைத்து பச்சமதாக பகவானை வேண்டி
கணபதியான கர்த்தாவுக்கு குணமதாய்ப் பூசைக் குறிப்பு நைவேத்தியம்
வெத்திலை பாக்கு வியப்பு சாம்பிராணி சுத்தம தாயி தூப தூட தீபங்கள்
கடைய வுல சீனி கடலை பொரியும் திடமது வான தேங்காய் இளநீர்
சர்க்கரை பழமும் தனி மாம்பழமும் விக்கினேசர்பரருக்கு விசமாய்ப் படைத்து
வடை பணியாரம் வாகுடன் தோசை இடையில்லாமல் எள்ளுருண்டை
சோடச உபசாரந் துதி செய்து நீடிய தூப தீப நடத்தி
நிவேத்தியம் வைத்து நீருவிழாவி பர்வமது நங்கி பவுஊசதைத் தருக

வேணுமே யென்று விபரமதாக நாணயமாக நலமதாய்ப் பணிந்து
நிவேத்தியம் வைத்து நிறைவேறிய பின் தவத்திலுல் வந்த தாஉஷ்டிக புருஉசன்
மையல் மிகுந்து மனையது தேடி தையலிடத்தில் சஞ்சரித்தவர்க்கு
பையவே பேசி பசப்பியே போகம் செய்ய பின் தாங்கி தெளியு முன்னவர்க்கு
உண்டையை யெடுத்து உபாயமாய்த் தானே மண்டையில் தேய்த்து வகையுடன் தேய்த்து
சிண்டியிலிட்டு தேனுடன் சேர்த்து பண்டு பலாதிகள் பகைகாரத்திடல்
பாலிலே ஒரு நாள் பழத்திலே ஒரு நாள் மாலையில் சேர்த்து மத்தியில் தேய்த்து
வெத்திலை மடிப்பில் விரகத் தடிப்பில் எத்தியே விட்டால் இதையறிவாரே.
மகா.ராஜ பூபதி மன்னவருகிலும் அகலாம லெப்போதும் அனைந்திருப்பானே
சென்ன முருளாவும் சிந்தையில் வைத்து கனமதா யிஉட்டங் களித்திருமனே
இறையவன் வாழி ஈசுபரன் ரவியும் திரும் ஈசுபரி வாழி.
உலகத்திலுள்ள உம்பர்கள் தேவர் வாழி நலமுடன் எல்லோர் நலங்காமல் வாழி.

******

முற்றும்

*****

எழுதியவர்: அ குப்புச்சாமிப் புலவன்.

சு;ச.:

Compared & Verified
Sundaram... 30/8/63

Part II

தேதி:-
புத்தகத்தின் பெயர்:- வைத்திய அட்டவணை:
எழுதியவர்:
எடுக்கப்பட்ட இடம்:- எச்.எம்.

***

முத்தைக் கட்ட:-

பாதிரி

பாதிரியின் வேர் ப்பட்டையை நையத் தட்டி ஒரு குகையில் போட்டு மேலே ரசத்தை விட்டு அதன் மேல் இந்தப் பட்டையை வைத்து மேல் சில்லிட்டு சீலை மண் செய்து குக்குடப் புடம் போட மணி யிருகிக் கட்டும்.

நாய்வேளை பற்பம்:-

நாய்வேளை சமூலங் கொண்டு வந்து நசுக்கி நிழலுலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொண்டு இப்பொடியை வெருகடியின் அளவு கொள்ள உடம்பு பருக்கும். இப் பொடியை தேனில் குழைத்துக் கொள்ள உடம்பு மெலியும். பொடியை வெண்ணெயிலிட்டுக் காய்ச்சி நெய்யை நக்க நாத விருத்தியுண்டாகும். இப்பொடியைத் தேனிலும் திப்பிலி சூரணம் கொள்ள இருமல் தீரும். இவை வெந்நீரில் கொள்ள பித்தம் தீரும். காராட்டுக் கோமயத்தில் கொள்ள குப்பைதீரும். மோரில் கொள்ள பாண்டு தீரும். தயிரில் கொள்ள எலிகடி தீரும். கோமயத்தில் கொள்ள சில விஷந் தீரும். காடியில் கொள்ள உடம்பு எரிவு தீரும். இள வெந்நீரில் கொள்ளவும். மேலுக்கு பசவும் முதலை கடி தீரும். உப்பிலிய சாற்றுடன் கொள்ள ஆண் கட்டு தீரும். இள வெந்நீரில் கொள்ள சுரம் தீரும். பாலில் கொள்ள சுக்கில பிரமேகம் தீரும். வேப்பன் இலைச் சாற்றில் கொள்ள அழுவை தீரும். புளியிலைச் சாற்றில் கொள்ள மன்மம் தீரும். காடியில் கொள்ள சூலை தீரும். வெற்றிலையில் கொள்ள வயிற்று வலி தீரும். பனை வெல்லத்தில் கொள்ள பெரும்பாடு தீரும். விளாம்பி இலைச் சாற்றில் கொள்ள பிள்ளை பெருவாள். காராட்டுக கோமயத்தில் கொள்ள எலி கடி தீரும். ஆடு தின்னாப் பாளை சாற்றில் கொள்ள முலைப் பால் சுரக்கும்.

சலக் கண்ட மாலைக்குக் கசாயம்:-

சித்திர மூலம் பலம் ஒன்று அரைத்து நல்ல வெல்லம் பலம் இரண்டு நெல் அரிசி மாவு பலம் மூன்று இந்த மூன்று வகையும் ஒன்றாய்ப் பிசைந்து பசுவின் நெய்யில் கச்சாயம் சுட்டு அந்தி சந்தி வேளைக்கு ஒரு கச்சாயம் தின்னவும். இவ்விதம் பத்தியம் புளிப்பு, கிரந்தி பண்டம் ஆகாது.

மேக நாதப்பிரயோகக் குளிகை:-

சாதிலிங்கம், வெங்காரம், இந்துப்பு, ஓமம், சுக்கு, மிளகு, கடுக்காய் தானிக்காய், வசம்பு, பெருங்காயம், வாய்விளங்கம், குரோசாணி ஓமம், சித்தாமுட்டி வேர்ப் பட்டை இது வெல்லாஞ் சரி நிறையும் நேர்வாளம் சுத்தி செய்த பருப்பு ஒரு நிறையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச் சாற்றில் நன்றாய் அரைத்து மெழுகு பதத்தில் கடலைப் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி சிமிழிலடைத்து வைத்துக் கொள்ளவும். தீரும் வியாதிகள் சுகபேதிக்கு நல்ல வெல்லத்திலாவது பனை வெல்லத்திலாவது கொடுக்கவும். இதற்கு மிளகுநீர் பசுவின் மோர் கொடுக்கவும். பஞ்சு குன்மத்திற்கு நொச்சியிலைச் சாற்றிலிடவும். இதற்கு பசுவின் பால் கூட்டவும். மாலையில் சீரக கசாயத்திலிடவும். சேத்துமத்துக்கு ஆவின் பாலில் ஒரு குளிகையிடவும். இவ்விதம் ஏழு நாள் காலையில் கொடுக்கவும். பத்தியம் பசுவின் மோருஞ் சோறும் தின்னவும். தலை சுற்றுகிற பித்தத்துக்கு மாதளம் பழச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் தயிர் சாதம் சாப்பிடவும். வாத குன்மத்துக்கும் வாய்வுக்கும் வயறு ஊளைக்கும் வெகுவாய் மிடக்கிறதற்கும் வாயில் வெண்ணுரை எடுக்கிறதற்கும் கை கால் அசந்து போகிறதற்கும் வாயில் நீர் வருவதற்கும் ஓரிலைத் தாமரைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் மோருஞ் சோறுண்ணவும். உள்ளங் கால், உள்ளங் கை கண் உச்சந் தலை, மண்டி எரிவு இவைகளுக்கு ந

நெல்லிப் பருப்பு கசாயத்தில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் மோருஞ் சோறுண்ணவும். பயித்திய குன்மத்துக்குத் தொண்டைக் குழி மட்டும் எரியும் நடக்க வொட்டாது. கழுத்து சோர்ந்து வரும். இதற்கு ஆர் முருங்கைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் பசுவின் பாலுஞ் சோறுண்ணவும்.

<u>சர்வாங்க வாதத்திற்கு அதன் குணமும் மருந்தும்</u>:-

சரீர மெங்கும் மடைச்சலாயிருக்கும். வாய்வு முறிக்கும். மனதில் கவலையா யிருக்கும். எதை யுண்டாலும் ஆரோக்கிய மிராது. இதற்கு முருங்கை வேர்ச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் தயிர் சாதம் உண்ணவும்.

<u>சேத்தும குன்மத்தின் குணம்</u>:-

பசியில்லாமல் வயிறு கல்லு போலிருக்கும். பசி தீபனமில்லை. பிருவாயிருக்கும். சரீர மெல்லாம் உப்பிசமாயிருக்கும். இதற்கு வென்னீரில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் தயிர் சோறுண்ணவும்.

<u>சத்தி குன்மத்தின் குணம்</u>:-

அசனம் பண்ணினால் வாந்தி பண்ணும். இதற்கு செண்பக மரத்துப் பட்டைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் தயிர் சாதம் சாப்பிடவும். பலவகை பித்தத்திற்கும் நான்கு வகை பயித்தியத்திற்கும் நெஞ்சு உப்பிசம் எடுக்கவும் நெஞ்சு குலையும் எரியும். இதற்கு வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் நொய்யரிசியை பாலில் பாலில் காய்ச்சிக் கொடுக்கவும். மலசலம் கட்டிக் கொண்டு வயிறு உப்பிசமாயிருந்தால் முருங்கை வேர்ப் பட்டைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் மோருஞ் சாத முண்ணவும். ஒரு குளிகையில் பாதி அசோக யிலை அதாவது புன்னைக்குப் பூடுச் சாற்றில் உரைத்து நாசியில் ஊற்றவும். சும்மா விகாரம் பிறந்தால் பிள்ளை பெருத பெண்ணை ஒடுகிற தண்ணீர் எடுத்து வந்து புது மணல் கொண்டு வரச் சொல்லி சட்டியிலிட்டு அடுப்பில் வைத்து நெருப்பு போல் வறுத்து அதில் அந்தத் தண்ணீரை வார்த்து வடித்துக் கொண்டு அதில் ஒரு குளிகை கொடுக்கவும். கொடுக்கும் போது சீரகம் வறுத்துத் தூள் செய்து முன்னீரில் கலக்கிக் கொடுக்கவும்.

இவைகளை சாப்பிட்ட பிறகு மல்லாந்து படுத்துக் கொள்ளவும். எருமைத் தயிரை யாவது எருமை எரு முட்டையாவது தூள் செய்து தொப்புளில் போட உடனே குணமாகும். எண்பத்திநாலு வாதத்திற்கும் சீவு மாதளம் பழச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். மேல் கண்ட இரண்டு வகைக்கும் பத்தியம் தயிருஞ் சாதம் உண்ணவும்.

<u>மருந்தீட்டின் குணம்</u>:-

உடம்பு வெளுத்திருக்கும். என்ன உண்டாலும் வாந்தி பண்ண வரும். வாயில் வெள்ளுரையாய் நீர் வரும். இதற்கு சாரணை சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் பாலுஞ் சோறுண்ணவும். நேரம் தப்பி அசனம் செய்த பேர்களுக்கு தண்ணீர் தாக முண்டாகும். தண்ணீர் சாப்பிட்டால் வயிற்றில் கொண்டை விழும். அதற்கு வென்னீரில் சுக்கு பொடித்துப் போட்டு ஒரு குளிகை கொடுத்தால் உடனே குணமாகும்.

<u>பஞ்ச மூலத்தில் வந்த தோஷத்திற்கு குணம்</u>:-

உமிழ்ந்தால் கட்டி கட்டியாய் விழும். அடி வயிறு கல் போலிருக்கும். இதற்கு எருக்கம் பழுப்புச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். வெள்ளாட்டுப் பால் விட்டுக் கொள்ளவும். இது தான் பத்தியம்.

<u>கண்ணீர் பாய்ச்சலுக்கு</u>:-

வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒரு குளிகையை உரைத்துக் கண்ணிலிடப் போம். காதில் வெளிச்சிக்கு: எருக்கம் பழுப்புச் சாற்றில் குளிகை உரைத்துக் காதிலிட வெளிச்சி போம். காதில் எறும்பு பூச்சி முதலானதும் போம்.

பீலிக

பீனிசத்திற்கு:-

பசுவின் மூத்திரத்தில் ஒரு குளிகை உரைத்து நாசியில் நசிய மிட பீனிசம் போம். உள் நாக்கு வளர்த்திக்கு ஒரு குளிகையை வெள்ளாட்டு நெய்யில் குழைத்து விழுங்கப் போம்.

காது வலிக்கு: முருங்கை யிலைச் சாற்றிலுரைத்து காதிலிட காது வலி தீரும்.

பக்க சூலைக்கும். எழு வகைச் சூலைக்குங் குன்ம கிராணிக்கும். உடல் வியாதிக்கும். வெந்நீரில் ஒரு குளிகை கொடுக்கத் தீரும். பத்தியம் பாலுஞ் சோறுண்ணவும்.

குன்ம கிராணியின் குணம்:-

வாயில் நீர் வரும். ஜலம் வெகுவாய் வரும். இதற்கு செண்பக மரத்துப் பட்டை சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் நொய்யரிசி கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

உடல் வியாதிக்கு கத்தாழைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் பசுவின் பாலில் சோறுண்ணவும்.

பதினெண் வகை பீனிசத்தின் குணம்:-

வாயில் நீர் வரும். கெற்பம் அடைத்திருக்கும். உமிழ் நீர் அதிகரிக்கும். இதற்கு திப்பிலிப் பொடியில் ஒரு குளிகை பொடி செய்து போட்டுக் கொடுக்கவும். பத்தியம் நொய்யரிசிக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

தொண்டை புண்ணின் குணம்:

தொண்டை திமிராய் இருக்கும். இதற்கு வெள்ளைப் பாகையிலைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும்.

அரோசிகத்துக்கு:-

பழைய தண்ணீரில் ஒரு குளிகை கொடுக்கவும். இந்த வகை இரண்டிற்கும் பத்தியம் பசுவின் தயிரில் சோறுண்ணவும். சுவாச வியாதிக்கு வெள்ளை வெங்காய கசாயத்தில் ஒரு குளிகை கொடுக்கவும். மூல வியாதிக்கு அமுக்கலான் வேர் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் நொய்யரிசிக் கஞ்சி கொடுக்கவும். வயிர் கல் போலவும் நடக்க வொட்டாமல் இருந்தால் வெந்நீரில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் பாலுஞ் சோறுண்ணவும்.

சகல வியாதிக்கும் ஔஷதம்:-

முலைப் பாலில் ஒரு குளிகை கொடுக்க சுரம் அரபத்து நான்கும் உடனே தீரும். சுரத்திற்கு விளக்கெண்ணெயில் ஒரு குளிகையைக் குழைத்து வெல்லத்தில் வைத்து விழுங்க விரோசனமாகும். வெந்நீரில் கொடுக்க சகல சுரமும் தீரும். விஷத்திற்கு கோழிச் சாறும் சுக்குப் பொடியும் சேர்த்து அதில் ஒரு குளிகை கூட்டிக் கொடுக்க விஷந் தீரும். சீத சுரத்திற்கு சுக்கு, மிளகு கசாயத்தில் ஒரு குளிகை கொடுக்கத் தீரும். முயல் கண்ணுக்கு பெருங்காயத்தை பொரித்துத் தூள் செய்து அதில் நொச்சிச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்க விரோசனமாம் முயல் கண் போம். விரோசனத்திற்கு துளசிச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்க விரோசனமாகும். ஒரு தலை வலிக்கு வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒரு குளிகையை உரைத்து நாசியில் நசியம் விடவும் தீரும். அல்லாமல் மண்டைக் குத்தும் மண்டையிலுள்ள சகல வியாதிகளும் ஒரு தலைவலியுந் தீரும்.

கண் பூவுக்கு தண்ணீரிலுரைத்துப் போடத் தீரும். பித்தத்திற்கு சர்க்கரையில் ஒரு குளிகை கொள்ளப் பித்தந் தீரும்.

விஷத்திற்கு அசமோதகத்தில் ஒரு குளிகை கொள்ள விஷந் தீரும். இந்தப் படிக்கு கால் மண்டலங் கொள்ள 2, 3 வருஷத்திய சுரங்கள், கிராணிகள் தீரும்.

வெண் குட்டத்திற்கு கடுக்காய், நெல்லிக்காய், ஏலம், இஞ்சிக் கசாயமிட்டு அக்கசாயத்தில் ஒரு குளிகை கொடுக்க சகல வியாதியுந் தீரும்.

வயிற்றிலுள்ள கிரிப் புழுவுக்கும் அசமோதக் கசாயத்தில் ஒரு குளிகை கொடுக்கப் பூச்சி புழுகள் விழும்.

வெண் குட்டத்திற்கு கடுக்காய்ப் பொடியில் ஒரு குளிகை சேர்த்து பசுவின் நெய்யில் ஒரு மண்டலங் கொள்ள வெண் குட்டம் தீரும்.

பாண்டுவுக்கு நொச்சியிலையும் வேப்பன் பட்டையும் சேர்த்து கசாயமிட்டு அக்கசாயத்தில் ஒரு குளிகையைக் கொள்ள பாண்டு ரோகந் தீரும்.

குளிகையைத் தேனிலரைத்து செவியிலிட கிருமி முதலான எழுச்சி எறும்பு முதலானதுந் தீரும். நாக்கு வளரும். தேனில் கொள்ள நாக்கு வளரும். அஸ்தி சுரத்திற்கு ஒரு குளிகை அதிமதுரம் விராகனிடை 3 ஊசி சமூலத்தில் கசாயமிட்டு அக் கசாயத்தில் கொடுக்க அஸ்தி சுரந் தீரும்.

உடம்பிலுள்ள வியாதிகளுக்கு ஏலம், கிராம்பு, அதிமதுரம் இவைகள் சமன் சேர்த்து கசாயமிட்டு அக் கசாயத்தில் ஒரு குளிகை கொடுக்க உடம்பிலுள்ள வியாதிகளெல்லாம் குணமாகும்.

பித்தம் கழிய:- 8.3.63.

கீழ்க்காய் நெல்லி வேருக்கும், பசுவின் பால் கால் படி பாலில் அரைத்துக் கலந்து குடிக்க பித்தம் மலத்தில் கழியும் நற் கோவையிலையும் நல்ல வெல்லமும் சேர்த்து அரைத்து விழுங்க/1 பித்தம் மலத்தில் கழியும்.

ரசக் குளிகை:-

முத்தெருக்கன் சமூலங் கொண்டு வந்து மூலைப் பாலிலரைத்து குகை செய்து காலு ரசம் விட்டு அதன் மேல் புநாகத்தை விட்டு அரைத்து மேல் பூசி பசுவின் நெய்யைக் கரண்டியில் விட்டு அதில் குகையை வைத்து எரிக்க உருண்டையாம். அதை யெடுத்து வாயிலிட்டுச் செல்ல மன்னர் வணங்கி நிற்பார். பக்தியுள்ள நவமுனிவர்கள் நமக்கிதுவே சொன்னார்கள் உலகில் யாவருந் தான் பண்ணலாமே.

அண்டத்தில் ஜோதிலிங்க கட்டு:-

அண்டம் கொண்டு வந்து வெள்ளைக் குமஞ்சன் கரும் பிரண்டையும் எடுத்து பீங்கானி லிட்டுக் கொண்டு ஒரு பணவிடைப் பச்சைக் கற்பூரம் அதில் போட்டு அந்த நீரை லிங்கத்திற்கு சுருக்குக் கொடுத்து கட்டும் கட்டின லிங்கத்தை யெடுத்து பனங்கள் கொண்டு வந்து சுருக்கு கொடுக்கவும். அக்கினி நிற்கு வந்து மணியாம் அண்ட மெழுகாகும். அண்டத்தின் பெண் கருவை தனியா யெடுத்து அதில் பணவிடை சவ்வீரமும் ஒரு பணவிடை வெங்காரமும் பொடி பண்ணி அண்டத்தில் கொடுக்க மெழுகாகும். அந்த மெழுகை எடுத்துக் கொண்டு அதின் மேல் லிங்கத்தை வைத்துப் புடம் போட லிங்கம் கட்டும். புடமிடவும். (மந்தரம் புடம் இடவும்)

கல்வ லக்ஷணம்:-

வாரான குழிக் கல்லின் மார்க்கம் கேள் மைந்தனே பிர்மாவின் சிரசு போலே
கூரான வகல மணி விரலாய்ப் பூணே கொள்கை முப்பதனி விரலின் நீளம் பத்து
ஆரான விளிம்பது தான் விரலிரண்டாகும் விதியாலே ஆசமது விரலதாமே
பேரான யிரு புறமும் முக்குமாகும் பெரிதான தேவி தான் பேசுவாரே.

பேசுகிறேன் பதினெண் அங்குலமே நீளம் பெரிய முகவட்ட மணி விரல் நால் வீதி
ஆச்சரிய மிப்படியே விரல் பத்தாகும் மாலிடையும் சிவலிங்க மானவாறும்
வீசுகிற பிரம்பது தான் மொழியுஞ் சாது வேதாந்த நீளம் விரலன் பத்தொன்று
சுப்பரனுர் பகர் கல்க்குழி தான் மக்காள் ரெட்டா முகாம் சாமலை ஆச்சே.

உருக சுண்ணம்:-

உருக கட்டியைப் பீங்கானில் வைத்து அந்த கட்டி மிதக்க நந்தியா வட்டை சார் விட்டு ரவியில் மூன்று நாள் வைக்கச் சுண்ணமாகும்.

கேசரி தைலம்:-

கேசரி எலும்பு ஒரு எடையும் செம்புளிச்சான் கட்டை இரண்டு எடையும் சேர்த்துக் குழித் தைலம் இறக்கி அதில் உருக கட்டியை வைத்து ரவியில் வைக்கச் சுண்ணமாகும்.

தாம்பிர சுன்னம்:-

தாம்பிரத்தை லேசாகத் தகடு தட்டி கரியோட்டிலே பழுக்கக் காய்ச்சி உத்தா மணிப் பாலிலே வைக்கவும். இந்தப்படி ஏழு தரம் காய்ச்சி வைக்க சுன்னமாகும்.

ராஜ கல்டேஸ்வர மாத்திரை:-

1. சூதம் கெந்தகம் தாம்பூரம் சுத்த நாபி தான் நிறைக்கு
போத லிங்கமதற்கு ரெட்டி பொருத்து நொச்சி சாமமரை
மாதச் சடுவ சுரங்களுக்குப் யாவிப் பயிராவு உருண்டை செய்து
நீத நொச்சி சாற்றினிலே திறையா யிருபத் திரு விடே.

2. இருபத் திரு தன்னில் இளவரையாகக் கொண்டு
மருவிய நொச்சிச் சாற்றினில் மலரத் தாவி
தொருவெயோர் உண்டை யிட்டால் தீருமே சுரங்களெல்லாம்
உருமாய் நாமும் சொன்னோம் உகந்த பத்தியத்தைக் கேளே.

3. தயிரும் சோறும் பாலுடன் பத்தியம் குளிர்ந்த தண்ணீர்
நித்தியம் கெந்தம் புஷ்பம் சிறந்த சர்க்கரையுமாகும்
சித்தினிய வெற்றிலையும் பாக்கும் புரிச் சங்கை மாயிஷம் ஆகும்
சத்தியம் தீருமென்றே ராஜ கல்டேஸ்வர மாத்திரைக்கே வேலுண்டு விளையில்லை.

பேய் நாய் கடிக்கு:-

பெரு மரத்து பட்டையும் ஆடு தின்னாப் பாளையும் இவ்விரண்டையும் நன்றாய் வெந்நீர் விட்டு அரைத்து சுண்டைக் காய் களங் காய் அளவு மணிப் பிரமாணமாக ஆள் தரங் கண்டு மூன்று உருண்டை உருட்டி ஒரு நேரம் கொடுக்கவும். அப்பொழுதே பச்சை சலம் சிரசில் விட்டு விடவும். பத்தியமில்லை. மாடு, ஆடு, கழுதை குதிரை, நாய் இந்த வகை சாதிகளுக்கு களாக்காய் பிரமாணம் மூன்று உருண்டையை ஒரு வேளைக்குச் சாப்பிடவும். அப்பவே குளிர்ந்த ஜலம் விட்டு விடவும். பேய் நரி பேய் நாய்க் கடி தீரும்.

சுத்த நாக பற்பம்:-

வேண்டிய நாகத்தை எடுத்துப் புது சட்டிக் காய வைத்து அதில் போட்டு நன்றாய் உருக்கி கன் விட்டாரும் போது சித்தாமணக்கு இலைச் சார் விட்டு மேல் சட்டியிட்டு மூடவும். பின்பு நன்றாய் குளிர ஆறின பின்பு எடுத்துப் பார்த்தால் பற்பமாம். இந்த பற்பத்தை வேளைக்கு ஒரு பணவிடை பசுவின் வெண்ணெயில் குழைத்து விழுங்கவும். இந்தப் படி காலை மாலை ஏழு வேளை கொடுக்கவும் தீரும் வியாதிகள் இரத்தக் கடுப்பு, ஆனைக் கடுப்பு, சீதக் கடுப்பு, கிராணி அதிசாரம் இவைகள் தீரும். காரம், சாரம் தள்ளி இச்சாப் பத்தியமாயிருக்கவும்.

வாந்திச் சுன்னம்:-

ஆறு வருடம் சென்ற வேப்ப மரப் பட்டையை ஒரு பலம் எடுத்து சிறுகச் சிறுக நறுக்கி காய வைத்து இடித்து மாவ் பண்ணி அதிகமாய் பனி பெய்கிற காலத்தில் நல்ல பாறை பார்த்து ஆள் நடமாட்டாத இடத்தில் நன்றாய் மேற்படி பாறையைக் கட்டிப் போட்டு அவ்விடத்தில் மேற்கண்ட பொடியில் பாதியைக் கொட்டி மேலே மணி முளிக்கள்ள எலும்பை எடுத்து குளிர்ந்த தண்ணீரில் போட்டு அலம்பி நாழிகை ஊற வைத்து நன்றாய்த் தேய்த்துக் கழுவி நன்றாய் அரைத்து காய வைத்து எடுத்து மேலே வைத்து பின்பும் முன் இடித்த பொடியைக் கொட்டி ஒரு முழப் புடமாதிரி உயரக் கொட்டி மேலே நெருப்பிட்டு அந்த பகல் பூராவும் நன்றாய் வேக வைத்து ஆறின பிறகு மறுநாள் காலையில் பனி வேளை கழிந்து வெயில் காண எடுத்து கல்வத்தில் வைத்து நன்றாய்த் தூள் செய்து குழாயில் அடைத்து வைத்துக் கொண்டு நோய்களுக்குக் கொடுக்கிற அநுபான மறிந்து கொடுக்கவும்.

~~வாந்தி~~:-

வாந்தி:-

அபானம் வாந்தியாக வேண்டு மென்றால் சரீர உஷ்ணம் கண்டு சூள் திறந் கண்டு செயிக்க அமிர்த குளிர்ந்த தண்ணீரில் ஒரு நெல் எடை பற்பம் போட்டு காய்ச்சி கங்கைத் தண்ணீரில் போட்டு கலக்கிக் கொடுக்க வாந்தி யாகும். ஒரு தடவையான பிறகு வெந்நீர் கொடுத்துக் கொண்டு வரவும். வாந்தி போக வேண்டு மென்றால் மிளகு அரைத்து புளி வைத்து உப்பும் போட்டு கொதிக்க வைத்து கால் படி சார் சாப்பிட நிற்கும்.

பேதி:-

பேதியாக வேண்டுமென்றால் மேற்கண்ட ரசம் சாப்பிட பேதியாகும். இதை நிறுத்த வேண்டுமானால் கால் படி துவரம் பருப்பைச் சட்டியில் போட்டு தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து வேகும் போது கட்டிடை நல்ல சீரகம் அதில் போட்டு பருப்பை நன்றாய் வேக வைத்துத் தண்ணீரை வடித்து அதில் புளி மட்டாய் வைத்து உப்பு, மிளகு வெள்ளுள்ளி வைத்துச் சாற்றை நன்றாய் கொதிக்க வைத்து சாறும் சோறும் சாப்பிடவும். இதற்குத் தீரும் வியாதிகள் வாத காசம், பித்த காசம், சிலேத்தும காசம், ஈளை காசம், எலி கடிக் காசம், மந்தார காசம், பயித்தியக் காசம், சுவாச காசம், உம்மாதம் தீரும். அந்நிய பதார்த்தம் சாப்பிடப் பட்ட பேர்களுக்கு வெள்ளாட்டுக் காலை நசுக்கி சட்டியில் போட்டு தண்ணீர் ஒரு படி ஊற்றி வேக வைத்து வடிக்கும் போது மிளகு, சீரகம், கொத்தமல்லி, ஈர வெங்காயம் இவையெல்லாம் துணியில் முடிந்து போட்டு நன்றாய்க் காய்ந்த பிறகு சாற்றை வடித்து அதில் காசிடை மிளகை நன்றாய் நசுக்கிப் போட்டு சற்றுப்பும் சற்று புளியும் சுட்டுச் சேர்த்து சார் செய்து கொடுக்கவும். அன்னிய பதார்த்தம் சாப்பிடாதவர்களுக்கு முன் சொன்ன துவரைப் பருப்பு மிளகு நீர் வைத்துக் கொடுக்கவும்.

கசாயத்திற்கு:-

அபினி விராகனிடை கால், இதில் நான்கில் ஒரு பாகம் ஜாதிலிங்கம், தெல்லரிசிச் சாரம் இந்த மூன்று வகையும் சேர்த்து நன்றா யரைத்து நாலு குளிகையாய் உருட்டி ஜாமம் நான்கிற்கும் ஜாமம் ஒன்றிற்கும் ஒரு குளிகை சாப்பிடவும். எப்பேர்ப்பட்ட இருமல் க்ஷயம், இளைப்பு, ஈளை, சுவாசகாசம், மந்தார காசம், எலி கடிக் காசம் இவை வெல்லாம் இரண்டு நாளைக்கு நிற்கும். அதன் பிறகு திடமான பற்பங்கள் லேகியங்கள் செய்து சாப்பிடவும்.

ஈரக் குலை வலிக்கு:-

பிராந்தி கரண்டி ஒன்று சமனுகப் பச்சைத் தண்ணீர் விட்டு வெங்காரம் விராகனிடை அரைக்கால் சேர்த்து நறுக்கி அதில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும். குலைவலி நிற்கும்.
(வேறு) மேலுக்குக் கற்பூரத்தை தைலத்தை மார்பு நெஞ்சு இவ்விடங்களில் பூசி வேப்பம் பட்டையை எரித்து அனல் காட்டவும். குலைவலி நிற்கும். இந்தப் படி எழு வேளை கொடுக்கவும். ~~வேண்டு பிள்ளை~~

குலை முப்பத்திரண்டுக்கும், பக்க குலைக்கும் இரு புறமும் அள்ளுவை மேலிழுக்கிறதற்கும்:-

காற்றுழை ரசம் உழக்கு கால், எலுமிச்சம் பழ ரசம், உழக்கு நாலு பொடி தழைச் சார் உழக்கு கால் விளக்கெண்ணெய் படி முக்கால் சவ்வீரம் விராகனிடை ஒன்று மேற்கண்ட வீரத்தை நறுக்கி எண்ணெயிற் போட்டு நெருப்பில் வைத்து மெழுகு பதத்தில் வடித்து வேளைக்கொரு கட்டிடை காலை நேரங்களில் கொடுக்கவும். பத்தியம் இச்சா பத்தியம். இந்தப் படி ஏழு நாளைக்குக் கொடுக்கவும். வேப்பெண்ணையில் பெருங்காயம் போட்டுக் காய்ச்சி சரீரத்தில் பூசவும் பக்க குலை எரி குலை , உன்மச் சுலை இவைகள் தீரும்.

சஞ்சீவி குளிகை:-

சுக்கு, மிளகு, பெருங்காயம், வெள்ளுள்ளி வகைக்கு விராகனிடை ஒன்று, எட்டிப் பட்டை விராகனிடை பன்னிரெண்டு இவைகளெல்லாம் கிம்பழச் சார் விட்டு அரை சாமம் அரைத்து

மூன்று மணி அளவு உருண்டை செய்து நிழலிலுலர்த்திக் கொண்டு நோய்களுக்கு அனுபான மறிந்து கொடுக்கவும். ஓமக் கசாயத்திலொரு குளிகை யிடவும். பொன் முசுட்டை வேர் தூதுவளை வேர் இவைகளுடன் சுக்குக் கசாயம் செய்து ஒரு குளிகை உரைத்துக் கொடுக்கத் தீரும் வியாதிகள். உப்பிசம் எப்பம் வயிர் பேதி விஷ பேதி மாங்கிஷ பேதி இவை யெல்லாந் தீரும்.

வீக்கத்துக்கும் சூலைக்கும் குன்ம வாய்வுக்கும்:-

சிறு பீளையிலையை யிடித்து கால்படி சார் பிழிந்து காலமே, காலமே மூன்று நாள் கொடுக்கவும். மறு பத்தியம் மூன்று நாளிருந்து ஏழாம் நாள் பத்திய முறிக்கவும். வெந்நீரும் சோறும் சாப்பிடவும். வேறு ஒன்று மாகாது: பத்திய முறித்த பிறகு சகலமும் சேர்த்துக் கொள்ளவும்.

தக்ஷிண மூர்த்தி சூஸ்திரம் 500

பாரப்பா மூலிகையின் விபரந்தனை பக்குவமாய் சொல்லுகிறேன் மைந்தா மைந்தா
ஆரப்பா அறிவார்கள் மேனிதமைச் சமூலம் வர்ங்கி அறிந்திடவே நிழலுலர்த்தி வைத்துக் கொள்
சீரப்பா சுத்த சலந் தன்னில் போட்டு சிவ் சிவா இறுத்து விட்டுப் பத்து முறை தானே.

தானே தான் பத்து முறை சுத்தி செய்து தன்மையுடன் தானெடுத்துப் பதனம் பண்ணி
வீணே தன்திரியாதே யிடித்துக் கொண்டு விபரமுடன் வடி கட்டிக் கலசத்திட்டு
கேளோ தான் பொடியாக்கி அரைச் சீனியாகக் கூட்டிடவே மண்டலத்தில் குறக் கேளு
மானே கேள் குன்ம மொடு அதிசாரங்கள் மகுத்தான பீனிசங்கள் மண்டைக் குந்தே.

குத்தான சில விஷங்கள் குஷ்ட ரோகம் குறை நோவு பெரு நோவு குறைகள்தீரும்
முத்தான மேனி தனில் சன்டை போகும் மூர்க்கமுள்ள நரை திரைகள் காதேரும்
சித்தான அஷ்ட சித்தும் கைக்குள்ளாகும் சிவ சிவாயினை மொரு பாகங் கேளு
சாத்தான கரி மானில் நம்பிக்கையான் சமூலமதைக் கொண்டு வந்து சாற்றக் கேளே

கையான் கற்பம்:-

கேளப்பா நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு கிருபையுடன் தன்னீரில் சுத்தி பண்ணு
நாளப்பா பத்து நாள் சுத்தி பண்ணு நலமான குடிலமெல்லாம் நீங்கிப் போகும்
ஆளப்பா சுத்தி செய்த மூலி தன்னை அன்பாகச் சூரணித்து வைத்துக் கொண்டு
கேளப்பாவாருமல் ரெண்டு கொண்டு கூட்டு வாய்ச் சர்க்கரையைக் கூட்டு வாயே.

கூட்டு நன்குய்க் கலசத்தில் பதனம் பண்ணி குருவான பராபரத்தைத் தொழுது போற்றி
நாட்டு நன்குய் வெரு கடியாய் தினமுங் கொண்டு நலமான மண்டலமுங் கொண்டு தீர்ந்தால்
கோட்டி செய்யும் சோகை பாண்டு ருவமெல்லாங் கொடிதான மகோதரமும் தீரும்
நாட்டிகமாய் மேனியிலே கட்டை தள்ளும் நயவான மேனியது காந்தியாகும்.

ஆமப்பா யின்னமொரு முறைதான் கேளு அப்பனே யாரறிவார் தானப்பா
நாமப்பா சொல்லுகிறோம் செருப்படியாம் பூடு நலமாக வுலகத்தில் மெத்த விளடு
தாமப்பா கொண்டு வந்து நிழலுலர்த்தித் தன்மையுடன் தன்னீரில் சுத்தி பண்ணி
வாமப்பா தன்னுலே பத்து முறை சுத்தி வரிசையுடன் தாமுலர்த்தி சூரணமே செய்யே.

செய்யப்பா சூரணத்தில் பாதி சீனி செம்மையுடன் தான் கூட்டி கலசத்திட்டு
பையப்பா பரனத்தைத் தொழுது போற்றி பக்தியுடன் வெருகடியாய் மண்டலமே கொள்ளு
கையப்பா கைபெல்லா மசுத்துத் தள்ளும் கசடான மேகமொடு கெற்பம் தீரும்
மெய்யப்பா சொல்லுகிறோம் சட்டை தள்ளும் மேனி வச்சிர காயமதாய் விளங்குந்தானே.

தானென்ற முன் சொன்ன மூலி மூன்றும் தன்மையுடன் நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
கோனென்ற குரு வருளால் பத்து முறை சுத்தி குணமாகத்தான் செய்து சூரணமே செய்து
மானென்றும் கலசத்தில் பதனம் பண்ணி மகத்தான பூரணத்தைத் தொழுது போற்றே.

போற்றி நன்குய் வெரு கடியாய் எடுத்துக் கொண்டு புதுமையுள்ள தேனிலே கொண்டால்
மைந்தா

பார்த்திபனே தேகத்தில் வாதபித்தம் பாலகனே க்ஷயத்தாலே எழுந்த நோய்கள்
சேத்தியே மண்டலந்தான் கொண்டாயானால் சிவ சிவா தேகத்தை யென்ன சொல்வேன்
சாத்திகமாய் நிற்கொரு தேகந் தன்னில் சட்டை யொன்று வெப்பர்கத் தன்றுந்தானே.

தானே தான் தேகமது தங்கமாகும் தன்மையுள்ள நரம்பிழகிப் போகும் போகும்
உள்ளே தான்றை திரைகளுதிர்ந்து போகும் உத்தமனே வாசியது உடையாகும்
மானே கேள் முந்தரச மருவிப் பாயும் மகத்தான் மெய்மது உந்தியர்கும்
தேனே தான் தீபவொளி கண்ணில் காணும் திசையான தமர் வாசல் திறக்கும் பாரே.

திறந்தொரு வாசற் குள்ளே நீயும் செலுத்தடா வாசிதனை ரவியில் மைந்தா
பறந்தொரு வாசியது பத்தியாகும் பரிவான தீபவொளி கண்ணில் காணும்
கறந்தொரு பால் போலே அமிர்த மூறும் கனிவான அமிர்தத்தைத் திரும்பக் கொண்டு
சிவமான மௌனத்தை சேர்வாய் முற்றே..

ஈளை இளைப்பு காசத்திற்கு :-

ரசகற்பூரம், ரசச் செந்தூரம், சாதிலிங்கம், ரசம், வெங்காரம், குடம், சாம்பிராணி வகைக்கு விராகனிடை மூன்று, இரும்புக் கரண்டியை நன்றாய்த் தேய்த்துப் போட்டு அதில் குடம் சாம்பிராணி இரண்டையும் வைத்துச் சுடர் காட்டினால் எரியும். உருகும். உருகின பக்குவத்தில் ரசகற்பூரம், ரசச் செந்தூரம், ஜாதிலிங்கம், வெங்காரம், இந்த நான்கு வகையும் வெவ்வேறாகத் தவைத்துத் தவைத்து பிரட்டி எடுத்து கல்வத்தில் வைத்து முலைப்பால் விட்டு ஒரு சாமமரைத்து பாவட்டங் காய்ப் பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு குளிகையை கருப்பங் கட்டியில் வைத்துக் கொடுக்கத் தீரும் வியாதிகள் எலி கடி காசம்; மந்தார காசம், சுவாச காசம், இவை யெல்லாந் தீரும். பத்தியம் இச்சா பத்தியம். சுக்கை யரைத்து குளிகையை நசுக்கி அதில் பிரட்டியும் கொடுக்கலாம்.

மச்ச முனியார் ;- சகல பிணிக்கும் சன்னிக்கும் :-

பூரணமாய் நின்ற பராசத்தி பாதம் போற்றி செய்தேன் என் தாயே உன் பாதங் காப்பு
தாரணமாய் மானிடர்க்குப் பிழைக்க வேண்டி சதாசிவன் மனது கேட்டு மருந்து சொன்னோம்
காரணமாய் நாதாக்கள் பதினென் பேரும் கட்டி வைத்தார் அதன் பிறகு நூல்களெல்லாம்
வாரணமாய் என் தாயு முபதேசித்தாள் வயித்தியந் தானெட்டதிலே பாடினேனே.

பாடினேனென் குருவின் கிருபையாலே பாடி வைத்த நூல்களெல்லா மவேக முண்டு
ஆடிய தேரர் தெகூஷிமூர்த்தி தானும் அப்பனே பிணிகளுக்கு யெட்டுஞ் சொன்னார்
சேரடா கொங்கணவர் யெட்டுக்குள்ளே திரமான பார்வை யெல்லாம் பாடினார் கேள்
வாரடா நந்தீசர் எட்டுக் குள்ளே வெகு திறமாய் குளிகையது பாடினார் கேளே.

கேளப்பா மானிடரே இன்னங் கேளு கிருபையாய் திருமூலரெட்டும் பாரு
மாளப்பா கருவூரார் எட்டும் பாரு மைந்தனே சட்ட முனி எட்டும் பாரு
நாளப்பா போகருட எட்டும் பார்த்தால் நலமாகத் தோணுமடா வைத்தியந் தானும்
வாளப்பா பெரு நூலில் அலைய வேண்டாம் வடிகாக இருக்குமொரு எட்டுதானே.

தானென்ற கண்டிப்புடல் பாடாக முட்டி தப்பாதகிரந்தி முதல் சிறங்கு முட்டி
வானென்ற வாசினை ஒன்பத்து தானும் வளமான அமுர்த வள்ளி வகைக் கரை தான் கேளு
கோனென்ற ரோகணியும் வசம்பு சுக்கு கோவித்த திப்பிலியும் தேசிதானும்
ஆனென்ற வகைக்கது களஞ்சி ஒன்று அஞ்சரையில் படி தண்ணீர் விட்டுக் காய்ச்சே.

காச்சியே ஓம் நீலிம் சிவாயா மகேன் மணியே நமா வென்று கணக்கவே பதினெட்டு தரந்தான் சொல்லி

வாச்சுதே திருநாற்றில். உபதேசித்து மைந்தனே கசாயத்தில் போட்டாயானால்
பாய்ச்சியே பாவமடா நிவர்த்தியாச்சு பனிமடா ஒரு சுருக்காய் பலிக்கும் பாரு
வாச்சுதே அரைச் சிரங்கை கொண்டாயானால் வறுவான வயிற்று வலியெல்லாம் போமே.

போமடா வயிற்றெரிச்சல் குன்மங் காச்சல் பொல்லாத நோய்களெல்லாம் போகும் பாரு
சாகுமடா சன்னி யென்ற தெல்லாம் போகும் தப்பாத மூலிகையின் கசாயத்தாலே

பாகமாய் தேனதிலே கூட்டிக் கொண்டால் பறக்குமடா சகல ஜன்னி கண்டக சன்னி
வாக்மாய் மானிடரே வயித்தியரேமட்டாக கசாயத்தின் வயித்தியம் பாரே.

பாரப்பா நூாக்கள் சன்னிக் கெல்லாம் பாடினர் கசாயங்கள் கலிக்கமாக
ஆரப்பா பாடினதைக் குறித்திந் தாமும் அப்பனே சுருக்கமாய் யெட்டில் சொன்னோம்
சேரப்பா வயித்தியரே செய்து பார்த்து திறமான சாபத்தை நிவர்த்தி பண்ணு
வாரப்பா இச் சாபம் சுருக்கமாக மைந்தனே திடத் செய்து சொன்னோம் கேளே.

கேளப்பா பதினென் பேர் யெட்டு தாமும் கிருபையாய் உன்னிடத்திலிருந்த தன்னல்
நாளப்பா நோயறிந்து செய்தாயானால் நலமாக உனைப் போல வயித்தியனில்லை
மாளப்பா பெரு நூலில் அலைய வேண்டாம் மைந்தனே சிறு நூலை யுணிப் பாரு
வாளப்பா மானிடரே சுருக்காய்ச் சொன்னோம் வகை தொகையாய் மச்சமுனி யிடல் முற்றே

<u>சட்ட முனியார்</u> :-

ஆதியென்ற கைலாசத் தாயி பாதம் அருளாக யெனை யின்ற ஐயர் பாதம்
சோதியிலள் தென் பொதிகை யாசான் பாதம் தொழுதிரஞ்சி வேதாந்த சூட்சங் சொல்வேன்
ஆதியே உம் என்று அம் என்றோது ஊதிடவே சாபமெல்லா மோடிப் போகும்
சாதினை யிலாவகாரமது உகாரங் கூட்டி சாற்றிடவே பத்து லட்சம் வசியமாமே.

ஆமிந்த வகை எத் கெந்திக்குந் தான் அஞ்சிலான் நவாச்சாரம் கௌரி கால்தான்
ஓமிந்த கெந்தி யிடை சூதமாகும் உத்தமனே குருசை இந்த இடையே போடு
மேமிந்தயிடையே தான் முரி விட்டுத் திறமாக வொரு சாமமரட்டியே தான்
தாமித் ஒரு எருவில் புடத்தைப் போடு சட்டமுடன் முருக்கம் பூ போலாம் பாலே.

பாரப்பா ஓங்காரம் கொண்ட மூலம் பானி நின்ற ஐங் கோண வாச தானும்
காரப்பா ரீங்கார முன்னே யிட்டு கை முறையாய் வாசி தனைக் கருதிப் புணு
சீரப்பா உதிர்த்த வர்க்கு தெரிந்த் நட்டாம் திறமான வங்குங்கு இரண்டுந் தானும்
ஆரப்பா இவ்வளவு அறிந்து செய்ய ஆசானைத் தொழுதிரஞ்சி ஆட்டுவாரே.

ஆட்டான கெந்தியிநல் கையே செய்து அப்பனே பொற்றலையின் சாற்றலாட்டி
பூட்டான சூதமும் மவ்விடையே விட்டு புகழான வீரமு மவ்விடையே விட்டு
தேட்டான ரீங்கார ஐயுங்கிலியுங் கூட்டி செக ஜாலம் ரெண்டு எடுத்தை களியிராட்டி
காட்டானமுன்றெருவில் புடத்தைப் போடு கதிரவன் போல் செந்தூரங் கொள் மகே.

கொள்ளப்பா பேதையுப்பு நாலதொன்றங் கூட்டாகத் திராவி சோல் முன்னே வேணும்
தள்ளப்பா சண்டாளர் தனை செயித்கேதானவன் போல் மாய்கை செய்து திரடிப் போவான்
உள்ளப்பா சொல்லி விட்டேன் அறிந்து கொள்ள உத்தமனே வாக்கு அளித்தேன் பாரு பாரு
கொள்ளப்பா கள்ளருக்கு என் நூலியாதே குருத்தறியா மூடருக்கு கை காட்டாதே.

காட்டாதே குரு பதத்தை அடுத்துக் காரு கள்கமல கேட்டதெல்லாம் கையிலீந்து
பூட்டான ஐங்கோண முத்திரையைக் கேரு பொருந்திய தோரிரண்டெழுத்தை நாட்டக் கேரு
தேட்டான முன்றெழுத்தை நாட்டக் கேரு செகஜாலத்தாய் பதத்தை தினமும் போற்ற
பாட்டான தீகைஷ விதிப் பிராணயாமம் பாங்கான உபினி பரசுபிபியாமே.

ஆமப்பா அஉங்ட பீசாட்சரத்தைக் கேரு அருளான் அகாரமது முன்னே சேட்டு
தேமப்பாஎட்டெழுத்தில் இரண்டுங் கூட்டி தியானிக்க மோக்மாம் தெளிந்து பாரு
ஊமப்பா ஒரெழுத்து இருபத்தைந்து உத்தமனே அழிமுனையில் நிறுத்திப் பாரு
தாமப்பா யிதிலே எட்டு மெட்டுச் சாத்கமா யிருபத்து நாள் மாச்சே.

ஆச்சப்பா யிந்தவகை சித்தியானால் அண்டத்தில் உமை பாதம் பெருளாதலால்
எச்சிந்த குருவருளால் வாங்கிக் கொண்டால் இயம்பான பரகதிக்கு இடமதாகும்
பாச்சிந்த ஆம் பதத்தில் பொருளை யெல்லாம் பண்பாக மனது வைத்துப் பகருவாரே.

சுயமாக்கினி குமாரன் :-

ரசம், கெந்தகம், நற்பாலை விரை, ஊமத்தின் விரை, காட்டாமணக்கின் விரை, கொன்றை விரை, திரிபாலை, சிவதை வேர் புப்புரசன் விரை இவையெல்லாம் சரி நிறையாக நிறுத்துக் கொண்டு கள்ளிப் பால் விட்டு அரைத்து தேங்காய் பாலில் அரைத்து வெயிலில் வைத்துப் பயரளவு பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு முலைப் பாலிலிட குளிர் சுரந் தீரும். பத்தியம் உப்பு, முதல் ஆகாது. சுண்டிப்பாயாகாது.

சூதம் நாலு, மனோசிலை இரண்டு, நெல்லிக்காய் கெந்தகம் எட்டு காந்தம் பதினறு லோகம் முப்பத்திரண்டு இவை யெல்லாம் கல்வத்திலிட்டு குமரிச் சாற்றால் நன்று அரைத்து வட்டலில் அப்பி மூட தீப்பிடித் தெரியும். பின்பும் அரைத்து அடைத்து வைத்துக் கொண்டு குன்மம் பீலிகை பித்த பாண்டு புளி ஏப்பம் உள் சுரம், நெஞ்செரிப்பு இந்த வகைகளுக்கெல்லாம் இஞ்சிச் சாற்றில் கொடுக்க முன்னே சொன்ன வியாதிகள் எல்லாந் தீரும்.

சீந்திக் கொடி, வில்வ வேர், மிளம் வேர், கண்டங் கத்திரி வேர், நெருஞ்சி வேர், அமுக்கறாம் வேர், சிறு செங்கழு நீர் வேர், புளியாரைச் சமூலம் சித்தா முட்டி பேராமுட்டி வேர் மலை தாங்கி வேர் முசுமுசுக்கை வேர், பிரப்பங் கிழங்கு நன்னாரி வேர், பட்டை, செம்புளிச்சான் வேர், சிறுகாஞ்சரி வேர், பெரு குருஞ்சான் வேர், முத்தக் காசு, ஆடாதோடை வேர், விஷ்ணு காந்தி வேர், வகைக்கு பலமைந்து இவைகளெல்லாம் தரித்து இடித்து ஒரு மிடாவில் போட்டு எட்டு வள்ளத் தண்ணீர் விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி வடித்து மண் சட்டியிலிட்டு அதில் பத்து பலம் பனை வெல்லம் போட்டு பாகு பதமாய்க் காய்ச்சி இந்தப் பாகு பதம் பார்க்கிற விபரம் சொல்லுகிறது அடுப்பிலே பாகை எடுத்தால் ஒரு கம்பி வந்தால் வாதத்திற்காகும். மூன்று கம்பி வந்தால் பித்தத்திற்காகும். உருளைப் பதமானல் தொந்திப்புக்கு ஆகும். இனி மேல் கற்க வகை பிரபம்: சுண்ணாம்பில் சுத்தி பண்ணின சுக்கு பலம் நாலு, இதை இடித்து சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு லவங்கம் நமக்கு மூலம் அதிவிடையம், வாய்விளங்கம்; கற்பூர சிலாசத்து சம்பிராஊட்டகம், செவ்வியம், தேவதாரம், கச்சோலம் சிறுநாகப்பு, நாகம் கெண்டு பரங்கி வெங்காரம் லவங்கப் பட்டை தவசீரகம், அரத்தை அதிமதுரம், கரிய போலாம் இந்துப்பு கோஷ்டம் ஜாதிப் பத்திரி திப்பிலி மிளகு தான்றிக்காய் சீரகம், சதகுப்பை, தாளிச பத்திரி, மஞ்சள் நிலவேம்பு வகை ஒன்றுக்கு விராகனிடை நாலு இவை வெல்லாம் வெதுப்பி இடித்துச் சூரணஞ் செய்து முந்தின சுக்குச் சூரணத்தை யுமிதனுடனே சேர்த்துக் கலந்து முன் காய்ச்சின பாலில் போட்டுக் கிளறி பதங் கண்டு ஒரு படி பசுவின் நெய் விட்டு கிளறி ஆற விட்டு இறக்கி அரைப்படிகொம்புத் தேன் விட்டு கிளறி பழைய கலசத்தில் வைத்துக் கொண்டு அந்தி சந்தி கொட்டைப் பாக்களவு சாப்பிடத் தீரும் வியாதிகள் குதக வாய்வு, உஷ்ண வாய்வு, சுழி) அக்கினி மந்தம், உடம்பு நோவு, பச்சை உடம்பில் பிறந்த பச்சைக் கிராணி கழிச்சல் அரோசகசிகம் வாய்ச் சலம் சோகை, காமாலை, பாண்டு ரூபம் பித்தம் இவை வெல்லாந் தீரும். இஞ்சிச் சார் அரைப்படி கஷாயம் வைத்து இரண்டு நேரம் சாப்பிடவும்.

நேத்திர வியாதிகள் 96-க்கும் மருந்து :-

குதிரைக் குளம்பு சக்கையாய் செதுக்கினது பலம் ஒரு ஒரு மிடாவில் போட்டு பன்னி ரெண்டு வள்ளத் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து அதில் நல்ல வெங்காரங் கல்லு விளாங்காய்ப் பிரமாணமாக மூன்று கல்லு உடைத்துப் போட்டு தீ யெரித்துத் தண்ணீர் வற்றிக் குழம்பாக வருகிற சமயம் பார்த்து இறக்கிக் கல்லு மூன்றையு மெடுத்து அதன் மேல் தண்ணீர் வற்றினால் சுண்ணாம்பு போலே யாகும். அந்தக் கல்லும் கோவைப் பூவும் ஒரு பிடி கூட்டி அதற்குத் தக்க பசுவின் வெண்ணெய் கூட்டி நன்றாய் மத்திசமான பிறகு அந்த மையை எடுத்து கொம்புச் சிமிழில் அடைத்து வைத்துக் கொண்டு பயிறு பிரமாணம் எடுத்துக் காலை மாலை நேத்திரங் களிலிடவும். இப்படி மூன்று நாளிடவும். இதற்குத் தீரும் வியாதிகள் நேத்திரக்காசம் படலங் கள் இப்படி வருத்திய படலமும் ஆணிப் படலமும் ஆணிப் பூவும் மாறும். அதிகமாய் போட் டால் நாலு ஐந்து பிரையை அறுத்து விடும். கண்டு கொள்ளவும். காரஞ் சாரம் புகை காற்று இவைகள் எல்லாம் ஆகாது. ஜாக்கிரதையா யிருக்கவும். பளிங்கு வெங்கக் கல்லு பார்த்து எடுத்து உடைத்துப் போடவும்.

பைத்தியம் பிடித்தவர்களுக்கு :-

முதல் நாள் விளக்கெண்ணெய் தேய்த்து முழுகின பிறகு இரண்டாம் நாள் கொற்றான் இலையை யரைத்து விளக்கெண்ணெயில் குழப்பித் தலையிலும் நெஞ்சிலும் தடவிவிடவும். பித்தமெல்லாம் இளகும். மூன்றாம் நாள் வெள்ளாட்டுப் பாலில் அரைக்காசிடை கலக்கிக் கொடுக்கவும். அதை சாப்பிட்டவுடன் அரை நாழிகைக் குள்ளாக வாந்தி யெடுக்கும். அந்த வாந்தி பத்துப் பதினைந்து தரமெடுக்கும். இளைத்தால் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். நான்காம் நாள் ஆமணக்கங் கொட்டைப் பருப்புத் தோல் போக்கி முள்ளிக் காயளவு அரைத்து ஆள் பலமும் சரீர புஷ்டி மறிந்து அதற்குச் சரியாய் பசுவின் வெண்ணெயில் கொடுக்க பத்து பதினைந்து தடவை பேதியாகும். களைப்புண்டானால் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். மறுநாள் பேய்க் குமட்டிக் காய் விரையைத் தோல் நீக்கி அந்தப் பருப்பை முள்ளிக் காயளவு அரைத்து பசு வெண்ணெயில் கொடுக்கப் பத்துப் பதினைந்து தடவை பேதியாகும். களைத்தால் ~~களைக்காமல்~~ கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். ஆறும் நாள் வரிப் பீர்க்கன் விரையைப் பருப்பு செய்து அரைத்து முள்ளிக் காயளவு பசுவின் வெண்ணெயில் கொடுக்கவும். பதினைந்து தரம் பேதியாகும். களைத்தால் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். ஏழாம் நாள் பெருங் குரையானை யரைத்து முள்ளிக் காய் அளவு பசுவின் வெண்ணெயில் கொடுக்கவும். மத்தியானத்திற்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். எட்டாம் நாள் வேங்கைப் புலித் தோல் ஒரு கையகலம் சுட்டு பொடித்து பசு வெண்ணெயில் குழப்பிக் கொடுக்கவும். ஒன்பதாம் நாள் தலைக்குத் தண்ணீர் விட்டு விடவும். பிறகு மொச மொசுக்கை லேகியங் கொடுக்கவும்.

சகல சுரத்துக்கும் மோரில் கொடுக்கும் சீராங் கிழங்கம் :-

ஆகும் விடமும் ஜாதிலிங்கம் அரிதாரத் தோடிவை மூன்றும்
பாகலிலைச் சார் தனிலரைத்து பாசிப் பயிர் போலுண்டை செய்து
வாகாய் யுழக்கு மோரிலிடு மாற்றும் பத்திய மோர் சேரே
போகாச் சுரமும் விஷச் சுரமும் போமே சொன்னேன் பொற் கொடியே.

சொல்லுகிறேன் பொன் வெள்ளி இரும்பு செம்பு சோராத நாகங் காரீயம் வெள்ளீயம்
கொல்லுகிற மித்திரத்தின் வகையைக் கேளு கோமயமுங் காடி யெண்ணெய் எருக்கன் பால்
நல்லதொரு சம்பழச் சார் காணச் சாற்றில் நலமான பொன் வெள்ளி யிரண்டுந் தோய்த்து
வெல்லரிய வங்கமொடு மூண்ட தீயில் வேகமுடனுருக்கி யதில் சாய்க்க நன்றே.

சாய்த்திடு யொவ்வொன்றில் காய்ச்சி முக்கால் தான் தோய்க்கச் சாய்க்க உள்ள நேரம் பேதிக்கு
காய்ப்பேறி வலுவறிச் சப்த லோகம் காங்க மற்று நிசமான சுத்தியாகும்
வாய்ப்பான செந்தூர பற்பமாகும் வரம்பதாம் களங்குக்காம் குருவுக்காகும்
தீய்க்கிருக்கும் அவுஷதங் கட்கெல்லா மாமும் செய்திடு வாய் சப்தசுத்தி முறையிதாமே.

இலைக் கள்ளி கற்பம் :-

இலைக் கள்ளி வேர் வெட்டி வந்து சிறக நறுக்கி நிழலுலர்த்தி இடித்து வஸ்திர காயஞ் செய்து வைத்துக் கொண்டு இப் பொடியை குளிர்ந்த மஞ்சள் வெள்ளாட்டு நெய் யுடன் குழைத்து விழுங்க ஈளை யிருமல் தீரும். அருவை தீரும். இப்பொடியை நெற்றியிலிட்டுச் சென்ற காரியம் சித்தியாகும். இப் பொடியை தலையிலிட புருஷன் வசமாவர். இப் பொடியை புருவத்திலிடுச் செல்ல இவன் முகம் நோக்கினவர்களெல்லாம் அதிசயமாகி விடுவார்கள், இப்பொடியை வெள்ளாட்டு நெய்யுடன் ஒரு மண்டலம் கொள்ள பதினெட்டு குட்டமுந் தீரும்.

மத நாய் கடிக்கு மருந்து :-

ஆடு தின்னாப் பாளைச் சாறு உழக்கு, காராட்டுப் பால் உழக்கு, முக்கால் இவ்விரண்டையுங் கலந்து மூன்று நாள் கொடுக்க நாலாம் நாள் நாய்க் கூட்டம் தண்ணீர் தவிர முகக் காட்டவும். அதின் பிறகு குப்ப மேனிச் சாறு நாசியில் ஊதி விடவும்.

தினை யரிசி சோறும் கோழிக் கறியும் சாப்பிடவும் குணமாகும்.

ஆமை பிடிக்க:-

கெண்டை மீன் குடலைப் பிடுங்கி பெருங்காயமும் மேற்கண்ட குடலும் சேர்த்து அரைத்து பெரு விரலில் தடவி மேட்டிலிருந்து தண்ணீரில் காலை தொங்க விட்டுக் கொண்டு இருந்தால் கூரம் மாகிய ஆமை வரும். அச்சமயம் பிடிக்கலாம்.

காதிரைச்சல் மண்டை குத்தக் காதடைப்பு காது மந்தம் காது செவிட்டுக்கு:-

போமடா காதிரைச்சல், செவியில் குத்து பொரியான புண் கேட்டுச் செவி கேளாமல்
மடா எள்ளெண்ணெய் படி தா னென்று இதமான முருங்கைப் பூ பலந்தானென்று
சேரமடா நாகப்ப மொட்டாகத் தான் சொல்லுகிறேன் சொல்லுகிறேன் எண்ணெயிலிட்டு
ஆமடா வெளிச்சிபெரு மண்டை நோய்கள் அணுகாமல் பேரவற் குத் தயிலம் போடே.

போடப்பா குல்விந்தம் பலந்தானென்று புகழான மிளகதுவும் பலந்தானென்று
போடப்பா வலம்புரிக்காய் களஞ்சி யொன்று பொன்னை அதிமதுரங் களஞ்சி யொன்று
போடப்பா தற்கோலம் களஞ்சி யொன்று பொடித்திடுவாய் மருந்தெல்லாம் உண்ணெய்க்குள்ளே.

எண்ணெயிற் பதமாக வடித்துக் கொண்டு இளகவே ஒன்று விட்டொரு நாள் மூழ்கு
எண்ணெயிலே செவி நோய்களெல்லாந் தீரும் இசை கேளா செவிடெல்லாந் தீரும் பாரு
எண்ணெயிலே முனிவர்கள் சொன்ன வேதம் இது பொய் என்று நீ எண்ணதப்பா
எண்ணெயிலே முன் சொன்ன நோயனைத்தும் மேசி விடும் புவுலகில் மெய்தாமே.

பீனிசம் ஆறு வகையின் குணம்:-

நீர் பீனிசத்தின் குணம் மூக்கில் தண்ணீர் மூத்து போல் வடியும். தும்பல் எடுக்கும். ஈர பீனிசம் மூக்கில் சளி போல் விழும். எத் வாசமும் தெரியாது. சிரட்டைப் பீனிசம் மூக்கில் சிழுய் போல் விழும். இரத்தம் விழும். விரண பீனிசம் மூக்கு நோகும். கண்ணில் தண்ணீர் வடியும். மூக்கு கிவாயிருக்கும். உஷ்ண பீனிசம் உச்சி நோகும். தலை யிடிக்கும். வலிக்கும். பிடனி கடுக்கும். சிலேத்ம பீனிசம் மூக்கினுள்ளே சுண்டைக்காய் போலே வளர்ந்து மூக்கை அடைக்கும். காற்று போகாது. இந்த வகை பீனிசத்துக்கு எல்லாம் கீழ் அவிஷதம் எழுதப் பட்டிருக்கிறது.

தயிலம்:-

ஆதண்டன் இலை சார் படி.1, நெல்லிக்காய் சாற் படி.1, வெண்ணொச்சிலைச் சாற் படி.1, கையாந்த கரைச் சாற் படி.1, பச்சை மஞ்சள் சாற் படி.1, வெள்ளாட்டுப் பால் படி.1, பசுவின் பால் காய்ச்சிக் கடைந்த நெய் படி.½, விளக்கெண்ணெய் படி.½, எள்ளெண்ணெய் படி,½, மற்ற சரக்கு வகை விபரம் தேவதாரம், மரமஞ்சள், கருஞ்சங்கிலியம், மக்கலம், அதிமதுரம், சித்தரத்தை, எலம், குங்குமப் பூ, சீரகம், மிளகு இந்த வகைகள் ஒவ்வொன்றுக்கும் விராகனிடை ஆறு க்க அரை விராகனிடையும் பசுவின் பால் விட்டரைத்து முன் சாறெல்லாம் எண்ணெயில் கரைத்து அத்திக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடிக்கும் போது வடி கலசத்தில் குங்குமப் பூவை நசுக்கிப் போட்டு விநாயக பூசைசெய்து வைத்துக் கொண்டு முழுகி வரத் தீரும் வியாதிகள் மேல் கண்ட அறுவகை பீனிசமும் முக வாதம், மண்டைக் குலை, கும்மல் தலை வலி இவை யெல்லாந் தீரும். காதில் நாலு துளி விட்டு முழுகவும்.

நவ பாஷாணங்களுக்கு மாத்திரைக்கு முறிவு கசாயம்:-

அத்தியிலை, அத்தி வேர், அகத்தியிலை, வெற்றிலை, சிற்றமலை, அரசேடு, சிறுகீரை வேர், நீலியும் அத்தி நாழி நீரினில் அவித்துமக்கு கொள்வீராய் பத்தியத்தில் தாழ்வுகள் படிந்த ஒடம் உண்மையே.

இரத்தவாந்திக்கு:-

மோரு பஞ்சின் பிஞ்சிருடு மொசு மொசுக்கைச் சாறு மேகர்த லோடு பசுவின் பாலில் கலந்துமே குடிப்பீரேல் மாதலத்தில் ரத்தவாந்தி மாயமாகப் போகுங் கண்

காதரன் மேலாகியாகக் கண்டிப்பான மறைவிதே.

<u>சகல நச்சு மாத்திரைகளுடைய விஷம் தீர பற்பங்கள்:-</u>

சிறு புள்ளடி யிலையை எலுமிச்சங் காய் அளவு அரைத்து காடி தண்ணீரில் கொடுக்க எவ்வகை நச்சுகளும் முறியும். பற்பங்கள் மாத்திரைகள் செந்தூரங்களில் வந்த விஷமும் தீரும். மூன்று நேரம் கொடுக்க வேண்டும்.

<u>மேக குலை கிரந்திக்கு:-</u>

ரச கற்பூரம் விராகன்.1, ராத்திரிக்கு உடைத்த பசுவின் பாலில் ஊறப் போட்டு மறுநாள் காலையில் எடுத்து சுத்த தண்ணீரால் அலம்பி காய வைத்து எடுத்துக் கொண்டு மிளகு கட்டிடை பத்து இதை இராத்திரிக்கு தண்ணீரில் ஊற வைத்து மறு காலையில் எடுத்து உலர்த்தி கோணிப் பட்டின் மேல் போட்டு தேய்ந்தால் மேல் தோலி யெல்லாம் போய் விரும்படி பிறகு காய் வைத்து கல்வத்தில் இரண்டு வகையும் நன்றாய் தாள் செய்து வடி கட்டிக் கொண்டு கடிதாசால் நான்கு பொட்டணமாக கட்டிக் கொண்டு கருப்பட்டி யில் வைத்துக் கொடுக்கவும். வாய் வெந்தால் வேலாம் பட்டை கசாயம் வைத்து வாய் கொப்பளிக்க குலை கிறந்தி தீரும்.

<u>மேகம் 20-க்கும் விபரம்:-</u>

வாதம்: மேக மலக் கழிச்சல்.4, பிரமன், ருத்திரன், மயேசுரன், சதாசிவன், என நான்கு உண்டு.

வாசம்:- ருத்திரன் கோமயத்தில் பிரமன், நெய்யில் மயேசுரன் மாங்கிஷத்தில் சதா சிவன் கள்ளு வாசமாம்.

சுவை: பிரமன் இனிப்பு, ருத்திரன் புளிப்பு. மயேசுரன் பானகம். சதாசிவன் கசப்பு இனிப்பு.

பித்தம்:- இந்திரன் எமன் கூற்றன் மயிடன் இடபன் அரக்கன் ஆக ஆறு பேர் உண்டு.

வாசம்: யானை மத நாற்றம், எமன் மாங்கிஷம் போல் நாற்றம் கூற்றன் சுண்ணாம்பு நாற்றம், மயிடன் இனிப்பு, இடபன் ஊனீர் போலாம். அரக்கன் தாழை விழுதின் சார் போலாம்.

சுவை: இந்திரன் சவுக்களிப்பு, எமன் அதிகப் புளிப்பு, கூற்றன் கழுநீர் போலாடையா கும். மயிடன், சிறு மீனைக் கழுவின தண்ணீர் போல் காணும். இடபன், பலவிதமான இனிப்பும்: சுவந்தாடும் அரக்கன், பானக்கம் போலிருக்கும் மது போல் வீசும். எறும் பறிக்கும். ஈயாடாது.

<u>சிலேத்துமம்:-</u>

உத்தமன், வித்தகன, மயில் நாலு சுக்கிலன், பிராட்டி, அலவனன், பேயன் சித்தன், குடோரன், கோரன் ஆக பத்து பேர்கள் உண்டு.

வாசம்:- உத்தமன், வென்னீர் போலும் தெளிந்தநீர் போலுமாம். வித்தகன் ஊநீர் போலாம். மயில் தன் விளை நீர் போலாம். சுக்கிலன் நுரையாடும் பிராட்டி மாக்கலந் நீராம். உறைந்திருக்கும் வெண்ணெய் போலாம். அலவனன் சுண்ண நீராம். பேயன் உடை படக்க வொட்டாத வெள்ளமாகும். நீர் போகும். சித்தன் கருப்பஞ் சார் போலாம். குடோரன் உவர் கரைத்த நீராம். கோரன் கடல் தண்ணீர் போலாம்.

சுவை:- உத்தமன் நிணம் போலாம். வித்தகன் காடி வாசம். மயில் கள்ளு போலாம். சுக்கிலன் எண்ணெய் போலாம். திரி கொளுத்தினால் எரியும் எண்ணெயாம். பிராட்டி நீர் இனிப்பு அலவனன் நீரைக் காய்ச்ச உவராய் வீசும். நீர் வற்றக் காய்ச்ச சுண்ணமாகும். பேயன் புலால் நாற்றம் சித்தன் கருப்பஞ் சாறு போலாம். குடோரன் உவர் நாற்றம். அனலில் காய்ச்ச களியாகும். கோரன் உப்பு நுரையா நிற்கும். நீர் கறுமை நாற்றம்.

[illegible]

வீக்கத்திற்கும் சூலைக்கும் குன்ம வாயுவுக்கும்:-

சிறு புளி இலையை இடித்துச் சாறு படி சர் பிழிந்து காலையில் மூன்று நாள் கொடுக்கவும். மசு பத்தியம் மூன்று நாளிருந்து ஒரு நாள் பத்தியம் முறிக்கவும். வெண்ணீருஞ் சோறுஞ் சாப்பிடவும்.. வேறு ஒன்றும் ஆகாது. பத்தியம் முறிந்த பிறகு சகலமும் சேர்த்துக் கொள்ளலாம்.

சர்வாகண சர்வ பஞ்சாட்சர செந்தூரம்:- 11.3.63.

தானென்ற சர்வ கணரசத்தைச் சொல்லுவேன் சர்வ பஞ்சாட்சரமாஞ் செந்தூரப் பேர்
தானென்ற இரண்டு பேர் வந்ததேது காரணம் மிகுஞ் சர்வ குணமென்றதாலே
தானென்ற விபரங் கேள் மக்காள் நீங்கள் சாதகமாய் ரசமூன்று பலந்தான் தாக்கு
தானென்ற கெந்தியிலே பாதி தாக்கு காரகற்கு மேனியுட சாறு வாங்கே.

வாங்கியே ஒரு ஜாமம் அரைத்த பின்பு மைந்தனே கொடுப்பைச் சாறு அவ் வண்ணந்தான்
வாங்கியே குதப்பைச் சாறு செம்முள்ளிச் சாறு வாகை பிதுகளெல்லா மெட்டு ஜாமம்
வாங்கியே நன்றாக ஆட்டி நீயும்வாகாக குப்பியிலே பொடித்துச் சேர்த்து
வாங்கியே அரைக் குப்பியான பின்பு வளப்பாக கொண்டடைத்து மண்ணுஞ் செய்யே,

செய்ததொரு வெள்ளாவி யடுப்பு போலே திறமாக தாளி யொன்று புதைத்து நன்றாய்
செய்த தொரு தாளிக்குள் மணலிட்டுத் திறக்காமற் குப்பி வைத்து மணலுங் கொட்டி
செய்து தொடு தீன்கூடியொடு பூசை பண்ணித் தேவிக்கும் வயிரவற்குந் திருப்தியாகச்
செய்ததொரு தீபாக்கினி ஜாமம் ரெண்டு தீ யெரித்து கடாக்கினியைக் கேளே.

காடாக்கினியாய் ரெண்டு பத்து ஜாமம் கழிந்த பின்பு தினமொன்று வாறப் போட்டு
சேடாக்கினியாய் கொண்டே தான் பூசை பண்ணி தேவி யென்றும் அவளை நன்றாய் தெரிந்து கொண்டு
ஆடாக்கினியாய் செந்தூர முடைத்துப் பாரு அருண நிறம் போலிருக்குமப்பா கேளு.
தீடாக்கினியாய் செந்தூரம் பணந்தான் தாக்கி தேனோடு திரிகடுகு தாரும் கூட்டே,

கூட்டியே யெட்டு நாளுண்ணு மைந்தா் வன்மம் போம் சூலை போங் குளிருந் தேகம்
நீட்டிய தோர் திப்பிலித் தான் சேருங் கூட்டி தின்று விடல் விதுவாகுந்தான் தானும்
நீட்டிய செந்தூரம் பணவிடை தான் பாலில் நீ உண்ணு ஆனை போல் பலமுண்டு
கூட்டியே இருபது நாளிரண்டு நேரம் அருந்தில் அந்துண்டாம் நாற்றம் போமே.

நாற்றம் போம் மேனியெல்லாம் செங்கழுநீர் நாறும் நவநாதி சித்தர் வந்து நட்புச் செல்வார்
மாற்றம் போம் மாயை யென்றதனைக் கும் நீறும் வாசனையோ கற்பூர நாற்றம் வீசும்
ஆற்றம் போம் பல கருவி விடையத்துள்ள அன்மை போகுஞ் செந்தூரம் வேதையாகும்
பார்த்த போக்கிசு வெல்லாங் கை கண்ட வித்தை பணவிடை தான் செந்தூரம் வாங்கிக் கொள்ளே.

வாங்கிய தோர் செந்தூரங் கோழிச் சாற்றில் வக்கையுடனே திங்களொன்று கொள்ளவே தான்
தாங்கிய தோர் கிருமி யென்ற வகையுந் தீருஞ் சாதகமாய் மூர்ச்சை யென்ற தெல்லாம் போகும்
நீங்கிய தோர் பணவிடை தான் குகை உப்பில் நீ சமமாய் வெறுகடி தான் பொடித்து வாங்கி
தேங்கிய தோர் தேனிலே குழைத்துக் கொண்டு தேதி கேளடா குன்மந் தீர்ந்து போமே.
போகுமே யதிசார வாய்வு தானும் பொருமிய கோரி நைச்சல் ரெத்த கழிச்சல் தானும்
போகுமே அக்கினி தம்பித்த வாய்வு புகழான நெஞ்செரிப்பு புளி தேப்பங்கள்
போகுமே செந்தூரம் பணவிடை தான் தாக்கிப் புளி பழச் சார் கொதி தண்ணீர் புகட்ட வொண்ணாய்
போகுமே தாக மந் நீர் கடுப்புப் பொதிந்தோடு முஷ்ணமாமே சம் போம.

மேகம் போம் பணவிடை தான் கஞ்சாச் சாற்றில் வேவித்து ஒரு நாள் கொள்ளக் கேளு
நாகம் போய் மூல முளை தீரு ரெத்தந் தன்னோடு கடுப்பெல்லாந் தீருமப்பா
போகம் போகுஞ் செந்தூரம் பணவிடை தான் வாங்கி பெருங்காய மூன்று பணவிடையாந் தேனிற்
சோகம் போமிருபது நாள் தின்னத் தின்ன சுழன்றுஞ் செரியாமை யெரியாமை போமே.

ஆமை போமெரி வன்மம் வலி குன்மம் சத்தியமாய் குன்மம் வாய்நீரு மசைந்து தள்ளும்
பாமை போம் செந்தூரமளிஞ்சில் சாற்றில் பதித்திடவே நாற்பது நாள் பசினெய் கூட்டம்

தீமை போம் வெடி சூலை யரபதந் முறையாம் தீராப் புண் சேர வெங்குஷ்டமும் போம்
தீமை போம் செந்தூரம் பணவிடையாம். வீதந் செப்பி றென்யப் பான செப்பிறேனே.

செப்புகிறேன் புங்கம்ரைத்த நன்றுய்ச் சிறுமிச்சன் காயளவு தினந்காள் பத்து
செப்புகிறேன் தின்று விடிற் பித்த காசஞ் சேர்ந்த விஷம் பதினெட்டுச் சூலை மன்றே
செப்புகிறேன் செந்தூரம் பணவிடை தானியங் கூட்டியே தேவி செங்கழு நீர் சாற்றில்
உப்பிறேனிருபது நாள் கொள்ளு கொள்ளு உத்தமனே வாத பித்த சிலேற்பனமும் போமே

சிலேஷ்ற்பனம் போகுஞ் சூலை போம் பவுந்திரமும் பிளவை தீராத வாந்தியொடு விஷம்
போகும்

சிலேற்பனம் போமின்னமொரு செந்தூரப் பேர் செப்பக் கேள் ஸ்ரீராம ரத்ன
சிலேற்பனம் போம் கார்மேக ராம பாணம் ஸ்ரீநாராயண மெ செந்தூர மென்பார்
சிலேற்பனம் போகுஞ் சிவனிட்ட பேரொன்றும் சித்தரிட்ட பேரப்பா செந்தூரந்தானே.

ஸ்ரீராம பாண நாராயண செந்தூரம்:-

செந்தூரம் ரசங் பலங் கெளிருபதப்பா. சிறப்பான கெந்தகமோ செப்பக் கேள்
பந்தூரும் பதினைந்து பலந்தானப்பா பாச்சு அரிதாரமிதிற் பலமுமெமுறை யாம்
வந்தூரும் சுத்தி செய்தமனோசிலையைக் கூட்டு மருவியதோர் லிங்கமந்தபடியே கூட்டி
தந்தூரும் இவை இரண்டுந் காரவெடை சேரு சாதக்மாய் எருக்கம் ப்பால் கொண்டு
ஆட்டே.

ஆட்டுவது தும்பைச் சாற் செருப்படிச் சாற் அப்பனே மாதளையின் செம்முள்ளிச் சாற்
மாட்டுவது சாமமொன்று ஆட்டி நீயும் மைந்தனே மாதளம் பூ முருக்கம் பூச் சாற்
ஆட்டுவது இரு சாமம் ஆட்டி எங்கி அடவாகத் தாளாட்டிக் குப்பிக் கேற்றி
ஆட்டுவது முன் போலே எரித்து வார் நீ அப்பனே முருக்கம் பூ போலே ஆகுமடா

முருக்கம் பூ போலிருக்குஞ் செந்தூரத்தை முன் சொன்ன முறையோர்டே வைத்து வார் நீ
பெருக்கம் பூ போலிருக்கும் வாசனை தானப்பா பேசவே இசை வஷ்ட திசையும் பேசும்
சுருக்கம் பூ போலிருக்குஞ் செந்தூரத்தை ஆட்டுகிற முறை சொல்வேனெக் கத்தியாக
செருக்கம் பூ போலிருக்கும் வியாதி யுள்ளே சென்றுகை காற்றினின்று விருந்தினந்தானே.

தானென்ற செந்தூரம் பணவிடை தான் வீதம் சாப்பிடவே அப்பானம் சாற்றக் கேரு
தானென்ற சர்வ்வனை ஆடாதோடை தலிக் கண்டங் கத்திரியும் புட்டு வைத்து
தானென்ற திரிகடுகு வசுத்த நாளும் தலித் தேனில் ரேகித்துக் தினந்தான் பத்து
தானென்ற யிரு நேரம் சொல்லக் கேரு சாதகமாய் ரோகங்கள் சாற்றுறேனே.

சாற்றுகிறேனீளை முதல் மந்த காசம் சரமார்ந்தை சுரமார்ந்தை உள மாந்தை சுவாசம்
மேற்றுகிறேன் விஷக் கடியுஞ் சிலேற்பனம் மூன்று இவை தீரும் அபான மின்னல் கேரு
மாற்றுகிறேன் திப்பிலியை வெதுப்பித் தூளாய் வாங்கியே காசிடை தான் ரெண்டுங் கூட்டி
பாற்றுகிறேன் செந்தூரம் பணவிடை தான் வீத மண்டலந் தானிரு நேரமுன்னக் கேளே.

கேளப்பா சூலைப் புண் ஓட்ட ரோகங்கள் பதினெட்டுக் குட்டங் குறை ரேவு விஷ நாசம்
நாளப்பா கபால வெட்டை கபால சூலை நயமான வண்டு கடி கரப்பான் கட்டு
நீளப்பா கால் கரடு நெஞ்சி குத்து நேராகப் பீனிசமும் மண்டை சூலை
ஏளப்பா கண்ணோய் செவி நோய் செவ்வாய்ப்பு சுகமாகுந் தேகந்தான் சொல்லக்
கேளே.

கேட்கவே சரீர மெல்லாம் பரிமளங்கள் வீசுந் சிவப்பென்ற அந்த நிறந் தெளிந்து காண்
கேட்கவே நாத்திலமிர்த மூறும் கிருபையுடன் நரம்பெல்லா முறுக்கேறும்
கேட்கவே கண் சிவக்கும் தேகம் வாடா திரம்பி நின்ற சுந்த மெல்லா மிகுசித் கொள்
ளும்
கேட்கவே நரை போகும் திரையும் போகும் கெடியாரு ரூமெல்லாம் கிளர்ந்து போம்

போமப்பா வெள்ளுள்ளித் தயிலஞ் சேர்த்துப் புகட்டடா செந்தூரம் பணவிடைமைத்
ஏமப்பா மூன்று நாளாறு நேரம் உண்டாக்கச் சன்னி பதின்மூன்றும் போகும்
தாமப்பா பிரிதோஷமுடங்கல் சூலை தலூர் வாதமும் உடல் வாத முதிர் வாதம்
வேமப்பா மகா வாத மற்புதமாம் வாதம் வெந்து போம் பாக்கவொரு கரப்பான்

காணப்பா பின்னமொரு அரபானத்தைக் கருவள்ளி சுக்கோடே மிளகு நேராய்
பூணப்பா இவை வெதிப்பித் தாளயாட்டி முருங்கைத்தோல் நீரிடவே லோகஞ் சேர்த்து
பேணப்பா யிரு நேரங் கொண்டால் காசம் ஒழிசிற வியாதிகளை யுற்றுக் கேளு
ஏணப்பா முகவாதம் சன்னி வாதம் மெழு வாதம் பக்கு முடு சூழல் வாதம் போமே.

<u>வங்கச் செந்தூரம்:</u>-

வாதமென்ற தெல்பரவு மடையும் 24 போகும் மகத்தான செந்தூரம் பணந்தான் வீதம்
சீதமென்ற நிலவாகைச் சாற்றிலே தினம் பத்து நாள் கொடுக்கச் செயலைக் கேளு
கேதமென்ற கெற்ப விப்புருதி போகும் கொடியான குல் விப்புருதி கூடக்
காதமென்ற வாத உளமாந்தை சரமாந்தை கடி பக்க வாய்வு அண்ட வாய்வும் போகுமே.

வாய்வு வருங் குடல்வாதம் பதினென் ஒலே மகத்தான செந்தூரத்தாலே போகும்
வாய்வு வரும் வங்கச் செந்தூரப் போக்கை வகையுடனே சொல்லுகிறேன் மக்காள் கேளு
வாய்வு வரும் வங்க முண்டால் தங்கமாகும் வாக்கடங்கா மன தடங்கா வங்க வித்தை
வாய்வு வரும் வங்க மல்லோ வாதிகளை யேய்க்கும் மகத்துவமாஞ் சஞ்சீவி யாகும் வாரே.

வாரான வங்கமப்பா பலந்தான் பத்து மைந்தனே சுத்தி செய்து மாட்டக் கேளு
வீரான வெடியுப்பு பலந்தான் ஒன்று விபரமுடன் சட்டிக்குள் வங்கம் வைத்து
தாரான வெடியுப்புக் கூட யிட்டு சாதகமாய் வருத்திடவும் சுவுடு போலாம்
பேரான ஆவரை வேர் வட்டத் துத்தி பொலந்தெறிந்திட சிலக்கமட்டே.

சிலப்பேசு முருக்கம் பூ போலே யானும் தேவிக்கும் வயிர்வல்லும் திரி செய்து
உலப்பேசு செந்தூர மெடுத்துக் கொண்டு கட்டுகிற அபான் முறைக்கக் கேளு
தவப்பேசு சீரகமும் சீனி கூட்டிச் சம பாகஞ் செந்தூரம் அரைப் பணந்தான் வீதம்
நவப்பேசு வெண்ணெயிலே குழைத்துக் கொண்டு நயமாக யீபது நாள் உண்ணச் சொல்லே

உண்டவுடன் கிருச்சன மூத்தசை யடைப்பு ஊஷ்ணம் போர்க்கல்லடைப்பு அளை தீரும்
கண்டவுடன் வெட்டை போமெலம்புருக்கி கருப்பு காணத் உள்ருக்கி பனிரெண்டு வகையும்
கொண்டவுடன் முகமெரிவு உடலெரிவு கால்கள் குடலெரிவு நெஞ்செரிவு தாக மூர்ச்சை
கொண்டவுடன் எக்கிலும் சுரோணிதமாம் மேகங் கோபமில்லை யின்ன மகிற் கட்டக் கேளே.

கேள் மகனே புலத்தியனே மச்ச கேந்திரி கெட்டியாய் சொல் ஆகிற வங்கப் போக்கை
ஆள் மகனே இஞ்சிச் சாற் தெளிவு வாங்கி அரைப் பணந்தான் வீதமங்கே மூன்று தினங் கொள்ள
மூள் மகனே சுர தோச மென்பது தான் மீறு முற்ற கோஷ்ட தரனமுஞ் சேர்த்து
தோள் மகனே செந்தூரங் காந்தம் வங்கம் ஈக்கி ரெண்டு மொரு பணந்தான் தேறுங் கட்டே.

கூட்டியே பத்து நாள் தின்னத் தின்ன கூறுகிறேன் ஆறு வகைக் கிராணி யதிசாரம்
தீட்டியே அதிசார மாறும் நீங்கும் திரமான பிள்ளை பெற்ற சீக்கட்டுந்
நாட்டியே சீக்கிரணி மூல முளையப்பா நயமாகா கிழங்கென்ற கரணைகள் போகும்
மூட்டியே காந்தமொடு லோகம் வங்கம் முத்தமனே யிடையாக உரைக்கிறேனே.

உரையேது காந்தமொடு லோகம் ரெண்டு உத்தமனே இரண்டு பணவிடைகள் ஈக்கு
வரையேது வங்க மங்கே அரைப் பணந் தான் ஈக்கு மைந்தா கேள் திரிகடுகு தேனுங் கூட்டி
நிறையேது முப்பது நாள் தின்னக் கேளு நீர்ப் பாண்டு காமாலை சோகை தாளும்
நிறையேது நீர்ப் பித்தம் வால் பித்தம் வீக்கம் நேராக விஷ பாகமணைத்தும் போமே.

போமப்பா பயித்தியமும் பாண்டு சோகை பொருமலோடு மேனிளைப்பு உப்பிச மீளை
வேமப்பா எலிக் கடியும் விஷ பாகம் காசமென மாந்தை கர்சமொடு சுவாச காசம்
நேமப்பா உள்மாந்தை சுரமாந்தை நீர்க் காம் பீனிசமும் நேராய் போமம்
நாமப்பா இது வெல்லாம் நன்றாய்க் கண்டோம் நாட்டிலுள்ள பெரியோர்கள் நடத்தையாமே.

<u>காரீயச் செந்தூரம்:</u>-

நடத்தையா பின்னமொரு வங்கச் சொல்வேன் ஐயமாகக் காரீயம் பலந்தான் ஒந்து

நிமத்தையாய் கோமயத்தில் பத்திரண்டு வாட்டி நீயுருக்கி சாய்த்திடவும் களங்கம் போகும்
சடத்தையாய் சட்டிக்குள் வங்கம் வைத்து நுட்பமாஞ் சிறுகீரை கத்தாளை வேரும்
திடத்தையா யிடு வேரும் நறுக்கி வாங்கி செப்புகிறேன் வெடியுப்பு பலந்தானஞ்சே.

அஞ்சுடனே வேர் வகையுங் கூட யிட்டு அப்பனே மூன்று தினங் கிண்டு கிண்டு
அஞ்சுடனே வங்கம் செந்தூரமாகும் சோதி நிறை போலிருக்கும் குட்டக் கேரு
அஞ்சுடனே சலம் விட்டு கழுவி நன்றாய் அரைக் களஞ்சி விதை யெடுத்துக் கொண்டு நீயும்
பஞ்சுடனே பார வைத்தாற் போலே மக்காள் பாய்ச்சி யரை பலவிடை தான் செந்தூரங் கேளே.

கேளப்பா தேனிலே யிருபது நாளுண்ணக் கெடியான அஷ்ட குன்மமெல்லாம் போகும்
நீளப்பா பதினெட்டு குட்டந் தீரும் நிலையாத குறை நோவு செவ்வண்டு கடியும்
நாளப்பா கருவண்டு செய்யானிக் விஷமும் நயமாகச் சொறி குட்டம் கபால குட்டம்
வாளப்பா பிள்ளை பெற்ற சீக்கட்டு கிராணி வயிற்று வலி கடுப்பு செப்பு வெல்லாம் போமே

<u>மாத ரச வங்கச் செந்தூரம்</u>:-

பேருகுமப்பா நோய்களெல்லாந் தீராய்ப் பாடுகிறேன் மாத ரச வங்கந் தன்னை
ஆகுமப்பா காரியம் பலந்தானஞ்சு அப்பனே கோமியத்திலுருக்கிச் சாய்த்து
பாகுமப்பா பத்து விசை யுருக்கிச் சாய்த்து பண்பாக புது சட்டிக்குள்ளே யிட்டு
வேகுமப்பா வெடியுப்பு படிதான் ரெண்டு விரைவியே வைத்திட்டு பின்பு கேரு

கேரு நீ புலத்தியனே மச்ச கேந்திரர் கெடியான அரசந் தோல் சிவந்த பட்டை
கேள் மகனே சிறுக வகை நறுக்கி யிட்டுக் கெட்டியாய் வைத்திடுவாய் சிவக்க மட்டும்
கேள் மகனே செந்தூரஞ் சிலையில் கட்டிக் கெடியாக ஒத்தி ஒத்தி யுப்புப் பொங்கி
கேரு நீ யிதன் பேரு எதென்றக் கால் கெடி மாத ரச வங்கச் செந்தூரமாமே.

ஆமப்பா செந்தூர முண்ணுவதற்கு அனுபானஞ் செந்தூர மரைப் பணந்தான் தாக்கி
ஆமப்பா ஆவரையின் சமூலம் வாங்கி உலர்த்தி நன்றாய் சூரணத்தை யிதனோடொக்க
வேமப்பா சீந்தி யுட சர்க்கரையும் சேர்த்து மேலான சீனியொடு தேனுங் கூட்டி
போமப்பா யிரு நேரம் நாற்பது நாளுண்ணப் போகுமப்பா மேக மென்ற நீரழிவு தானே.

தானென்ற ஊளையொடு நர்ப சேபம் சாதகமாய் உட் சுரமும் எரிவு நோயும்
வானென்ற புரு வரிப்புப் பழுப்புமாகும் ஈரமு மனியுதிரக் கொதிப்பு மிவை யெல்லாங் கேரு
கானென்ற தீ யிலிட்ட திரணம் போலே காட்டு முன்னே பற்பமாங் கானுவ மக்காள்
ஒனென்ற திடனே ரசச் செந்தூரம் உத்தமனே காந்தச் செந்தூரங் கானே.

கானப்பா லோகமொடு பலவிடை தான் மூன்று கணக்காக மூன்றையுந் தானென்றாய்க் கூட்டி
பணப்பா திப்பிலாதிச் சூரணமுஞ் சேர்த்து புகழான தேனிலே நாற்பது நாளுண்ண
ஊனப்பா யீளை போமெலிக் கடியும் போகும் உத்தமனே உளமாந்தை சுர மாந்தை சுரம்
வீனப்பா சிலேற்பனந் தான் தொண்ணூற்றும் விழலாகும் வங்கமென்ற செந்தூரம் பாரே.

பாரப்பா நாக சிந்தூரங் காரிய செந்தூரம் பாடுகிறேன் காரியம் பலந்தான் பத்து
நேரப்பா ரசக்கியதை யெடுத்துக் கொண்டு நிலையான மோருடனே கோசல கோமயமும்
சேரப்பா அதனுள்ளே வங்கந்தோறும் சிறக்கவே சாய்த்திடு நீ பயித்திரண்டு வட்டம்
பேரப்பா புதுச் சட்டிக் குள்ளே போட்டுப் பிரட்டி வரரண்டு நாள் வெடியுப்பை யிட்டே.

உப்பேது அரைப்படி தானப்பா நீயும் ஊட்டுவாய் சிவந்த நாயுருவி கொண்டு
கொப்பேது ண்டு ண்டாய் நறுக்கியிட்டு குறைகாமல் சிறுக யிட்டு சிவக்க மட்டும்
தப்பேது முருக்கம் பூ போலேயாகும் சாதகமாய் சேவியடா வாமபுகை
எப்போதுஞ் செய்து வர முறை விடாமல் என் மக்காள் அனுபான மியம்புறேனே.

இயம்புறேன் கூகை நீர் சீரகம் வெள்ளாரம் எலமொடு கஸ்தூரி மஞ்சள் சுக்கு
இயம்புறேன் வாய் விளங்க மலை வேப்பம் பிசிரம் என் மகனே விளாம்பிசினுங் கரு வேலாம்பிசிரம்
இயம்புறேன் மர மஞ்சளிவை வகைக்குச் சமன் தான் என் மக்காள் ஒரு பலந்தானிடித்துக் கொண்டு
இயம்புறேன் ஆவரையின் விதை தானப்பா எண்ணெண்ணு பலம் நீயு மெடுத்துத் தாக்கே

ஈக்கள்* காக்கப்பா, முருங்கை விதை சமுத்திராப் பழமும் கூட்டு நீ சேர்ந்திட கிழங்கு கூடக்
காக்கப்பா நிலைப் பனையின் கிழங்கு நாளும் கைசேர ஒவ்வொன்றும் பலந்தான் பத்து.
காக்கப்பா அபினியும் பலந்தானுக்கு சுகமான களிலா விக்கல் வண்ணத் சேர்த்து
காக்கப்பா தாமரை விக்கல வண்ணத் சேரச் சொல்லுகிறேன் பிராய விக்கல் வண்ணங் காணே.

காணப்பாயிது வெல்லாம் கேக்கான் காய் சாற்றில் கல்ரவே யாட்டியதைக் காளாய் வாங்கிப்
பூணவே வெருகடி நீ யந்தக் காலிற் புட்டடா சேந்தி சர்க்கரையு முன்ன.
கோணவே பலம் பத்து தாக்கிச் சேர்த்து எரணத்தோடொக்க வதைச் சேர்த்துக் கொண்டு
காணவே வெரு கடியிற் சீனி சேர்த்து உண்ணயிலே குறைமை கண்டால் தேனுங் கூட்டே.

தேன் கூட்டு நடாவல் வெண்ணெய் கூட்டு திறமாவிரு நேர மண்டலந் தானுண்ணு
தேன் கூட்டு நீரழிவு பதினெட்டு வகையும் நீராக சுக்கில மூத்திரப் பாலையும்
தேன் கூட்டு ரத்த கண்டி சீக்கிரணி சிக்கியே மந்தொரத்திப்புச் சிதறிப் போகும்
தேன் கூட்டு மேக மென்ற தவைத்தும் போகுஞ் செந்தூர மறிந்தவற்குச் சிறுமை போமே.

<u>அன்ன பேதி செந்தூரம் அஷ்ட குன்மத்திற்கு</u>:-

அன்னபேதியை தனக்கு வேண்டிய மட்டும் கல்வத்தில்போட்டு பழச் சார் விட்டரைத்து வில்லை செய்து உலர வைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலை மண் செய்து புடம்புட செந்தூரமாகும். அதை யெடுத்து அஷ்ட குன்மம் எட்டுக்கும் திரிகடுகு சூரணத்தில் கொடுக்கவும். புளி, புகையிலை போகம் விட்டு விடவும். கார பதார்த்தம் விட்டு விடவும். தீரும் வியாதி பித்தம் கஷயம், சிலேத்துமம் 96-ம் வாதம் 84 ம் தீரும்.

*****

Verified and compared with the original manuscript.
2/9/63

Part III

வைத்திய அட்டவணை.

11.3.63.

சுரக் கட்டுக்கு மருந்து:-

பழைய கூழாங் கட்டியை இடித்து வஸ்திர காயம் பண்ணி கையாந்தகரைச் சாறு சுவற விட்டு மூன்று நாளூர விட்டு திப்பிலி விராகன் பொடி செய்து போட்டு கிளறி விட்டு வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் ஏழு நாள் உண்ணவும். கிரமந் தப்பாது. கை கண்டது.

இருமல் எல்லாவற்றிற்கும் மருந்து:-

சத்தி சாரணை வேர், நல்ல சாரணை வேர், வெள்ளைச் சாரணை வேர், வெப்பன் வேர், சிறு குறிஞ்சான் வேர், பெருங் குறிஞ்சா வேர், சிக்கா முட்டி வேர், அமுக்கரா வேர், கொளிஞ்சி வேர், காஞ்சொறி வேர், கண்டங்கத்திரி வேர், பேய்க் குமட்டி வேர், ஆடாதொடை வேர், ஊர் முருங்கை வேர், காட்டு முருங்கை வேர், முருந்தொட்டி வேர், சுண்டை வேர், முள்ளி வேர், கோரைக் கிழங்கு, வேலிப்பருத்தி வேர், வாதமடக்கி வேர், வெள்ளெருக்கு முள்ளு விடா வேர், தேற்றின் வேர், எழு முள்ளு வேர், ஆதண்டை வேர், நிலவேம்பு வேர், சங்கம் வேர், முள்ளுக் கொளிஞ்சி வேர், கல்லுக் கொளிஞ்சி வேர், சங்கங் குப்பி இவ் வகைக்கு விராகனிடை.க, மருவான கிழங்கு விராகனிடை.உ, பழுபாகல் கிழங்கு விராகனிடை.உ, புளியம் பிரண்டை கிழங்கு விராகனிடை.உ, செம்பிரண்டை கிழங்கு விராகனிடை.உ, அஞ்சப் பட்டை விராகனிடை.க, புரசன் பட்டை விராகனிடை. சுக்கு, மிளகு, ஓமம் விராகனிடை. சிராம்பு, வசம்பு விராகனிடை.உ, பெருங்காயம் விராகனிடை.உ, சாதிக்காய் விராகனிடை.க, சாதிபத்திரி விராகனிடை.க, கருஞ்சீரகம் விராகனிடை.க, குரசாணி ஓமம், கடுக்காய் விராகனிடை வாயுவிளங்கம் கடுகுரோகணி விராகனிடை.க, வலம் புரிக்காய் விராகனிடை.க, புளியம் பட்டை விராகனிடை.க, உள்ளி விராகனிடை.க, நற்சீரகம் விராகனிடை.உ இவ் வெல்லாம் இடித்துப் பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி வனமூலிகை யெல்லாவற்றுக்கும் மூன்று வள்ளம் எருமை மோரில் போட்டு நான்கு மூன்று கொதி கொதிக்க விட்டு வடித்து பிழிந்து கொண்டு சக்கையை எறிந்து போட்டு மதைக் காய் வைத்துக் குழம்பான வாரே இந்தச் சூரணம் போட்டு கிண்டி இறக்கிக் கொண்டு சீனிச் சட்டி காய வைத்து ஒரு சேர் வெள்ளுள்ளி உரித்துப் போட்டு நசுக்கிப் போட்டு சற்றே நல்லெண்ணெய் தெளித்துத் தாளித்து நல்ல வெல்லம் பலம்.க, சர்க்கரை பலம்.உ கற்கண்டு பலம்.உ இவ் வெல்லாம் போட்டுக் கிண்டி இறக்கிக் கொண்டு மறுநாள் ஒரு படி பச்சைத் தேன் விட்டு பதம் பண்ணிக் கொண்டு முள்ளி யளவு கொள்ளவும். பதினைந்து நாள் இருபது நாள் ஒரு மாதங் கொள்ளவும். இரண்டு நேரமுங் கொள்ளவும். பத்தியம் புளி விடவும். வெந்நீர் பிடிக்கவும். இதற்கு முன் சொன்ன வியாதியெல்லாந் தீரும்.

சகல வாய்வுக்கு வட வக்கினி:-

பத்து நார்த்தங்காயை வளையமாக அறுத்து உப்பு ரொம்ப அரித்துக் கீழும் மேலும் ஒரு படி கல்லுப்புக் கொட்டி ஒரு படி தண்ணீர் விட்டு செம்பிடமாக ஒரு மண்டலம் வைத்து எடுத்து எச்சன் காய் பிரமாணம் மிற்றுக் குழம்புக்கு கொடுக்கவும். காரப்பு தவிர்க்கவும். இதற்கு தீரும் வியாதி பயித்திய வியாதி, பயித்திய வாய்வு, குன்ம வாய்வு, இராக் காசு, பொருமல், அசீரணம், மந்தாக்கினி, மற்றுமுண்டான வியாதி யெல்லாந் தீரும். கை கண்டது.

அஸ்தி உலர்ந்தவர்க்குக் லேகியம்:-

ஒரு சாம்பல் பூசணிக்காயைச் சீவி விதை வாங்கிப் போட்டு வில்லையாக நறுக்கி உலர வைத்து இதற்குக் கடைச் சரக்கு திப்பிலி பலம்.உ, சுக்கு பலம்.க, சீரகம் பலம்.ரு, கருஞ்சீரகம் பலம்.ஒ இலவங்கம் பலம்.௨, ஏலம் பலம்.௨, வாயு விளங்கம் பலம்.க, கைச்சோலம் பலம்.ச கூட்டி பண்ணி பசணிக்காயை நெய்யிற் பொரித்து இவ் வெல்லா முரலில் போட்டு இடித்து வஸ்திர காயம் பண்ணி தேன் படி.க,

நெய் படி.க, விட்டுக் காய வைத்துக் கொதிக்கிற போது யிந்தச் சூரணத்தைச் சிறுகச் சிறுக அள்ளிப் போட்டுத் துளாவி இது வெல்லாம் போட்டு பிறகு இரண்டு சேரை சர்க்கரை போட்டுத் துளாவி யிறக்கி நெய் பழகின கலசத்தில் வைத்துக் கொண்டு தீத்தன் காயளவு அந்தி சந்தி கொள்ளவும். மருந்து தின்று முடிந்தபிறகு ஒரு பானை நிரைய பொன்னாங்காணி யிட்டு அதின் பேரில் குருசி சிற்று மணக்கு முக்கு யிட்டு வேக வைத்து அந்த முத்தை யெண்ணை யூற்றி எடுத்துக் கொண்டு திப்பிலி பலம்.௪, சீரகம் பலம்.௪, எலிசி பலம். இது மூன்றும் பொடி செய்து எண்ணெயிற்று விகாலமே ஒரு கரண்டி உலர்த்திச் சாப்பிட்டதின் பிறகு ஒரு கரண்டியுங் கொள்ளவும். சுரம் தலைவலியும் குலை இரைச்சலின் உடம்பும் இவை தீரும்.

மதனகாமேசுவர வடகம்:-

சுருதிக்காய், சாதிபத்திரி, ஏலம், செங்கழுநீர், கோஷ்டமும், பறங்கிப் பட்டை, சீரகம், குரோசாணி ஓமம், அசமதாகம், அதிமதுரம், சதகுப்பை அதிவிடையம், கசகசா, பூனைக்காலி விரை, உருந்து, நீர் முள்ளி விரை, என்று இவை வகைக்கு விராகனிடை.க, அபினி கிராம்பு முந்திரிகைப் பழம், இலவங்கம் பத்திரி இவை வகைக்கு விராகனிடை.உ, இவை யெல்லாங் கூட்டி இளநீர் வார்த்தரைத்து இதற்கு கற்பக் சமன் கூட்டி ஒரு கருத்த தேங்காய் கண் திறந்து தண்ணீர் வடித்துப் போட்டு அரைத்த மருந்தெல்லாம் அதில் போட்டு கள்ளிக் கொம்பு கொண்டரைத்து சீலை மண் செய்து எரு வடுக்கிச் சுட்டுக் காய் வெடிக்கும். அப்போதெடுத்து சரி சமன் சர்க்கரை கூட்டி அரைத்து கழச்சிப் பிரமாணம் உருண்டை பண்ணிப் புடைக் கலயத்தில் வைத்துக் கொண்டு ராமாறு வாங்கி இரச வற்கம் பாலுங் கூட்டச் சகல தோஷம் போம். நித்தி குறைந்டாம்.

கிரந்தி எண்ணெய்:-

விளக்கெண்ணெய் படி:க, சாதிக்காய் விராகனிடை.க, சாதிபத்திரி விராகனிடை.க, கோஷ்டம் விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.க, ஏலம் புரிக்காய் விராகனிடை.உ, சண்பகப்பூ விராகனிடை.உ, மிளகு விராகனிடை.உ, சுக்கு விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை.உ, கடுக்காய் தோல் விராகனிடை.ரு களிப் பாக்கு விராகனிடை.ஙு, கற்றாழைச் சருகு விராகனிடை:ரு, இது வெல்லாம் பொடி செய்து வைத்துக் கொண்டு மிருள்ளி பலம்.ரு, சீந்திப் பழம்.ய, முடக் கொற்றான் சாறு பிடி.க, வாத மடக்கிச் சாறு பிடி:க; வெருகன் கிழங்கு பலம்.க, எண்ணெயிலே முன் சொன்னதெல்லாம் கூட்டிப் பசுவின் பால் படி:க, கூட விட்டு எலுமிச்சன் சாறு விட்டுப் பிறந்து அடுப்பிலே வைத்து எண்ணெய் பதம் வருகிற முன்னே வெருகன் கிழங்கு மிருள்ளி கட்டிப் போட்டு அதின் பிறகு கடைச் சரக்குத் தானெல்லாம் போட்டு மெழுகு பதத்திறக்கி வைத்துக் கொண்டு யேதிக்கு எண்ணெய் மூன்று நாள் கொள்ளவும். பிறகு மூன்று நாள் நிறுத்தி மூன்று நாள் கொள்ளவும். இப்படி ஒன்பது நாள் கொள்ளவும். சரீரத் திள்ள புண் தீர்ந்து போம். வச்சிர காய்மாகும். இதற்குப் பத்தியம் துவரைப் பருப்பு பசுவின் பால் நெய் அரைக்கீரை, முருங்கைப் பிஞ்சு நச்சுப்பு, கூட்டவும். புளி ஆகும்.

மேகம் யிருமல், இளைப்பு, சகலசன்னிக்கும்:-

முத்தில வச்சப் பட்டையைக் கொண்டு வந்து தின்ன பிறகு எருமை மோரில் பிசைந்து நன்றாயிருக்கக் கொண்டு இளகிய பதமாகக் காய்ச்சி முள்ளிக் காய் போலே உருண்டை பண்ணிக் கொண்டு வைத்துக் கொள்ளவும். நேரம் ஒரு உருண்டை கொள்ளவும்.

சகல கன்னுக்கு மாத்திரை:-

நேர்வாளம் பலம்.ள, கடுகு ரோகணி பலம்.ரு, பொன்னரிதாரம் விராகனிடை.க, இரசம் விராகனிடை.க, நெல்லிக்காய் கெந்தகம் விராகனிடை.க, நேர்வாளம் உள் முளை வாங்கிப் போட்டு பசுவின் பாலில் அவித்து கழுவிப் போட்டுக் கத்தாழஞ் சாறும் தயிரும் பாலும், மோரும், கோமயமும், சமன் கூட்டி வகைக்கு அரைத்து மூன்று நாள் மூன்று சாம மரைத்து நாரத்தை விளங்காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு உருண்டை கொடுக்கிற வகை ஆறுக்கு வெந்நீரில் கொடுக்கவும். வயிறு போகும். அபான மறிந்து கொடுக்கவும். சகல சன்னியுந் தீரும். கண்டது.

தோஷத்துக்கு கலிக்கம்:-

வெள்ளைச் சாரணை வேர், சிறுக்கீரை வேர், பொன்னாங்காணி வேர், சுக்கு, மிளகு, திப்பிலி வசம்பு, சமன் கூட்டி சித்தன் சாறு விட்டரைத்து கியாழ செய்து கண்ணி லிடவும். சகலமுந் தீரும். கை. கண்டது.

தோஷத்திற்கு:-

ரச மூன்று கல் பட்ட கொட்டாங்கச்சி சட்டிக் கரி, பனை வெல்லம் இவை வகைக்கு விராகனிடை.உ, சுத்தி செய்த நேர்வாளம் விராகனிடை.க, இவை வெல்லாம் தேங்காய் பால் விட்டு ஒரு சாமமரைத்து சிமிழில் வைத்துக் கொண்டு ஒரு பணவிடை நாக்கில் தேய்த்து வெந்நீரில் கொப்பளித்துப் போடவும். இதற்கு தீரும் வியாதி தோஷம் விக்கல், மூச்சு, எங்கல், பித்த வாந்தி, சிலேற்றும தியக்கம், ஜ்விர தோஷம், சர்ப தோஷ தோஷ நெஞ்சு விஷமென்பட்டது எல்லாந் தீரும். உள்ளுக்கு ஒரு பணவிடை கொடுக்கவும். உத்திராட்சத்தை உரைத்து நாவிற்றடவிப் பார்க்க கருத்தால் சிலேஷ்ம தோஷம். வெளுத்தால் சூத்திர தோஷம். மஞ்சள் நிறமானால் பிரம்ம தோஷமென்ற றியவும்: இது மூர்ச்சைக்கு மருந்து: பசு வெண்ணெய் விளாங்காயளவு நெய் சட்டியிலே சரு மூலமும் கொண்டு வந்து அரைத்து சீந்தல் காயளவு கூட்டி வெண்ணெயோடு சட்டியிற் போட்டு சீருள்ளி பலம்.க, வசம்பு அருத்துப் போட்டு காய்ச்சி பொன்னிறமானவுடனே இறக்கி நெய்யை வடித்துக் கொண்டு தினம் இரண்டு காசிடை கொடுக்கவும். தீரும் கை கண்டது.

தோஷத்திற்கு கஷாயம்:-

சுக்கு விராகனிடை.ங, கொத்தமல்லி விராகனிடை.உ இவை கஷாயம் வைத்துக் கொடுக்கவும்.

மூன்று மாறலுக்கு மருந்து:-

அதிமதுரம் விராகனிடை.உ, வில்வ வேர் விராகனிடை.ச இவை இரண்டும் அரைப்படி நீரில் காய வைத்து உழக்காளவானதே காசிடை தேன் விட்டுக் கொடுக்கவும். சுரம் விடும். கை கண்டது.

அதிசாரத்திற்கு மருந்து:-

அவரையை உதிர்த்து காயப் போட்டு புளி யிர்க்கு அவ்வளவு ஊர்த்து இரண்டும் ஒன்று பண்ணி முள்ளி மேலில் போட்டு குழம்பாய்க் காய்ச்சி ஒரு பிடி யானைப் போலே குடிக்கவும். இப்படி மூன்று நாள் குடிக்கவும்.

குளிர்மை எண்ணெய்:-

கிராம்பு விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.க, மாசக்காய் விராகனிடை.உ, கருஞ்சீரகம் விராகனிடை.ரு, சீரகம் விராகனிடை.ரு, ஏலரிசி விராகனிடை அதிமதுரம் விராகனிடை.க அகத்திரி மஞ்சள் விராகனிடை.ரு, யீருள்ளிப் பால் படி.க, சிற்றாமணக் கெண்ணெய் படி.க, சிற்றாமணக்கெண்ணெயும் ஈருள்ளி பாலும் ஒரு சட்டியில் வார்த்து மெத்தென எரிய விட்டு கடுகு சிதறண்ட பதத்தில் கடைச் சரக்குத் தூள் பண்ணி அதில் போட்டு தாளாவி இறக்கி வைத்துக் கொண்டு க, உ உஷ்ணம் சுரங்களுக்கு கொடுக்கவும். கை கண்டது.

வெட்டு காயத்திற்கு மருந்து:-

தவ முருங்கைப் பட்டை வேர் வெட்டி உலர்த்திப் பொடி பண்ணி வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு சீலைக்கு உமிழ் நீர் தடவி தூள் சீலைக்குத் தடவி புண்ணிலிட வும் எந்த காயமும் ஆறும். கை கண்டது.

நாலா நாள் மாறலுக்கு மருந்து:-

ஓட்டரை விராகனிடை.க, கற்சாப்பொடி விராகனிடை.க, இரண்டும் அரைத்துப் பொடி பண்ணி வாயில் போட்டு வெந்நீர் குடிக்கவும். காரப்பு புளிப்பு தவிர்க்கவும்.

மாறல் வரும் பொழுது கொடுக்கவும்.

ஈரக் குலை எரிச்சலுக்கு மருந்து :-

அவுங் கொழுந்து பிடி. க, பழம் புளி புழுங் கருப்பட்டி ஈர வெங்காயம் விளக்கெண்ணெயிற் குழப்பி இப்படி மூன்று முறை முழுங்கவும்.

இரத்த வாந்திக்கு மருந்து :-

வெற்றி வேர், விலாமிச்சன் வேர், முருங்கை வேர் பட்டை, கோரைக் கிழங்கு சந்தனம்; கோஷ்டம், கோரோசனை ஒரு சமனாகக் கூட்டி அரைத்து தேன் விட்டு முலைப் பாலில் கொடுக்கவும் தீரும். கை கண்டது.

மூக்கில் இரத்தம் விழுகிறதற்கு மருந்து :-

கோழி முட்டை வெள்ளைக் கருவில் சுண்ணாம்பு கூட்டி மெல்லிய சீலையில் பிடித்து இரண்டு நெரியில் அசைவில் போடவும்.

இருமலுக்கு மருந்து :-

திப்பிலி, நெல்லி வற்றல், நெல்மாவு, சர்க்கரை இது எல்லாஞ் சமன் கொண்டு அரைத்துப் பொடி பண்ணி தேனிற் கொள்ளவும். இருமல், வரட்சி இசப்பு புகைச்சல் இது தீரும்.

கனத் தெண்ணெய் :-

தகரை வேர், நரிப் பயித்தன் வேர், பழம் பாசி வேர், பொன்னாங்காணி வேர், சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், செங்கத்தாரி வேர், சிறு புள்ளடி வேர், நப்பாலை வேர், வில்லைப் பத்திரி தழையும் நாயுருவி வேர், கடைச் சரக்கு சுக்கு விராகனிடை. க, இரண்டு தட்டிடை ஈர வெங்காயம் வசம்பு விராகனிடை. வெள்ளை வெங்காயம் விராகனிடை. ௨, வறுத்தத்தின விளக்கெண்ணெய் படி. க இது வெல்லாம் நறுக்கி அதில் போட்டு சூரிய புடம் பண்ணி அருக்குத் தக்கவாறு கொடுக்கவும். கார்ப்புப் புளிப்பு தவிர்க்கவும். புழுங்கலரிசி வெள்ளருக் சோறும் கனமென்னப் பட்டதற் கெல்லாம் பருவரை மாந்தத்திற்கும் இது சகலத்திற்கும் ஆகும்.

இசவ கெந்தி சூரணம் :-

சிறுதை வேர் விராகனிடை. உஎ பசுவின் பாலில் சுத்தி பண்ணவும். சுக்கு திப்பிலி மிளகு நெல்லிப் பருப்பு வாய் விளங்க முத்தக் காசு, ஏலம், இலவங்கப் பத்திரி, கடுக்காய் இவை வகைக்கு விராகனிடை. க இடிச் சூரிய புடம் வைத்து இடித்து வஸ்திர காயம் பண்ணி இதற்குச் சரி சமன் சர்க்கரை கலந்து தினம் ஒரு வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி பித்தம் உஷ்ணம் பிரமியங் களவு வாசம், வாய்வு, மூல வாய்வு விஷ வாய்வு, சூலை, அக்கினி மந்தம் இது யெல்லாந் தீரும்.

இருமலுக்கு மருந்து :-

சுக்குத் திப்பிலி ஐய்ய கடுகு வோமம் ஒக்கக் கொண்டொரு மண்டலம் உண்பீராய் குக்கு குக்கெனக் கொள்ளு மிருமலும் போம் கொக்குப் போல வருவார் குயிலரே.

பெரும்பாட்டு அக்கிர சஞ்சீவி :-

அதிமதுரங் கோஷ்டம், சாதிக்காய், திப்பிலி, திப்பிலி மூலம், லவங்கப் பட்டை, சுக்கு, கருஞ்சீரகம், கடுக்காய், இந்துப்பு, கொடுக்காய் புளி, ஓமம், கொத்து மல்லிகை கஸ்தூரி மஞ்சள், பழம்புளி அரத்தை சர்க்கரை இது வெல்லாம் சமனாக் கூட்டி முலைப் பால் வார்த்தரைத்து அவரைப் பிரமாணம் குளிகை பண்ணி பெரும்பாட்டுக்கு எருமைத் தயிர் நாழியும் ஆதண்டை யிலைச் சாறு அரைப்படி விட்டுச் சரித்துக் கொடுக்கவும். கை யிட்டுப் பிடித்தாப் போலே நிற்கும்.

மாலைக் கண்ணுக்கு மருந்து :- கோழிஅவரையிலை எலுமிச்சங் காயளவு பசுவின் பாலிற் கலக்கி கொடுக்கவும். கை கண்டது:

எழு நாயருக்கு:-

உப்பு வேப்பெண்ணெயில் சரிக்குக் கொடுக்கவும். கை கண்டது.

அசுவ கெந்தி சூரணம்:-

சம்பராஷ்டகம், கண்டு பறங்கி, அதிவிடையம், இலவங்கப் பட்டை, இலவங்கப் பத்திரி, நாகேசுரம், ஏலம், மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம், சுக்கு இலவங்கப் அரேணுகம் தேவதாரம் சடாமஞ்சி மிச்சிட்டி, எட்டி மதுகம், தாளிச பத்திரி, சாதிக்காய், கைச்சோலம், பேரளம், விலாமிச்சன் வேர், கொற்றமல்லிகை இவ்வை சமன் கூட்டி சூரணம் பண்ணி இந்த சூரணத்திற்கு சரி சமன் அமுக்கிலாம் வேர் சூரணங் கூட்டி இதுக்கெல்லாம் சரி சமன் சர்க்கரை கூட்டி வெரு கடிப் பிரமாணங் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி அஸ்தி சுரம், அதிக சுரம், க்ஷயம், பாண்டு ரோகம், சோகை, சுவாச காசம், பயித்தியம், மேகம் ௨௰, சிலேற்பனம் ௨௰, அலைப்பு வாந்தி அசீரணம், மூர்ச்சை இர வாய்வு அமல பித்தம், சிப்பிறணம், தொண்டைப் பிகை, கரப்பான், யீழை பிருமல், மந்தார காசம், பக்க வாய்வு இவ வெல்லாந் தீரும். பரிசுத்தப்பாடு. கை கண்டது.

பூப்பட்ட கண்ணுக்கு மருந்து:-

பறம் பலகரையாலைத் செருத்த கீழா நெல்லி வேர், ஒவ்வொரு பலகரைக்கு ஒவ்வொரு வேர் சுத்தி ஒரு பீங்கானிற் போட்டுப் பலகரை அமுங்க சீத்திப் படி சாறு விட்டு வெய்யிலில் வைத்து நீர் சுவறின பிறகு எடுத்து மத்தித்துப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொண்டு கண்ணைச் சுழப் பிற மையாய் பூசவும். சிவப்பு மாறுகிற போது ஒப்பரிக்கு போம்: கண் நொந்தாப் போலேயிருக்கும். பயந்தோலையில் உல. கை கண்டது. *

மகா வில்வாதி லேகியம்:-

சித்தாமுட்டி, பேராமுட்டி, முன்னை வேர், வெலியடைச்சான் வேர், கொடு வேலி வேர், நொச்சி வேர், பிரண்டை வேர், சிறுகாஞ்சோறி வேர் இவ் வகைக்குப் பலம்.௧, வில்வ வேர் பலம். 60 சுக்கு, மிளகு, வாய் விளங்கம், திப்பிலி, திப்பிலி மூலம் கண்டு பறங்கி ~~நாககேசரம்~~ நாககேசர கறகடக சிங்கி, தாளிச பத்திரி, அரத்தை, சீரகம், ஏலரிசி, சிறத்தி நாகரம், முந்திரிகைப் பழம், பேரிச்சம் பழம், அசமதாகம் இவ் வகைக்குப் பலம்.௫, மலை தாங்கி வேர் விராகனிடை.௧, பழைய வெல்லம் பலம் 60 தேன் படி. 4 முந்திரிகை 60 பலம் வில்லை வேர் கூட்டி நாலு வள்ளத் தண்ணீர் வார்த்து இரண்டு படியாகக் காய்ச்சி வைத்துக் அறுபது பலம் வெல்லமும் இந்தக் கசாயத்தில் போட்டு காய்ச்சி நால்வகை பண்ணியாரக் கொதி வந்த சமயத்தில் கடைச் சரக்குகள் போட்டுக் கிளறிக் தேன் விட்டு மெழுகு பதத்தில் இறக்கி புன்னைக் காயளவு தின்னவும். இதற்குத் தீரும் வியாதி அமல வாய்வும், காச்சுவாசம், வாய்வு அந்திர காச அஸ்தி சுரம், அஸ்தி சூலை மேகரோகம் மற்றுமுண்டான சர்வ ரோகமுந் தீரும். கை கண்டது.

சர்வ வியாதிக்கு மருந்து:-

வமக் கிளிஞ்சி முத்தின நண்டு இந்துப்பு பொருங்காயம் முள்ளி கருசீரகம், சுக்கு மிளகு, இவ சமன் கூட்டி அரைத்துப் பிறகு அந்த மருந்து அரைத்து ஒன்றாய் சரிக்குப் பொடி செய்து சூரிய புடம் வைத்து தினம் வெரு கடிப் பிரமாணந் தின்னவும் அஷ்டக விசை, நீர்மை, உடல் வாதம், கல்விப்புருதி, அருவை, கெற்ப விப்புருதி, பாண்டு ரோகம் சர்வ வியாதியுந் தீரும்.

அக்கர விளிக்கு மருந்தும் குணமும்:-

நல் நொந்து குளிர்ந்து கசி சுரந் தோன்றும். நகம் பல்லும் மந்தர

முகங் கருத்த திரைப் போலே யிருக்கும். இதற்கு மருந்து பொன்னாங்காணி வேர், சிறுக் கீரை வேர், நன்னாரி வேர், மஞ்சட்காளிச் சாறு, கோவைச் சாறு, நல்ல சந்தனம், அதிமதுரம், குகை நீர், ஏலரிசி, நற்சீரகம், கோரோசனை இவை எல்லாங் கட்டி முலைப் பாலில் வார்த்தரைத்து கருப்புக் கட்டியும் சீந்தில் பழச் சாறுங் கூட்டி வெண்ணெயிற் கொடுக்கவும்.

<u>அக்கிர குண்டிக்க மருந்தும் குணமும்:-</u>

குணம் உடம்பெல்லாங் கடுக்கும். நாக்கு சிவந்து தண்ணீர் தவிக்கும். வயிறும் நெஞ்சும் எரியும். ஈரல் நோகும். இதற்கு மருந்து புளியிலைச் சாறு கருப்பு கட்டியும் நெய் விழுதுங் கூட்டிக் கொடுக்கவும்.

<u>அரக்க பாலின் குணமும் மருந்தும்:-</u>

உடம்பெல்லாம் கனத்துக் கொண்டு நச்சடிச்சார்ப் போலெயிருக்கும். அமர்ந்த சுரமாகத் தோன்றும். தலை விண்ணென்று நொந்து சுரம் அதிகமாகத் தோன்றும். நாக்கு வெந்த கரி போலேயிருக்கும். கொண்டையு மீரலுக்கு வயிறுக்கும் கொப்புளிக்கும் கட்டிச் சோறு கட்டினாற் போலே யீரல் கண்டிருக்கும். யீரல் வெடிக்கும். ஐந்து நாளாறு நாள் வயிற்றிலே யிரத்தங் கழியும். இதற்கு மருந்து புளியிலைச் சாறு, முந்திரிகைப் பழம், ஏலரிசி, சந்திப் பழச் சாறு வுருகல் அல்லது காடி கூட்டிக் கொடுக்கவும். வயிறு கழிச்சல் வெருவாய் எடுத்தால் மாதுளங் காய் பிஞ்சு அத்திப் பிஞ்சு புத்தன் பட்டை இவை வைத்துப் பிழிந்து வடி கொண்டு நற்சீரகம் நெல்லிப் பருப்பு மேல் பொடி தூவிக் கொடுக்கவும். சோறு கொடுக்கவும்.

<u>அரக்க குறக் குமரியின் குணம்:-</u>

சரீர மெல்லாம் புண் போலே நொந்து உடம்பெல்லாம் தடி கொண்டடிச்சார் போலே கணுக்கள் தோறும் நொந்து வாய் கசக்கும் / வாயெடுக்கும். நாக்கும் பல்லு கறுவும் பச்சை கழச்சிக்காய் போலே மூக்கிலே இரத்தம் விழும். அக்கர மீறக் கபாலம் வெடிக்கு மென்றறியவும். ஒரு நாளொன்றுக்கு அரை நாழிகை விழுந்து ஒரு நாளைக்கு குறுணி யென்று சொல்லவும். இப்படி மூன்று நாள் விழுந்தால் அந்தா நாள் அறு நாள் சாவு. இதற்கு மருந்து ஒரிலைத்தாமரை இலையும், புளியிலைச் சாறுங் காடியுங் கூட்டிக் கொடுக்கவும். இப்படி மூன்று நேரங் கொடுக்கவும்.

<u>மூக்கில் விழுகிற இரத்தம் நிற்க மருந்து:-</u>

நீர்ப் பலாம் வேர், அறு வாழலி அரைத்துக் காடியில் மூன்று நேரங் கொடுக்கவும்.

<u>இந்த அக்கரமெல்லா வற்றிற்கும் நாக்கு வழிக்கிற மருந்து:-</u>

மஞ்சட்காளிச் சாறு, நாயுருவி வேர் இந்துப்பு ஒரு பணவிடை, கருஞ்சீரகம் பணவிடை. க, சந்திப் பழச் சாறு வார்த்தரைத்துப் பசுவின் வெண்ணெயிற் குழப்பி நாக்கிற் தடவி நாயுருவி இலை கொண்டு வந்து வழித்துப் போட்டு இளவெந்நீர் வார்த்துக் கொப்பளிக்கவும்.

இந்த எழு வகை க்ஷயமுதல் எல்லாவற்றுக்கும் உண்டை பொன்னாங்கண்ணி வேர், சிறுக்கீரை வேர், நன்னாரி வேர், ஒரிலைத் தாமரை சமூலம் வசம்புத் தாமரை வளையம் நிலப்பனை, அல்லிப்பவு, செங்கழுநீர் கிழங்கு மிளின் இலை, கொட்டிக் கிழங்கு, நிலப் பூலாங் கொழுந்து வெச்சிப்பூ, நந்தியா வட்டப் பூ, கோரைக் கிழங்கு, வெற்றி வேர், விலாமிச்சன் வேர், இலுப்பைப்பூ, சொரைக் கொழுந்து, கரும்பு, நல்ல சந்தனம், கோவைக் கொழுந்து, செஞ் சந்தனம், கலை கொம்பு, ஓமம், ருத்திராட்சம், முந்திரிகைப் பழம், பேரீச்சம் பழம், கற்கண்டு, ஏலரிசி இலவங்கப் பட்டை அதிமதுரங் கோஷ்டம், குகை நீர், கஸ்தூரி சாஸ்திர வேதி, சண்பகப்பூ, நற்சீரகம் இவை சமன் கட்டிக் கருப்பஞ் சாறு இளநீர் முலைப்பால் இவைகளிலொன்றிலாவது விட்டரைத் சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி இந்த எழு வகை அக்கிரத்திற்கும் முலைப் பாலிலே ஒரு உருண்டை இடவும். மீறினால் வெண்ணெயில் கொடுக்கவும். இதற்கு மீறினால் புளியிலைச் சாற்றில் கொடுக்கவும். மெத்த மீறினால் ஒரு நாளைக்கு மூன்று நேரங் கொடுக்கவும். வயிறு கழியாவிட்டால் இரண்டு உருண்டை வெந்நீரில் கொடுக்கவும். வயிறு கழியும். அக்கிரமக் காச்சல் ஐந்து நாளையில் ஆறு நாளையில் கொல்லும்.

அ பரியார்த்தி னமாருல் ஏழு நாளையில் விடும். விட்ட ஏழா நாள் ஆறா நாள் ஜுரக்கம் வரும். வந்த ஏழா நாள் ** விடும். முந்தின படியே மருந்து கொடுக்கவும். இந்த சுக்கரம் கொடுக்க இருபத்தேழா நாள் விடும். மிளகும் பாரம் உச்சந் தலையில் தேய்க்கவும்.

குண்டி யக்கிரத்துக்கு:–

சிறுள்ளி வைத்து தயிரிற் பிசைந்து பிழிந்து கொடுக்கவும். கை கண்டது. இரத்தமாய் **வயிறெடுத்தால் நெல்லி யிலை இடித்து எருமை மோரிற் பிசைந்து கொடுக்கவும். கண்டது கிருஉஷ்டாந்திரம் மெய்:

கெற்ப விப்புருதிக்கு மாசா மாசம் மூன்று நாள் வலி எடுக்கிறதற்கு:–

நாயுருவி சமூலமும் உலர்த்தி சுட்டுச் சாம்பலாக்கி மூன்று கரண்டி சீந்தில் பழச் சாற்றில் ஒரு கொட்டைப் பாக்களவு சாம்பலிலே போட்டு கிண்டினவுடனே கொடுக்கவும் பத்தியமாகாது. நாலு நாள் புளி, மிளகாய், பாகல்காய், நெய் தயிர், மோராகாது. அசனத்தின் மாத்திரம் பாக்கு போட்டுக் கொள்ளவும். மற்றபடி யொன்றுமாகாது. அந்தப் படி மறு முறைக்கு கொடுக்கவும். முருகிற வென்னீர் மோண்டு மூன்று நாளைக்கும் முந்தின சாம்பல் சுட்டு வைத்துக் கொள்ளவும். கை கண்டது.

பேய் வீக்கத்திற்கு காமாலைக்கு மருந்து:–

மாட்டு பசட்டெலும்பு கொண்டு வந்து விரட்டியில் புடமிட்டு நேத்த தாள் பன்னி விளக்கெண்ணெய் ஒரு பிடியிலே அந்தத் தாள் போட்டுச் சரிய புடமாக வைத்து கோழியிறகு கொண்டு வீக்கத்து மேலே பூசத் தீரும். வியாதி பேய் வீக்கம், பச வீட்டு வீக்கம், மாவளான் வீக்கம், அல்லங்கரைக்கு அல்லாது இரண்டு உருண்டு உடைந்து போம். பத்தியம் பிரந்தி பண்டமாகாது. இது கை கண்டது. அனுபோகம்.

காமாலைக்கு மருந்து:–

கீழா நெல்லியைக் கொண்டு வந்து அரைத்து ஒரு பிடி பசுவின் பாலில் எலுமிச்சங் காயளவு நேக அரைத்து கலக்கி காலமே மூன்று நாளைக்கு மூன்று நேரம் கொடுக்கவும். காமாலை, ஊது காமாலை, வரக்காமாலை, மஞ்சட் காமாலை, கர்மாலை, என்பட்டதெல்லாந் தீரும். தப்பாது. கை கண்டது. பத்தியம் பசுவின் பாலுஞ் சோறுந் குடிக்கவும். உப்பு, புளி யாகாது. மறு பத்தியம் மூன்று நாளிருக்கவும்.

ஊரு சுத்தி லத்தியைப் பச்சையாக்க கொண்டு வந்து பசு பாலைத் தண்ணீராகப் போட்டு மூன்று நேரம் காலமே பிசைந்துக் கொடுக்கவும். காமாலை விஷபாகந் தீரும்.

எந்த வலிப்புக்கும் நசியம்:–

சாரணை வேர், கொண்டு வந்து நன்றாய் அய்யத் கட்டி சிறு நீரில் பிசைந்து இரண்டு நாசியிலும் விட்டு உடனே தலையைத் தாக்கி எடுக்கவும். பெண் பிள்ளைக்கு ஆண் பிள்ளை சிறு நீரிலும் ஆண் பிள்ளைக்கு பெண் பிள்ளை சிறு நீரும் கட்டி விட நிற்கும். கடினமான வலிக்கு மூன்று நேரம் விடவும். சித்தே நிதான வலிக்கு ஒரு வேளை விடவும்.

சர்வ விரை யோசனம்:–

சாதிலிங்கம், வெண்காரம், மிளகு, திப்பிலி, சயிந்திர லவணம், அதிவிடையம், நெல்லி வற்றல், சுக்கு, தான்றிக்காய், வசம்பு, இலைக் கள்ளிப் பட்டை, கடுகு ரோகணி, பெருங்காயம், கருஞ்சீரகம், ஓமம், குரோசானி ஓமம், இந்துப்பு கோரோசினை இவை கடுக்காய் இவ்வ வகைக்கு விராகனிடை. க, நேர்வாளம் பலம் விராகனிடையும் எருமைச் சாணியிற் புடமிட்டுச் சிவக் கீரைச் சாற்றில் புடமிட்டு இரண்டாய் பிளந்து முளை வாங்கிப் போட்டு எல்லாங் கூட்டிச் சீந்தல் பழச் சாற்றில் விட்டு நன்று யரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு விரை யோசனைக்கு இடவும். வயிறு நில்லா விட்டால் மோருஞ் சோறுங் குடிக்கவும். இரும் நில்லா விட்டால்

மோருஞ் சோறுங் கொடுக்கவும். சேற்பனத்திற்கு நெஞ்சு மார்பு உலர்ந்து தலை கனக்கிறதும். இதற்கு மாதளஞ் சாற்றிலிடவும். பத்தியம் வெள்ளைச் சோறும் உண்ணவும். உஷ்ணத்திற்கு உள் காச்சலுள்ளவர்கள் உள்ளங் கை உள்ளங் கால் எரியும். இது மந்தார சன்னி. இதற்கு நெல்லிக்காய் சாற்றிலிடவும். பத்தியம் பசுவின் மோரு சாதமிடவும். வாய்வு குன்மத்திற்கு ~~[illegible]~~ கீழ் வயறு இழுக்கும். கை கால் சுழன்று வரும். வெள்ளோக்காளம் எடுக்கும். வாய் நாறும். இதற்கு வல்லாரைச் சாற்றிலிடவும். பத்தியம் பசுவின் மோருஞ் சோறு மிடவும். விஷமாய் வயறு நொந்தால் கொப்பும் சுத்தி நொந்தால் நடக்க மாட்டாமல் நெஞ்சும் பிடரியும் கழுத்தும் தலையும் நொந்து சுரம் வந்தால் ஒரு முருங்கைச் சாற்றிலிடவும் பத்தியம் தயிருஞ் சாதமும். சேற்பனத்திற்கு தீவன்மில்லை, வயிறு யிரைந்து மாப் போலே கழியும். உடம்பு கனத்திருக்கும். இதற்கு வெள்ளரிலிடவும். பத்தியம் தயிருஞ் சாதமும். அமல பித்தத்திற்கு மார்பு எரியும். உப்புச முண்டாம். புளி யேப்பம் வரும். இதற்கு வெள்ளாட்டு கோமயத்திலிடவும். பத்தியம் நொய்யரிசி சாத மிடவும். சரீரம் இளைத்திருந்தால் மாதுளஞ் சாற்றிலிடவும். பத்தியம் கஞ்சி கொடுக்கவும். தன் மாங்கிஷத்திற்கு வாய் நீரூறும். வல முத்திர மிழும். நீர் மஞ்சள் நிறமாய் இறங்கும். இதற்கு செவ்வகத்திப் பட்டைச் சாற்றிலிடவும். பத்தியம் கஞ்சி சாதமு மிடவும். நால் வகை கைப்பிசத்திற்கு உப்பிசம் வயிறு பொருத்திருக்கும். இதற்கு நெய் சட்டி சாற்றிலிடவும். பத்தியம் பாலுஞ் சோறு மிடவும். கவிர்ச்சை நீர்கோவை குளிர் காச்சலுக்கு சுக்குக் கசாயத்திலிடவும். விரோசனத்திற்கு வெல்லத்திலிட்டு சுக்கு கடுக்காய் இது இரண்டுங் கசாயம் பண்ணிப் பிறகு கொடுக்கவும். விரோசனம் வயிறு கழியும். பெரு வயசுக்கு மிளகு சாற்றிரசம் விரைத் தயிலம் வாங்கிச் சந்தனம் பத்தில் தடவி முகர்ந்து பார்க்க விரோசனமாகும். அப்பி வல்லா விரையை வேலைச் சாற்றிலரைத்து பொடி பண்ணி மறுநாள் பிழிசுத் கலத்தில் தப்பி வெய்யிலில் வைக்கத் தயிலம் விழும். அந்தத் தயிலம் சிமிழிலடைத்துச் சற்றே தொப்புளில் தடவ வயிறு கழியும்.

விரை யோசனம்:-

அளிஞ்சி விரைப் பருப்பு உரி நேர்வாளப் பருப்பு உரி ~~[illegible]~~ இரண்டும் தண்ணீர் வார்த்து அரைத்துக் காய்ச்சி தயிலம் வடித்து பரணியில் வைத்துக் கொண்டு செவ்வரளிப் பூவை பந்துக் கட்டி தயிலத்தை அந்தப் பூவில் தடவி ராத்திரிக்கு பனியில் வைத்துக் காலமே பத்து விசை முகர்ந்து பார்த்தால் பத்து விசை வயிறு கழியும். வயிறு மெத்தப் பேதிச்சுச் சரீரம் ~~[illegible]~~ பலன் குறைந்தால் மோருஞ் சோறு வுண்ணவும். வயிற்றுக் கடுப்புக்கு எந்த வகைக்கும் எலுமிச்சம் பழம் கருகச் சுட்டு விழுங்கிப் போடவும். வெண்காரம் விராகனிடை.க, எருமைச் சாணி மூன்று தரம் தேச்சுக் கழுவிப் போடவும். பனை வெல்லம் விராகனிடை.க, வெள்ளை வெங்காயம் விராகனிடை.க, அபினி விராகனிடை.க இதெல்லாம் அம்மியில் வைத்து நன்று அரைத்து மூன்று நேரங் கொடுக்கவும் வயிற்றுக் கடுப்பு எல்லாம் நிற்கும்.

அஸ்தி சுரத்திற்கு:-

பசுவின் மோர் படி. 4 நல்லெண்ணெய் படி.க, கண்டு பரங்கி, சுக்கு, தானிக்காய், கடுகு ரோகணி, ~~கடுகு ரோகணி,~~ கடுக்காய், சந்தனச் சிராய், பற்படாகம், கோஷ்டம், கடுகு, மிளகு, விராகனிடை வகைக்கு ௩ மோர் எண்ணெயுங் காய வசவு கண்டின பதம் மெழுகு பதம் வருகிற போது இறக்கி வைத்துக் கொண்டு கடைச் சரக்கெல்லாம் தூள் பண்ணி அதில் போட்டுத் தாவி வைத்துக் கொண்டு எட்டு நாளைக்கு இரண்டு தரம் தலைக்குத் தேய்த்து உடம்புக்குப் பிடித்து நாலு நாழிகை யிருந்து அரப்பிட்டு முழுகவும். தினம் தினம் காலமே ஒரு பட்டுத் தண்ணி உள்ளுக்கு வாங்கவும். பத்தியம் புளி, புகை உஷ்ணமான காரிய மாகாது.

சூலை, சூர்மாந்தம், அக்கரக் கால், வயிறு எரிச்சல் இதற்கு எண்ணெய்:-

வுருத்தாத்தின வெண்ணெய் படி.க, அகத்திச் சாறு படி.க, வெந்தையம் படி.க, வசம்.உ, வெள் வெங்காயம் பெருங் கட்டியாய் இரண்டு சுர வெங்காயம் அரிந்து தூள் படி.௩ அகத்திப் பட்டை தூள் பண்ணி ஒரு விளாங்காய் மாதிரி இந்த எண்ணெயும் சாறு கலந்து அடுப்பில் வைத்து எரியிட்டுச் சாறு வத்தி பதம் வருகிற முன்னே வெங்காயத் தூள் போடவும். சிவந்த

அகத்திப் பட்டைத் சாள் போடவும். முன் சொன்ன கடைச் சரக்கும் போட்டு இறக்கிக் கொண்டு நாலு நாள் முன்று நாளான்டு சங்கு வார்க்கவும். பத்தியம் உப்பு, புளி யாகாது.

ஏங்கலுக்கும் அழுவைக்கும் மருந்து:- **12.3.63.**

வருத்தாத்தின எண்ணெய் படி.இ, பசுவின் பால் படி.இ, வெந்தையம் அரைத்து விழுது விளாங்காய் பிரமாணம் பிண்டம் கொழுந்து அரைத்து விளாங்காய் பருப்பு சம்பு.௧ வெள் வெங்காயம்.௧ இது வெல்லாம் கரைத்து எரியிட்டு கருகு சிவந்த பதத்தில் இறக்கிக் கொள்ளவும். வயிறு கழிய கொடுக்கவும்.

அழுவைக்கு மருந்து:-

மாப்பிரண்டை முத்தினது கொண்டு வந்து கொள்ளும் போல திருக நறுக்கி நிழலுலர்த்தி சூரணம் புன்னைது பிடி.௧, கல்லுப்பு பிடி.௧, கச்சைக் கருவாட்டுத் தலையிடித்து சூரணம் பிடி:௧ இவை மூன்றும் கலந்து கொண்டு தினம் வெரு கடிப் பிரமாணம் கொள்ளவும். புளி, சுரந்திப் பண்டமொன்று மாகாது. கை கண்டது.

ஆராத புண்ணுக்கு மருந்து:-

கடுக்காய் விராகனிடை.௫, ஒடு கருகக் சுட்டு பின்பு விரை வாங்கிப் பேட்டுச் சூரணம் செய்து வெள்ளைக் குங்கிலியம் விராகனிடை.௩, நன்றாய் பொடிசெய்து இவை இரண்டும் கலத்திற் மேல் வைத்துப் பசுவின் வெண்ணெயிற் போட்டு குழைத்து இரசம் ஒரு குன்டு மணி மாதிரி அம்மான் பச்சரிசிச் சாற்றில் சுத்தி பண்ணி மருந்துடன் வைத்து நன்றாய் செம்பு கொண்டிழைத்து பதத்திலே எடுத்து கொட்டாங்கச்சியில் வைத்துக் கொண்டு புண்ணுக்குப் பூசவும். ஆராத புண் ஆறும். புளியந் தழை வெந்நீரில் கழுவவும்.

நேத்திர வாய்வுக்கு:-

அமுக்கிராஞ் சாறு புடி.௧, ஆதன்டை யிலைச் சாறு பிடி.௧, நல்லெண்ணெய் படி.இ இது மூன்றுங் கலந்து எண்ணெய் சட்டியில் வார்த்து எரிக்கவும். எண்ணெய் வந்த பதத்தில் கையில் பிடித்து ஒரு பிடி மிளகு அந்த மிளகில் போட்டு மிளகு சுருக விட்டு நருப் பதமானர்ப் போலே இறக்கிக் கொள்ளவும். ஒன்பது நாளைக்கொரு முழுக்காய் முழுகி வரவும். காலமே எண்ணெய் தேய்த்து அந்தி சாய் பச்சை பயறப்பிட்டு முழுகவும். நேத்திரங் கண்ணில் தண்ணீர் விழுகிறதும் பசை பசைப்புக் கண் புகைச்சலும் தீரும். கிரந்தி பண்ட மாகா

வாத ராட்சிதன்:-

கொடி வேலிப் பட்டை விரர்கனிடை.௰௨, மிளகு விராகனிடை காட்டு முருங்கை கிழங்கு சாறு விட்டரைத்து நன்றாய் மிளகு பதத்தில் சிறு சுண்டக் காயளவு குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு கன்னிக்கு இஞ்சிச் சாற்றிலிடவும். முருங்கைப் பட்டையில் அங்கராவை வைத்து அரைக்கவும். காய்ச்சி யிடவும். சுர மென்னப் பட்டதுக்கு வெந்தயக் கசாயத்திலிடவும்.

விடாச் சுரத்திற்கு:-

ஆவாரங் கொழுந்து நொச்சிக் தழை நாரத்தந் தழை ஆடாதொடைத் தழை துளசித் தழை சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், வெள்ளுள்ளி சரி சமனுக்கி ஒரு படி தண்ணீர் விட்டு ஒன்றரைப் படியாகக் காய வைத்து மூன்று நாள் குளிகை யிடவும்.

விடாக் குளிர் சுரத்துக்கு:-

ரெட்டை பேய் மிரட்டிக் கசாயத்திலிடவும். தொந்த சுரத்திற்கு ஓமம், சீரகக் கசாயம் வைத்து இடவும். அஜீரணத்திற்கு வெற்றிலைச் சாற்றிலிடவும். ஒழிப்புக்கு இஞ்சிச் சாற்றிலிடவும். மந்திப்புக்கு தேனிலிடவும். மாந்த வலிப்புக்கு பசுவின் பாலில் முலைப் பாலில் வெந்நீரில் இழைத்திடவும். சகல குழிச்சலுக்கு பசுவின் பாலில் சிறு பூளை கசாயத்திலிடவும். பாஷாணக் குளிகை கொடுத்து மயக்கம் வந்தால் இதற்கு அச்சக் கரியும்

குளிகையுஞ் சரி நிரை நிறுத்தி வெந்நீர் கொடுக்கவும். பத்தியந்தோடே செய்யவும் தீரும்.
கை கண்டது.

அஜீரணத்தில் வரும் மருந்தும்:- .12.3.63.

சோறு சோறு எடுக்கும். சோறாய் தானே வயிறு கழியும். வயிறு வலிக்கும். இதற்கு மருந்து: குதிரை லத்தி கொண்டு வந்து வெந்நீரில் பிசைந்து வடி கட்டி அரைப்படி கொடுக்கவும் தீரும்:

வாய்வு குடோரிக்கு மருந்து:-

சுக்கு, மிளகு, திப்பிலி, வாயுவிளங்கம், ஓமம், சீரகம், கார்போகரிசி, வெள்ளுள்ளி, செவ்வியம், சித்திர மூலம், கல்லுப்பு, மன்றுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, நவச்சாரம், எவச்சாரம், சத்தி சாரம், பெருங்காயம், சாதிக்காய், முக்காவளை வேர், வெள்ளைச் சாரணை வேர், மாமஞ்சிக் கிழங்கு இவை வகைக்குப் பலம்.க இவையெல்லாம் பொன்னிறமாய் வறுத்துக் கொண்டு எலுமிச்சன் பழச் சாறு விட்டு அரைத்து நாற்படிச் சாற்றிலரைத்து சின்ன கழச்சிக்காய் பிரமாணம் உருண்டை செய்து புதுத் தொட்டியில் வைத்து நன்றாயுலர்த்தி பிறகு அசனத்தின் பேரிலே ஒரு உருண்டை அந்தி விடிந்து இரண்டு வேசி காலங் கொடுத்து வரவும். இந்தப்படி ஒரு மண்டலம்.வ, மண்டலம் கொடுத்து வரவும். வியாதிக்குத் தக்கபடி கொடுக்கவும். பத்தியம் புளிப்பு, புகை, கிரந்திப் பண்டமாகாது. முருங்கை ரக்கிரி சின்ன கோழிக் குஞ்சு வெள்ளாட்டு வக்ல், மிளகு, உப்பு கூட்டவும். இதற்கு தீரும் வியாதி அளிக்கி, உடல் வாதம், பீலிகை, மகோதரம், பாண்டு, குன்மம், மூல வாய்வு அஜீரணம், அக்கினி மந்தம், உடல் வாய்வு புமை, அருவை . தீரும்.

பொன்னாங்காணித் தயிலம் முறை:-

ஆமப்பா பொன்னாங்காணித் தயிலங் கேளு அப்பனே காணிச் சாறு படி இரண்டு
நாமப்பா கரிசாலைச் சாறு படி காணென்று நலமான நெல்லிக்காய் சாறு படி யொன்று
தாமப்பா பசு வெண்ணெய் படி யிரண்டு தப்பாமலாவின் பால் படி யிரண்டு
வேமப்பா மதுரம் பல மிரண்டு விடுகான முன் பாலா லரைத்துப் போடே.

2. போடப்பா மெழுகு பதந் தனில் வடித்து புகழாக முழுகி வரத் தீரு நோய் கேள்
நட்டப்பா நேத்திர நோய் கொண்ணூற்றும் நிலைமை கெட்டக் காசமெல்லாம் நீங்கிப் போகும்
வாட்டப்பா பித்தமெல்லாம் வாங்கிப் போகும் வழுமாகு நேத்திரக் கள்ளாழியே மீரும்
நாட்டப்பா தலைவலி நோய் யெல்லாந் தீரும் நலமான கீள்காய் நெல்லித் தயிலங் கேளே.

இருமலுக்குப் புகை:-

பிரண்டைச் சாற்றை வெள்ளைச் சீலையிற் தோய்த்து மறு நாள் தேங்கா மரட்டி தேங்காய் பாலில் தோய்த்து நனைத்து உலர்த்தி மறு நாள் பிரண்டைச் சாறு மேனிச் சாறு பிரளத் தோய்த்து பொன்னரி தாரமதில் பிலக்கத் தோய்த்து பிரட்டாதே உலர்த்தி திரியாகக் கட்டி வைத்துக் கொண்டு மோருஞ் சோறுண்டு நல்லெண்ணெய் குழி திரி நனைத்துக் திரி போட்டு திரியைப் பறித்து அவித்துப் போட்டு ஊரி வந்த புகையை உண்டால் இருமல் போகும்.

வாக்குதவி அருள் புரியும் பாடல்:-

முறை யிலீ வேண்டாம் மறை நால் வாங்கு குருக நருக்கி குளிர் உலர்த்தி தருக இடித்துத் தான் வடி கொண்டு விஞ்சை குரிக்க சுங்கென்று விண்டிடும் ஐயுங்கிலியுஞ் சவ்வென்று மண்டலமோதா வாக்கு மகமார் அன்றிடையில் நின்று அருள் புரிவாளே..

மலட்டு வலிக்கு புழு விழ மருந்து:-

நனிமிலைச் சாறு எண்ணெயிலா ற்றிக் குடிக்கிடவும். திரிகடுகு சாளயாட்டி கழச்சி விரை ஓமம், இந்துப்பு நேராய் வைத்துக் இடித்து முன் பொடியுங் கூட்டி நல்லெண்ணெய் விட்டு காட்டி ஊற்றிடத் தீரும்.

புண் ரணம் எனப்பட்டதற்கு முன் மாயக் குழம்பு :-

ரத்தம் விராகனிடை, ரசக விராகனிடை, முனிகர் வெந்த மண்டை ஒடு விராகனிடை. இதை வெல்லாம் பொடி பண்ணி கலத்தில் வைத்து காசி செம்பு கொண்டு பசுவின் வெண்ணெயில் போட்டு இமைத்து எடுத்து சிமிழில் வைத்துக் கொண்டு புண்களுக்கு இடவும். இது கை கண்டது.

பித்த வாத சுரத்திற்கு மருந்து :- கவி.

அரிய நன்னாரி விலாமிச்சன் வேரதிமதுரம் சந்தமொட்டாதோடைத் தரு மிலையிர் சுயிரண்டு போயப். புடலந் தக்க முந்திரிக்காய் பழமுங் கடுகு ரோகணி பெரியதோர் பேரீச்சன்பழத்தி னேடும் பெரிய தொரு கொத்தமல்லி பன்னிரண்டு அரிய நல்ல காசிடையே யெட்டொன்றுக்கி அருந்தவே பித்த சுரம் வாதந் தீரும் பித்த வாத சுரம்.

பித்த வாத பித்த சுரத்திற்கும் வாத சேற்பமத்திற்கும் :-

சீந்திலோடு விலாமிச்சை பொன் முசுட்டை சிறந்த முத்த சுக்கு நிலவேம்பினேடு போந்த வெப்பாலை விரை பற்படாகம் பொருந்த காத்சோரியும் கொத்தமல்லி தீர்ந்த பன்னிரண்டு காசிடையே கட்டிச் சிறக்க விரு நாழி நீர் எட்டொன்றுக்கி அருந்த பித்த வாத சுரமுந் தீரும் அடைவா யென்றே.

வாத பித்த சுரத்திற்கு :-

வில்லை வேர் கொத்தமல்லி சித்தாமுட்டி விளங்கவேர் நெற் பொரியும் பயறு மட்டு கட்டி நல்ல தேன் வகைக்கு இரண்டு காசு ரக்கம் நலமாக விரு நாழி நீருவுக்கா யில்லை யெனச் சர்க்கரையு மிரண்டு காசிடை போட்டுக் கொடுக்க சத்தியொடு வல்லதொரு வாத பித்தம் வரந்தாகே முனி யுரைத்த வளமை சொல்லே.

வாத ~~[illegible]~~* பித்தம் சேற்பமத்திற்கு கஷாயம் :-

பெருங்குரிஞ்சா வேரும் பெற வகை வில்லை வேரும் பேசறிய பாகரி வேர். பின்னை யென்னும் மறு வினையாம் அக்கினி மந்தத்தை போக்குவிக்கும் மகி தீபனமுமாய் மடவா யன்றி மறவதொரு வாத சேற்பமந் தீரும் மாமுனிவருரைத்தபடி வளமை சொல்லே.

மூத்திரக் கிரிச்சி வாத பித்தத்திற்கு :-

இரு நன்னாரி வேரு மிளங் கீரை சிறு முசுட்டை மருவிய பஞ்ச மூலந் தருதியே வகைக்கு நிலை பம்டொன்றுக்கு பருவ மூத்திரக் கிரிச்சி வாத பித்தமும் தீரும்.

சேற்பம சுரத்திற்கு மருந்து :-

ஆடாதொடையிலை சீந்தி அருநில வேம்பு முள்ளி வேட்டன் கண்டங்கத்திரி வெரியல் பற்படாகம் பன்னிரு காசு எடுத்து நாளி உழக்கதாக வடித்துக் கொடுக்க குடிப்பீராய் கொடங் செழிந்த சேற்பம சுரம் குளறிக் கருகப் போமென்றேன்.

தாப சுரத்திற்கு மருந்து :-

நன்னாரி விலாமிச்சன் வேர் நருங் கோரைக் கிழங்குடேடு கன்று இலுப்பைப் பூச் சந்தனச் சிராய் கற்பூரம் பன்றும் மதுர மெலாமிச்சம் பன்னிரண்டு காசிடையே கட்டிப் பன்னு புனலிரு நாழி உழக்காயறிந்திடில் தாப சுரம் போமே.

இதுவும் ஆடா தொடை யிலையோடு அதிமதுரம் பன்னிரண்டு காசுக் கட்ட விரு நாளி நாழக்காய்க் காய்ச்சி கட்டிக் குடிப்பீராய் நீடிய தாகத்தோடு நீங்கிடும் சுரமுந் தாமும் பாடிய முனிவன் பழம் பொருளாகு மென்றென.

இதுவும் ~~[illegible]~~* *முந்திரிகை பேரீச்சன் பழத்தினேடு முதிர்ந்த மாதுளம் பழம் பன்னிரண்டு எந்த காசிடையுமிரு நாழி நீரிய பாக முழக்காய்ச் சர்க்கரையும் போட்டு வந்தமாய்க் கொடுப்பீராகில் நசியினேடு வலி தாப சுரமுந் தீரும்.

சேற்றும சுரத்திற்கு கசாயம்:-

கண்டங் கத்திரியின் வேரும் க்திக்க வரச் சோம்பு சீந்தியுங் கொண்டு பனிரெண்டு காசிடையுங் கூட்டி யிரு நாழி உழக்கா யண்டத் திப்பிலி அரைக் காசு மதனிடையாகப் பொடித்துக் கூட்ட விண்ட வாத சேற்றும சுர மெலிந்தே போகுங் கண்டீரே.

தோஷ சுரத்திற்கு மருந்து:-

முத்தமோடு வேர்க் கொம்பு கொத்தமல்லி முதிர்ந்த சீந்தி சுக்கு பேய்ப்புடலும் விதை யகற் கடுக சிங்கி யோடு மிக்கரண்டு பெருங் குரும்பை கடுகுரோகணி உத்த மிரு வில்வ வேர் சமனதாக ஒன்றரைப் பலமு மிரு நாழி நீர் வற்றி உழக்காய்க் காய்ச்சி மற்ற திப்பிலிப் பொடியுங்கூடக் கூட்டி வந்த தொரு தோஷ சுரமோடுந் தானே.

அதிசார சுரம் இதற்கு மருந்து:-

சந்தன முத்தக் காசும் தனி யிரு வேலி சுக்கு பந்த மிலாமிச்சை பற்படாகம் சமமாய்க் கூட்டி முந்திரு நாளி நீருழக்காக்கி கூட்டி மூன்று நாள் கொள்ளத் தாகம் வந்திடு தாக மற்ற மதிசார சுரமுந் தீரும்.

சன்னி வாத சுரத்திற்கு மருந்து:-

கண்டு பறங்கி யோர் முத்தக் காசு கட்டிப் பற்படாகம் தாழச் சொரியும் சுக்கு விண்டு நிலவேம்பு திப்பிலியும் கோஷ்ட மியல சீந்தி முள்ளி வேர் சேர வெல்லாம் கொண்டு காசிடை பத்து நாழி நீரிற் குறையவே உழக்காய்க் கொள்வீராகில் உண்ட சுரத்திற் சதிர் மயரமுடன் சில சிரப்பு முள்முலை மூச்சும் படமென்றே முனிவருளிலே பகர்ந்தனர் முன்னருந்த மிழின் படியே கண்டாய்.

தாபசுரம் சத்தி சுரம் இதற்கு மருந்து:-

சித்தா முட்டி கொத்தமல்லி சுக்குத் தண்ணீர் நாழியாக்கி முக்கனை வாக பொரித்துப் போட்டு முதிரவே கஞ்சி கொண்டால் எத்தனை தாப சுரமாகில் யிசைப்பு மாகில் யிரண்டு நாழிகைக்கு நிற்கும் சீரத்திலேடும் சத்தி யென்ற வில்வ வேர் கூட்டிக் காய்ச்சி தானருந்த தாப சுர மட்டுமுந் தானே.

பழைய சுரம் இதற்கு மருந்து:-

பங்கம் பாலை வேர் கொம்பு பருத்த முத்தக் காசுடனே புங்காஞ் சோரி அதில் வெகு மடலாய்க் காய்ச்சிக் குடிப்பீராகில் பண்டு புற னமொடு சன்னி வாத சுர மிரவொடு பறந்து போமே.

சீத சுரத்திற்குமருந்து:-

நாரத்தை யிலை உள்ளி நொச்சி வேர் நற்றுளசி யிரு வங்கயு முட்டி யிரண்டும் பெறொத்த கடுக்கிரைய சீரகத் தொட்டியல்பாகப் பனிரெண்டு காசிடையே கூட்டி சீராக விரு நாழி நீருழக்காய்ச் செப்பமுடன் கொள சீத சுரத்திலேறு பாருக்குள விஷ சுரமுங் கூடத்தான் பறந்து போமே.

சத்தி சுரத்திற்கு மருந்து:-

நெற் பொறியுஞ் செப்பயம் வில்வ வேரும் நெற்ச் சீரக மிளகு சுக்கும் முற்படவே தண்ணீர் காயர் கெட்டொன்றுக முத்திய பின்னத தலையே கொள்வீராகில் சொற்ப பெரிய சத்தி சுரம் பொங்கிக் கழியும் சுர பித்தம் பொல்லா நாற்றமும் விட்டு சுங்க படராமலே மீது தப்பாதென்று சாற்றினரே.

இவும் சிற தேக்கு பற்படாக முத்தக் காசு, சீந்தி யொடு நன்னாரி சிறுகாஞ் சோரி நற நாற்றுள்ள தேவதாரம் கோஷ்டம் வந்திகமும் பேய்ப்புடல் தன்டனே சுக்கு எரி காற்றப் படாமிடத்திலிருக்க தாச்சி இரு போது மின்னீரை பருகி விட்டால் குறையாமல் மூன்று நாளைக் குள்ளே தான் சுரிய தோர் நாளை நாளைக் குள்ளே தாளப் பறியாத பழ வெப்புப் பாறிப் போகும் பண்டையொருப்பதன்மை பகருந் தானே.

விஷ சுரத்திற்கு மருந்து:-

சுக்குக் கடுக்காய் நிலவேம்பு சுகமாய் வேப்பன் கோல் சீந்தில் தைக்க நிம்புட னும் பெடியாவும் கரிக்க வெண்மெரு களஞ்சு ஒக்க நசுக்கி யிரு நாளி உமக்காய்க் காய்ச்சிக் குடிப்பீராய் கந்த விஷ சுரங்கள் பலவு காக் விட்டோடிடுந் தப்பாதே.

வயிற்று வலி சுரத்திற்கு மருந்து:-

சுக்கு வல்லாரை வெந்தையத்தோட மாச்சக்காய் சுட்டியே ஒக்கக் கஷாயம் எட்டிலொன்றுக்கி ஒதிக் கொள்வீரா மாசில் பக்க வலியு முன் மூலம் பகரும் வாய்வு சிரானியுட னக்க வயிற்றில் உள்ளெரிப்பு காக்கம் ஆரோசிகத்தென வெக்கையென வாய்க் கிரந்திகளும் மேவும் பித்தக் கடுப்புடனே தீர்க்கு மாசனக் கொரிப்புகளுந் தீரு முனிவர் செய்கைவே.

க்ஷயம் புதின் மூன்றுக்கு மருந்து:-

யாவருலகறியப் பன்னு தமிழ் வாகடத்தைப் போற்றியாம் பித்தச்

சரீர திசைக்கில் கன்னிமையான பாகம் கருதி வருவோர்க்கு என்றாளி கால மிருப்பார்.

2. பாரில் வாகடத்தைப் பண்பிருல் பெரியோர் சொன்ன
சீருடன் தழைக்க மன்னர் சிறப்புடன் பெரியோர் கேட்க
வாரில் க்ஷயம் பதினொன்று வரிசையாய்ப் பிடித்த பேர்கள்
காசினி யுமையாள் பாதம் காத்துடன் காப்புத் தானே.

3. நெய்யுடன் தயிர் பால் மோரும் நீண்ட கைக், கால் கன்னி
கையிறல் காடி மானிரக் கலக்கவேத் தகே மருக்கும்
பையவே மழை நனைதல்பாங்குடன் சுனை நீர் மாங்காய்
அய்யனே ஸ்திரீ போகசிக்கில் முன் மலப் படுக்கை தானேடா.

4. தமக்குள்ள வியாதி யதற்குள்ள குணங்கள் சாற்றினர் தயவுடன் முனிவர்
அமைக் காது வேங்களிலிளைப் போடு மயக்க மதி வாலாயிரு
க்ஷு யினெருந்திடுதல் குமைக்குமே உடம்பைக் கடுத்து நொந்திடுதல் குளிரோடு
காச்சல் வந்திடும்.

5. வந்திடும் வெள்ளோக்காளம் வாயது திக்திப்பாகும் நொந்திடும் பிடரி மண்டை
மந்தமு மிளைப்புத் தோன்று முந்தவே தலைகள் நொந்து சரீரமு முக்குஷ் குத்தம்
தந்தமுந் தொண்டை நாசி கற்க சரன்றுடனே தும்மல்.

6. தம்மலு மிருமலுந் தோன்றிய காச நோய் நன்மையாய் வியாதி தீர்ந்தொழிய நன்குலாய்
செம்மையா மெய்ப் பரஞ்சிரியிற் செல்லார் உண்மையோ யொரு புறமும் யோக மோ
வார்.

7. பனிரு யிரு கையால் என்டி புன்புட்டருக்கி யுன்டுத்
தனியுடனிருமல் தும்மல் சடுதியிற்குறு மாசு
அனிசயத் சனி போற்றுரன்றி ஆனதோர் நூனெழாகும்
யினி யிதை யறிந்து கேள்ர் ரியப்புடன் பெரியோர் தாமே.

8. வாக்கும் க்ஷயமுந் உப்புக் க்ஷயமுடன் கவி க்ஷயமும்
தாக்முந் க்ஷயமுந் சந்திர் சூரியன் ராஜ்யமுந் குளமும் கருவ மோக
தந்தந்தருளட்க்ஷயமும் விரட்சியம் வீரன் பேர் பதினொன்றுடன் குமரி தானே.

9. வாலட்சியத் சேர குறிகள் சொல்ல வருந்துடன் தினவு தின்றும்
மேல் சுவாச மெடுக்குந் தாகம் விபரீதம் ரோகமுண்டு
சீலமுடன் மருந்து சொல்ல திப்பிலி கருங் கடுக்காய் காலமே
மூன்று திங்கள் கருத்துடன் மதுவில் கொள்வீர்.

10. விரக்ஷ மெடுத்து சொல்ல நிறத்திருந் போல நிற்கும்

குரல் நெரிஞ்சிருக்குங் கோழை கொட்டினாற் போலே விழும்
அருந்தாழும் விக்கு நல்ல அன்புடன் கடுக்காய் சுக்குத்
திருந்தி விடையமுஞ் சூட்டிக் தேனிலே கொள்ளப் போமே.

11. தருஞ் க்ஷய குணங்களெல்லாம் சரீரமு மிருமலாகும்
வருஞ் க்ஷய மயக்கமொடு மிரைக்கு மே குரல்
நெரிக்கும் கருவுடன் கடுக்காய் சாதிக்காய் திப்பிலி கிராம்பு
சுக்கு முருக்கன் பிசின் விடையம் வைத்திடும் விராகனஞ்சே.
மதுவிலே யிரண்டு திங்கள் வருந்தவே போகும் நோவு.

12. கனிகையின் கனத்தைங் கேளீர் மார்படைக்குங் குன்ம வலிக்கு மேனியுடன் இருமும் போ
கின் கிரிச் சத்தங் கோழை அதிகமாய் எடுக்கு முஉஷ்ணஞ் சரீர முழு வெந்து போமே.

13. மருந்து கேள் கடுக்காய், சுக்கு, திப்பிலி யேலஞ் சூட்டி வருத்த இலவங்கத்
சாதிபத்திரி அதிவிடையம் திருந்திய தேற்றான் காயில் பிறவுடன் தேனிற் கொள்ள
வருந்திய விரகனஞ்சு மண்டலங் கொண்டால் போமே.

14. கும்ப க்ஷயத்தின் குணங் கேளீர் கோழை தான் வெருவாய் விழும்
அன்பல் தொண்டை தாறு மடைக்குமே யிரு நாள் வீறு மீனம்பமாய்க் குரல் நெரியும்
பாகம் போற்றல் திம்பு முன் கசாயங்கள் தருமம் விலக் கொள்வீரே.

15. திரிகடுக்காய் தானிக்காய் லவம் விடைய மெல கடுகு ரோகணியுங்
கண்டங் கத்திரிப் பொடியுங் சூட்டி ஒரு படி நெய் விட்டுப் பொடி கம்பி
கருஞ் சீர விட்டு சிறு கரண்டியளவு இரண்டு நேரமும் கொள்ளப் போமே.

16. ஆமஞ் க்ஷய மேல்படி குணமாமப்போது சொன்ன நெய்யில் வடிக்க தேற்றான்
விரை அதிவிடையந் திரிகடுகு ஏலம் யிலவங்கமுடன் வீரான சமுத்திரப் பச்சையுடன் விரைந்து
சூரணமது வுடனே நாலு காசு எடை கொள்ள நழுவிப் போய் விழுங் கண்டீரே.

17. அதிமதுரம் நெய்தலக் கிழங்கு அத்தி கடுகேலம் இலவங்கம்
புதிய சமுத்திராப் பச்சையுடன் பொடியை மதுவில் முக்காசிடையாய்
கதியக் கொள்ள நோயின் தான் கருகிப் போகுங் கண்டீரே.

18. இலங்க மடை யமதரம் நல்ல கடுக்கா யிவை சரிக்குக்
கலங்கத் திப்பிலி சூரணத்தில் கனிந்த மது வத்சு காசிடையில்
வங்கிக் கொள்ள யிம் மருந்தைத் தோற்றுப் போகு யின் நோவே.

19. கால க்ஷயத்தின் குணங் கேளீர் கோழை யெடுக்கு முலர்ந்திருக்கும்
கொல முஉஷ்ணமாயிருக்கும் உடம்பு வெர்த்துக் கொண்டு வரும்.
சொல்லே தீச்சிருக்கும் மந்த சொல்லிர் குணங்கள் சொல்லீரே.

20. கடுக்காய் பாலைத் திப்பிலியுங் கடிசி ரெண்டுஞ் சமன் செய்து
பொடியாய் மூன்று களஞ்சு யிடைதான் மதுவில் கொண்டு வந்வீராய்
யிடுக்காய் யிரண்டு திங்களுடன் எரக்க கொண்டாலின் நோவு
கடுக்காய் வந்த ரோவுகள் தான தோற்றுப் போகுங் கண்டீரே.

21. இராச க்ஷயத்தின் குணங் கேளாய் நாளு விதமாய்த் தின்வு தின்னுங் கோசத்தின்
கோழை விழு மாரடை உலர்ந்திருக்கும் நெசத்தின் நெஞ்சடைக்கும் நண்டிழுப்பாகும்
வாந்தி மேலோற்று மூச்செடுக்கும் வெகு விதமாய்ச் சொன்னேன்

22. இலவங்கங் கடுக்காய் திப்பிலியை நாலிரண்டரையாய்ப் பொடி செய்து
மல்க மூன்று காசிடையில் மது விலவருந்திக் கொள்வீராய்
கலங்க மூன்று திங்களுடன் கன்னின் கசந்து கனிவே
சலங்கள் பாரையுள்ள தெல்லாம் தனியே விழுந்து போய் விடுமே.

~~சகல க்ஷயத்திற்கும் பேர்~~:

சகல க்ஷயத்திற்கும் பேர்:-

23. இருமல் சுவாசம் சோகை வந்திருக்கும் இலவங்கம் கடுக்காய் சுக்குடனே திப்பிலி
தாளிச சாதிக்காய் அக்கரா கோரை விரை சேர்த்து அரைத்து உருண்டை காய
உக்காமான பாக்கி விட்டு உள்ளுக் கிறந்த தீர்ந்திடுமே:

சந்திர க்ஷயத்தின் குணங் கேளீர்:-

24. இருந்தார் போலே எதிரெங்கு மந்தனெடுத்துள்க் கோழை விழும்
வந்து போகு மலங் கழிக்கும் யிந்திர யெருக்கன் பூவ் சுத்த பொடியுந் திப்பிலி
பலமுடனே தந்துமி சமமுடன் கூட்டி தக்க யிரண்டு பங்கு வைப்பீர்.

25. வெல்லங் கூட்டிப் பொடி செய்து விகார கண் கண்ட விரைத் தயில முள்ளங் கூட்டி
மண்டலமும் மொழு நிரையாகத் தின்னக் கால் வென்ன விதுரன் சூரியன் விளங்குங்
குமரியும் மூன்று மென்ன முதலே உரைத்ததுவும் விருந்தி மருந்தைச் செய்வீரே.

26. கார்ப்புப் புளிப்புக் கடுகு நல்ல கலந்த எண்ணெய் பூசணிக்காய்
நெருப்பிலிட்டுப் பசுவின் பால் நெய்யும் ஆட்டுக் கறி கூட்ட சுப்பிப் போகு
மின்றேவு தரணி முதலே தானறியும் யிப்போ மறவாதே சொன்னேன் யியலோர் கேளீர்.

27. கடுக்காய் இலவங்கமும் சாதிக்காய் கற்கடக சிங்கு பனை வெல்லம்
மஞ்சிருக்காய் சிறு தேக்கிலை மரு. நந்தி திரி கடுகு காமம் திரிபாலையும்
அடுக்காய் சாதி பத்திரியும் அதிவிடை தாளிச பத்திரியும்
அடுக்காய் வந்த நோவுகள் தான் விலகிப் போமென் கண்டீரே.

28. வஞ்சினைகள் செய்வோரும் மகா பாதகங்கள் செய்வோரும்
அஞ்சாமல் தேவதையை அருசரி யாதிருந்த வரும்
நெஞ்சிலே கேடுகளை நினை நினைந்து கர்மம் பூண்ட வரும்
யிஞ்சவுடனின் நோவு ஏற்பார்கள் மானிடரே.

29. க்ஷயரோகம், விடாச் சுரங்கள், சத்தி கிராணி யிம்மூன்றும்
நயமுடன் தேவன்த அகஸ்திரம் நல்ல வாகட சாஸ்திரியாலே
நியமுடன் போகும் சொன்னோம் நிட்சய மிதுதான் கண்டாயே
தயவுடன் உமையாள் பாதம் தாள் பணியத் தப்பரை நாளுஞ் சொல்லோமே.

வயிற்றுக் கடுப்புக்கும், வலிக்கும் மருந்து:-

சாதிக்காய் எண்ணெயிலாவது பசுவின் பாலிலாவது கொடுக்கத் தீரும். கீழா நெல்லியைக் கொண்டு வந்து அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கத் தீரும். சின்னி யரைத்து இளங் காடியிற் கொடுக்கவும். காரை யிலையும், புளியும் வெவித்துத் தின்னவும். சர்க்கரை, சுக்கு, திப்பிலி மெம் இது பதத்தில் வறுத்துப் பொடி பண்ணி பனை வெல்லங் கூட்டி அரைத்து உருண்டை பண்ணித் தின்ன வயிற்றுக் கடுப்புத் தீரும். வில்வ சிந்தம் பழத்தைப் புடமிட்டுக் கொடுக்கத் தீரும். சாதிக்காயைத் துளையிட்டு அதிலே அபினி விட்டு விளக்கிற் புடமிட்டுக் கொடுக்கத் தீரும். இலந்தை புன்னிய விரட்சம் இவ இரண்டும் தயிரில் நெய்யில் கொடுக்கத் தீரும்.

வேறு சகல சுரத்திற்கும் மருந்து:-

ஒரு சிறுப் பாளை வேர் கொண்டு வந்து உடைத்தால் வெள்ளையாய் நரம்பு இருக்கும். அதை எடுத்துப் போட்டு மற்றதை எடுத்துக் கொண்டு இலவங்கப் பட்டை கொண்டு வந்து இடித்து இரண்டும் சமன் கூட்டி சீந்தில் ரசம் சாறு விட்டு நன்று அரைத்து பருத்திக் கொட்டையளவு உருண்டை செய்து நிழலிலே உலர்த்திக் காய்ச்சல் கண்ட ஐந்தா நாள் முதல் ஒரு உருண்டை ஒரு நேரம் இள வெந்நீரில் கொடுக்கவும். ஒரு நேரம் சிறு நீரில் கொடுக்கவும். சகல காய்ச்சலுக்கும் பெரு வாரிக் காச்சலும் தீரும் இந்த மருந்து கை கண்ட அவுஷதம்.

விச்சுரத்திற்கு மருந்தும் குணமும்:-

காலை எடுக்க வொட்டாது. மயக்கம் வரும். பலம் குன்றிப் போய் அகோரமாய் காயும். இதற்கு மருந்து:- சீந்தில் தண்டு நிலக் குமிழ் வேர் நெரிஞ்சி வேர், சிற்றாமுட்டி வேர், நன்னாரி வேர், செங்கழு நீர் கோஷ்டம், பற்படாகம், விலாமிச்சம் வேர், சுக்குத் திப்பிலி, நற்சீரகம் இவை வகைக்கு விராகனிடை விராகனிடை. ஈ ஒட்டி இடித்து மூன்று படி தண்ணீர் விட்டு முக்கால் படியாகக் காய்ச்சி மூன்று நாளுக்கு கொடுக்கத் தீரும். பத்தியம் உப்பு, புளி விடவும்.

பயித்திய சன்னி சுரத்திற்கு:-

பேய்ப்புடல், நரிப் பயிர்கன் கொடி, முருங்கை நாக்கு, சீந்தில் கொடி, முசுமுசுக்கை கோரைக் கிழங்கு பச்சை பயறு இவை வகைக்கு ஒரு பிடி இது வெல்லாம் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு ஒரு பிடியாகக் காய்ச்சி திப்பிலி மூன்று வெதுப்பிப் பொடி செய்து மேல் பொடி தூவி இப்படி மூன்று நாள் கொடுக்கவும். பயித்திய சுரம் உஷ்ண சுரம் வரக் காச்சல் வெகு சுரம் தாக ஆறும்.

உள் காச்சலுக்கு:-

நிலக் குமிழ் வேர், நன்னாரி வேர், பொன்னாங்காணி வேர், பேய் புடல், ராசி வேர், நெய் சட்டி வேர், முசுமுசுக்கை வில்வப் பத்திரி யோடு சிறு குறிஞ்சா. பற்படாகம் முத்தக் காசு வெலியங்குசால், வேப்பீர்க்கு புளியீர்க்கு மிளகு சுக்குத், திப்பிலி, விஷ்ணுக் கிராந்தி நரிப் பயிர்கன் கொடி, சீரகம், திப்பிலி மூலம், கடுக்காய் இவைகள் சரியிடையாய் சேர்த்து 4 படி தண்ணீர்விட்டு அரைப் படியாகச் சுண்ட வைத்து வடித்து 3 நாள் காலை மாலை கொடுக்கவும். உட் காய்ச்சல் முதலானவை நீங்கும்.

நெஞ்சு காச்சலுக்கு:-

முள் கொளிஞ்சி வேர், முசுமுசுக்கை வேர், நீலி வேர், மலைதாங்கி வேர், வரிக் குமட்டி வேர், மஞ்சள் விரையாசிறு காட்டு நத்தைச்சூரி பழம் இது வெல்லாஞ் சமன் கொண்டு வேர் மூலிகையை நருக்கிப் போட்டு மூன் படி தண்ணீர் விட் ஒன்றரைப் படியாக் காய்ச்சிகாலமே காலமே மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். கை கண்டது.

குத வலிக்கு மருந்து:-

வேப்பிலைச் சாறு ஒத்தச் சேரை நல்லெண்ணெய் அம் மறவாதி கலந்து இருப்புப் படியில் வைத்துக் கொண்டிருந்து காலை முருகி வந்தவுடனே நல்ல வெல்லம் எலுமிச்சங் காயத்திலே கொடுத்து பிறகு மருந்து கொடுக்கவும். இப்படி மூன்று நாள் ஐந்து நாள் புளி விடவும். கை கண்டது.

வறக் காச்சலுக்கு மருந்து:-

கண்டங் கத்திரி, தாளிசம், பேய்ப்புடல், வேப்பீர்க்கு, புளி யீர்க்கு, முத்தக் காசு, கஞ்சான் கோரை ராசி, சீந்தில் கொடி, கடுக்காய் வொரன்டு இவை நருக்கிப் பானையிலிட்டு சுக்கு திப்பிலி, நற்சீரகம் இவை மூன்றும் பானையில் வைத்து எட்டுப் படி தண்ணீர் விட்டு ஒரு படியாகக் காய்ச்சி இறக்கிக் கடைச் சரக்கு மூன்று மரைத்து மூன்று குளிகை பண்ணி ஒரு பிடி கசாயத்தில் ஒரு குளிகையாக இப்படி மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

நாவரட்சிக்கு சுரத்தில் தவனத்திற்கு:-

திப்பிலி; அதிமதுரம் இரண்டு பிடி பெருங் குரும்பை வேர், சந்தனப் பொடி கண்டு சர்க்கரையில் குழைத்து நாவியிட நிற்கும். சுரம் விட்டதின் பிறகு வரட்சியா யிருந்தால் நெய் படிக; திப்பிலி விராகனிடை. ஒ இந்துப்பு விராகனிடை. இ பசு வெல்லம் விராகனிடை. ச இது வெல்லாம் நெய்யில் போட்டு கிண்டி வைத்துக் கொண்டு பத்து நாளைக்குத் திரிமொ கரண்டி தின்னவும்.

உள் சுரத்திற்கு:-

சுரையிலை ஒரு பிடி ஒரு சட்டியில் விட்டு ஒரு படி தண்ணீர் விடுப் பந்தலில் வைத்துக் காலமே எடுத்து கையில் அலம்பி இலையை எடுத்துப் போட்டு யிதில் விராகனிடை சீரகம் பனை வெல்லம் அரைப் பலமும் நெய் ஒரு கரண்டியும் கூட்டிக் கொடுக்கவும். கை கண்டது.

பல்லுக் கிட்டின சன்னிக்கு மருந்து:-

சுக்கு, திப்பிலி, கடுக்காய், தோணறிக்காய், மிளகு இது வெல்லாம் பொடி செய்து வஸ்திர காயம் பண்ணிச் சர்க்கரையுந் தேனும் வார்த்துக் குழப்பி உருண்டை பண்ணிக் கொண்டு கட வாயில் அடக்கவும். மீறி பல்லு கிட்டி விட்டாது போனால் தண்ணீரில் உருண்டையை உரைத் பல்லிடுக்கில் விடக் கூடு விட்டுப் போன சீவனும் வந்து பேசும். மெய்யான காரியம் பொய் போகாது.

குளிர் சுரத்திற்கு மருந்து:-

சீந்திற் தண்டு சிறுகாஞ் சோரி வேர் ஆவரை வேர் கண்டங் கத்திரி வேர், சுக்கு இவை சமன் கட்டி நாழீ நீர் வார்த்து உழக்காய்க் காய்ச்சி திப்பிலி பொடி செய்து தேனிற் குழப்பிக் கலந்து கொண்டு கொடுக்கவும். குளிர் வெதுப்புச் சன்னியுந் தீரும். குன்றுமணி யிலையை வாயிலடக்க வராது.

வாத சுரத்திற்கு:-

பேராமுட்டி கொத்தமல்லி; பேரிஞ்சு நெற் பொரியும் நேராக கயிறு நாளி நீர் வார்த்து உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். அர் மட்டும் வந்த வாத சுரம் ஓடிப் போகும் கண்டிரே: இ
இதவும் கண்டங் காலியுடன் சுக்கு, கடுக வெந்து இரு நாழி உழக்காகக் காய்ச்சி நாலு நாள் உண்ட போதே உருண்டோடிப் போம் வாத சுரந் தானே.

அதிசாரத்திற்கு:-

நிலவேம்பு அதிவிடையம், முத்தக்காசு, சீந்திற் தண்டு கொடப் பாலை விரை, இவை சமன் கட்டி இரு நாழி நீருழக்காய் காய்ச்சி இப்படி மூன்று நாள் குடிக்கவும்.

தோஷ அதிசாரத்திற்கு:-

முத்தக் காசு, சீந்திற் தண்டு கழப் பருப்பு, நற்சீரகம்; கருஞ்சீரகம், கொடசப் பாலை விரை, அதிவிடையம், நிலவேம்பு, இவை சமன் கட்டி இரு நாழி உழக்காய் காய்ச்சி கொடுக்கவும். வட்டத் திருப்பி முத்தக் காசு மலையின் வேம்பு மாதளையும் கட்டிக் காசு சுக்குடனே காரெள்ப் பொன் காண் வார்த்துப் பட்டுத் தயிரிலப் பிசரப் பேயப் பேதி முழுங்க வல்லிராய் ஒட்டக் கழிவு மதிச் சார மஞ்சிடிப் போகு மொரு நாளே.

தண்ணீர்ப் போல வயிறு கழிந்தால் வசம்பு மிளகு இவை வகைக்கு விராகனிடை பாதி யேக கருக வறுத்து பிறகு அந்தப் பாதி போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு அரைப் படியாகக் காய்ச்சி குடிக்கவும். கை கண்டது.

அபிகார சுர குணமும் மருந்தும்:-

ஈர நடந்தாலும் வெயில் மிகவுஞ் செய்தாலும் பாரமான சுமை எடுத்தாலும் இந்தச் சுரம் வரும். மீன குணமதாக மிகுதியுண்டா வேற்கு முடம் பெரியும். மனந் தடுமாறு குளிர் குளிர்ந்தால் குளிர்ந்து பதார்த்தங்களை தெடுமிதற்கு மருந்து சுக்கு, திப்பிலி வகைக்கு விராகனிடை.க, பற்படாகம் கொத்தமல்லி, விஷ்ணுக் கிராந்தி வகைக்கு விராகனிடை. பேய்புடல், சிற்றாமுட்டி சிறு குறிஞ்சான் இவை வகைக்கு விராகனிடை. இவை கஷாயம் வைத்துக் கொடுக்கத் தீரும். கை கண்டது.

உள் காச்சலுக்கு மருந்து:- சுற்றுமுதச் சோறு வாங்கி ஒரு முறை கழுவிப் போட்டு பழைய

நீச்சுத் தண்ணீரில் அதில் சர்க்கரைகூடப் போட்டுக் கொடுக்கவும். சிறு பிள்ளைகளுக்குச் சர்க்கரை போடாமல் கொடுக்கவும்.

காய்ச்சல் மேல் வீக்கத்திற்கு மருந்து :-

கத்தாழைச் சருகு கழிப் பாக்கு கடுக்காய் இவ் மூன்றும் அரைத்து வெள்ளாட்டுக் கோமயத்தில் கொடுக்க வயிறு விடும். வீக்கந் தீரும்.

எந்த சுரத்திற்கும் மருந்து :-

சுரந்த வக்கினவுடனே பெருங் காரிச்சா இலை நாலு தேங்காயளவு நாலு படி தண்ணீர் விட்டு ஒரு படியாகக் காய்ச்சி மூன்று நாள் கொடுக்கத் தீரும். இல்லாதிருந்தால் மட்ட போம்.

வயிற்றுக் கழிச்சலுக்கு மருந்து :-

முள்ளி வேர், ஆவாரை வேர், காரை வேர், நெல்லரிசிஇவை வகைக்கு முள்ளிக் காயளவு அரைத்து அரைப்படி மோரில் கலந்து காய்ச்சிக் கொடுக்கவும் நிற்கும்.

இருமல் சத்திய சுரத்திற்கு மருந்து :-

ஏலத் சனி மிளகு, திப்பிலி கோரைக் கிழங்குத் தாள் இவ் ஒவ்வொன்று நாலு பலங் கட்டிப் பொடி பண்ணி முக்களஞ்சு தேனில் கிழுங் கொடுக்கவும்.

அதிசாரத்திற்கு மருந்து :-

இலவங்கப் பத்திரி, தாளிச பத்திரி, நாகப்பூ, சுக்குத் திப்பிலி, கற்கடக சிங்கி, சடாமஞ்சி ஒவ்வொன்று கழஞ்சு இவ் ஒரு பலவிடை நாவல் கொழுந்து ஆலங் கொழுந்து அரசங் கொழுந்து மாதளங் கொழுந்து நல்ல அத்திக் கொழுந்து இவ் ஒவ்வொன்று ஒரு பிடி நறுக்கி இரண்டு படி தண்ணீர் விட்டு உரியாகக் காய்ச்சி நேரத்திற்கு உழக்காக மூன்று நாள் கொடுக்கவும்.

விஷ சுரம், சத்தி ஒக்காளம், கழிச்சல் இவற்றிற்கு மருந்து :-

சிக்கா முட்டி வேர் மஞ்சிட்டி சிறு செந்தொட்டி வேர், வில்வ வேர், முத்தக் காசு; சுந்தித் தண்டு பற்படாகம் இந்த மருந்து சரி கூட்டி நறுக்கி இவை நாழித் தண்ணீர் விட்டு நற்சீரகம் சீலையில் முடிந்து போட்டு உழக்காகக் காய்ச்சி இறுத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். சுரம் அதிசாரக் கழிச்சல் நிற்கும். கஞ்சி கொடுக்க வரவும்.

பித்த அதிசாரத்திற்கு மருந்து :-

ஆலம் மொட்டு செங்கழுநீர் கோஷ்டம், கத்தாழஞ் சாறுந் தேனும் விட்டு அரைத்து உருண்டை செய்து தின்ன அதிசாரந் தீரும்.

(வேறு) நீர்ப் பூலாம் வேரரைத்து எருமைத் தயிரில் கொடுக்கத் தீரும். நாயுருவி வேரை கோணியிற் தேய்த்து தானிக்காய் மாத்திர மரைத்து வெண்ணெயிற் ஈக முழுங்கவும். இதுவும் தென்னம் பாளைச் சாறு உழக்கு உதியன் பட்டைச் சாறு உழாக்கு நாவல் பட்டைச் சாறு மாம்பட்டைச் சாறு தன்னிலொக்க உழக்குச் சாறு கொண்டு இதில் அபினி அதிவிடையம் மாங்கொட்டை கஞ்சாப் பொடி, காசு கட்டி குட்டப் பாலைப் பட்டை இருப்பை வகைக்கு முக்களஞ்சு கொண்டு அரைத்து எருமைத் தயிரில் கொடுக்கவும் நிற்கும்.

சுரத்தின் மேல் எடுத்த சுரத்திற்கும் இருமலுக்கும் மருந்து :-

கடுக்காய் அழுகு கட்டி விரை போக்கிப் புதுச் சட்டியிலிட்டு ஆடாதோடைச் சாறு தன்னில் போட்டுப் பிசறி நிழலுலர்த்த இப்படி ஞாயிறு முதல் கொண்டு சனிக்கிழமை வரைக்கும் இப்படி சாறு விட்டு உலர்த்தி வேறே ஆடாதோடை இலையும் வேர் பட்டையும் உலர்த்தி முந்தின மருந்து மிகவும் இடித்து வஸ்திர காயம் பண்ணி பேய்சுரை குடுக்கையிலிட்டுக் கொண்டுச் சோற்றமை மீறினால் இந்த சூரணம் சேர்வை வெள்ளீறிலாவது தூதுவளை வேர் கூட்டி நீராவதல் ஒரு கடி கொடுக்கவும். சேற்றுமை மிருமல் சுரம் இவை வெல்லாந் தீரும்.

அதிசாரத்திற்கு மருந்து:-

செங்குமுளி ஒரு எலுமிச்சங் காயளவு கொண்டு வந்து உள்ளானது புழுங்கரிசி கூடப் போட்டு விழுதொடரைத்து மென்று ரொட்டியாய் பண்ணி மொன்னிறமாய் விப்பி சுட்டு மூன்று நாளைக்குக் கொடுத்தால் அதிசாரக் கழிச்சல் உடனே தீரும்.

வண்டுகள் அசந்தால் மருந்து:- 13.3.63.

ஆனைவண்டு அசந்தால் மருந்து மணியில் நல்லெண்ணெய் குப்பிப்பிசவி வெய்யி லிலலர்த்தி அரைத்து கோழி கூவுகிற நேரத்தில் ஒரு கொட்டைப் பாக்களவு முழுங்க வண்டு பொறுமும். கை கண்டது.

***

தன் மந்திரி நூல் அகத்தீசுவரர் சிந்தாமணி உரைத்த

நூல் அகஸ்தியர் பெருநூல் அடக்கம்.

வயிற்றுக் கெண்டைக்கு மருந்து:-

பசுவின் கோமயத்தில் ஒரு படி அரைப்படி கல்லுப்புப் போட்டு காய்ச்சி.. அதை எடுத்துக் கழச்சியளவு கொள்ள கெண்டை கரையும்.

யோனி மூடல்:-

கருத்தாய் பொடி செய்த பச்சைக் கற்பூரம், புழுத் இந்த மேல் சாராயம் விட்டு நசுக்கி குப்பை மேனிச் சாறு விட்டரைத்து அந்த மருந்தை கையில் தடவி யோனியில் தடவ அடைக்கும். அம்மான் பச்சரிசி காடியிலாவது முலைப் பாலிலாவது விட்டரைத்து கையில் தடவி யோனிக்குள் தீற் நோக்கில் தடவ திறக்கும்.

கீரி பூச்சி விழ மருந்து:-

கண்டங் வேர் எலுமிச்சங் காயளவு அரைத்து இள வெந்நீரில் கொடுக்க கீரி பூச்சி செத்து விழும்.

(வேறு) குமட்டிக்கொடி குப்பை தீயில் வாட்டி வயிற்றின் மேல் கட்டி பாலும் மோரும் உணக்கு கொடுக்கவும்.

சிப்பு விழ:-

நாய்ப் பாகலிலையும் வேம்பு இலையும் அரைத்து வெப்பெண்ணெயில் குழைத்து கொடுக்க சிறு புழு வெல்லாம் விழும். கொல்லங் கோவைக் கிழங்கு பாலில் அரைத்து விழுங்க கீரிப் பூச்சி விழும்.

சர்வ விப்புருதிக்கு மருந்து:-

முசுட்டை வேர் பச்சரிசிக் கழுநீரில் அரைத்துக் கொடுக்க அசாத்தியம். விப்புருதி பெரு வயசம் தீரும். மாவிலிங்கம் பட்டைக் கசாயத்தில் பெருங்காயம் காரபசமெல்சிற பாஷாணம் மார்ட்டு யிடை பொடி செய்து கசாயத்தில் கலந்து கொடுக்கவும்.

(வேறு) முருங்கைப் பட்டை பெருங்காயம் காசு யிடை பொடி செய்து பசுவின் நெய்யிற் கொள்ள எந்த விப்புருதியுந் தீரும்.

விப்புருதிக்கு மருந்து:-

கடுக்காய் பொடி, நெல்லிக்காய், தானிக்காய் சமனாகப் பொடி செய்து சுத்தி செய்த கெந்தகமும் முதலிய பொடியும் சமனாகக் கலந்து முளைக்கெண்ணெயிலே கலந்து ஒரு காசிடை உட்டக் கொள்ள வயிற்றிலுள்ள வீக்கமும் விப்புருதியெல்லாந் தீரும். ஒரு மண்டலங் கொள்ள குட்டம் கல விஷம் தீரும்.

(வேறு) விளக்கெண்ணெய் ஒரு படி சங்கன் குப்பிச் சாறு ஒரு படி, கள்ளிப் பால் சிவனார் வேம்பு வேர், காட்டாமணக்கன் வேர், வெள்ளைக் காக்கணம் வேர், நிலபாதிரை

வேர், சாறணை வேர், இவை வ்வொன்று தேசிக் காயளவு அரைத்து எண்ணெயிற் கலந்து பேய்க் குமட்டிச் சாறு கூடக் கலந்து கொண்டு அரைக் காசிடை எண்ணெய் கொடுக்கவும். வயிறு கழியும். இப்படி மூன்று நாள் கொடுக்க விப்புருதிப் பை உடையும். தீரும். அச்சியாமல் மோருஞ் சோறும் கொடுக்கவும். புளி விடவும்.

விஷத்திற்கு மருந்து :- **13.3.63.**

வெள்ளைச் சாரணை இலை; குப்பை மேனி இலை, விரம்பி இலை, புன்னைக்குப் பட்டு இலை இந்த நாலு இலையும் விரம்பி யிலைச் சாறு விட்டு விழுது பட அரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி நல்லெண்ணெய் பதமிட்டு அந்த எண்ணெய் தடவி விட்டு இரண்டாவது எண்ணெய் பதமிட்டு ஒரு சிமிளிலே நல்லெண்ணெய் தடவி அந்தச் சிமிளிலே யடைத்துக் கொண்டு எவ்வகிலும் விஷம் தீண்டி வந்த பேருக்கு ஒரு குளிகை காசிடை நல்லெண்ணெயிற் கொடுக்க விஷமும் தீரும். இது கை கண்டது.

இதற்கு மருந்து :-

மாசம் பிறந்த தலை ஞாயிற்றுக் கிழமை முருகக் கழும் பழம் பழுக்கிற உசா மரத்து வேர் பாக்களவாக நறுக்கி ஒரு கலசத்திலிட்டு அரைப்படி கல்லுப்பு யிட்டு மூடி நாற்பத்தெட்டு நாள் எருவில் புதைத்து எடுத்து வைத்துக் கொண்டு விஷந் தீண்டினவருக்கு அந்தக் கீற்றிலொன்று கொடுத்தால் உடனே எவ்வகைப் பட்ட விஷமெல்லாந் தீரும்.

விஷப் பரிட்சை அறியும் விதம் :-

விஷந் தீண்டின பேருக்கு புங்கன் கொட்டையாவது புன்னைக்காயாவது தின்னக் கொடுத்தால் அது [illegible] வைத்தால் புடையன், இனித்தால் நல்ல பாம்பு, கார்த்தால் கட்டன் கருவாளை புளித்தால் விரியன் கசந்தால் விஷமில்லை யென்றறியவும்.

விஷப் பல் முறிந்த அதை வாங்க மருந்து :-

முறிந்த பல்லு வாங்க பால் சொருக்கி ஆற விட்டு கடி வாயிற் கட்டப் பல்லு பிறப்படும்.

(வேறு) எலுமிச்சன் பழம் வைத்துக் கட்ட பல்லு பிறப்படும். இது முறிந்திருக்கிறதானால் கடிவாய் புண்ணாகிறது. கோழி யீரல் கட்டி வாயில் கட்டப் புண்ணும், விரியன் கடிக் குத்தியமாம். அடியைப்பிடிக்கும் மயக்கம் கொள்ளும். விஷம் மீளாது. இதற்கு மருந்து வெள்ளாட்டு புளுப் புழுவை வயிற்றைக் கிழித்து உவலை வாங்கி பிழிந்த சாறு கொடுக்க வாந்தி பண்ணும். விஷம் மீளும்.

விஷ மெல்லாவற்றிற்கும் தரிட மருந்து :-

நரியுர் பெரியரிசி யிலையை அரைத்து சிமிளிட்டு [illegible] வாயில் பூச விஷம் மீளும்.

[illegible]ற்கு மருந்து :-

அமுக்கலாந் தழை, மிளகு, வெள் வெங்காயம், வசம்பு, இவையெல்லாம் கூட்டிச் சிறுநீரிலரைத்து உள்ளுக்குங் கொடுத்து வீக்கத்துக்கும் பூச விஷம் மீளும். இது திட்டம் கை கண்டது.

வயிற்றுக் கடுப்பு, சீதமும் இரத்தமும் போகிறதற்கு மருந்து, [illegible]

கழிகிறதற்கு மருந்து :-

பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆகும். வெப்பலை கொழுந்து [illegible], கருப்பு வெள் வெங்காயம், நாமம் இது சமன் கூட்டி இள வறுப்பாக வறுத்து [illegible] சிறுநீரிலரைத்து கண்ணாய்ப் போட்டு காலிற்குக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். சிறு பிள்ளைக்கும் ஆகும்.

வயிற்று கடுப்புக்கு மருந்து :-

மாப்பிரண்டைக் கொழுந்து காரளைக் கொழுந்து மஞ்சள் மிளகு இவை வெல்லாம் அரைத்து ஒன்றரைப் படி தண்ணீர் விட்டு முக்கால் படியாகக் காய்ச்சி அரைப்படி சாதம் வடித்த சோற்றிற் கலந்து வார்த்து உண்ணவும் கடுப்பு தீரும்.

வயிற்றில் இரத்தக் கடுப்புக்கு மருந்து :-

பிரண்டைச் சாறு கொண்டு வந்து வாட்டி பிழிந்து எருமைத் தயிரை அரைப்படி தயிரில் கலந்து குடிக்கத் தீரும்.

பல் முத்தக் மருந்து :-

அரைம் பட்டை சுக்கு இரண்டும் அரைத்து புண் வீக்கத்தின் மேலே வைத்து அடக்கவும் புழு சாகும். நோவு நிற்கும்.

கெற்ப விப்புருதிக்கு மருந்து :-

இலைக் கள்ளி வேரும், முள்ளி வேரும் அரைத்து கலந்து தண்ணீரிற் குடிக்கவும். அந்த கெற்ப விப்புருதி உடைட்டோட்டே விழும். கோழிச் சாறு குடிக்கவும்.

கோடா குடிக் குளிகை :-

சாதிலிங்கம், வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, சயிந்திர லவணம், ஓமம், குரசாணி ஓமம், இவை எல்லாம் சரி சமமாக நிறுத்துக் கொண்டு இதற்கு இணைக் கெல்லரம் நேர்வாளம் சமமாக நிறுத்துக் கொண்டு இவை வெல்லாம் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்திக் கொள்ளவும். துஉஷ்ணத்திற்கு ஒரு குளிகை கொடுக்க விரோசனமாம். ஒரு குளிகை நல்ல வெல்லத்தில் கொடுக்கவும். இதற்கு பத்தியம் மோருஞ் சோறும் குடிக்க நிற்கும்.

நொச்சியிலைச் சாற்றில் கொடுக்க பஞ்ச குன்மந் தீரும். இதற்குப் பத்தியம் பாலுஞ் சோறுங் குடிக்கவும். இதற்கு கஷாயம்: சீரகம் காய்ச்சிக் கொடுக்கவும். இதற்குக் கோபமாலுல் மாம்பழச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் வெண்ணீருஞ் சோறுங் குடிக்கவும். உஷ்ணத்திற்கு உள்ளங் கால் உள்ளங் கை எரியும். இதற்கு நெல்லிக்காய்ச் சாற்றில் ஒரு குளிகை குடிக்கவும். இதற்குப் பத்தியம் பகலில் மோருஞ் சோறும் கொடுக்கவும். மூன்று நாள் கொள்ளவும். வாய்வு குன்மத்திற்கு கீழ் வயறு வசியும். வெள்ளைக்காரனும் வாய் நீரும். கை கால் அசந்து வரும். இதற்கு ஒரு குளிகை வல்லாரைச் சாற்றில் கொடுக்கவும். இதற்கு மோருஞ் சோறும் கொடுக்கவும். வயறுப் பிசமாய் வயறு நோவு மாறல் கொப்பிளைத் தடங்கி நோகும். நடக்க மாட்டா நெஞ்சு, கழுத்து பிடரி மட்டுக்கும் சுரம் வரும். இதற்கு ஒரு குளிகை நல்ல முருங்கைப் பட்டைச் சாற்றில் கொடுக்கவும். பத்தியம் பாலுஞ் சோறும் கொடுக்கவும். சேற்றும் குன்மத்திற்கு தீபனமில்லை. வயறு முள முளவென்று விரையும். வயறு குளியும். சரீரம் களைத்திருக்கும். வெந்நீரில் ஒரு குளிகை கொடுக்கவும். இதற்கு பத்தியம் தயிருஞ் சோறு கொடுக்கவும். உஷ்ணத்திற்கு உண்ட சோறு உண்டாற்ப் போலே எடுக்கிறதற்கு சண்பகப்பட்டைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். இதற்குப் பத்தியம் நெல்லுக் கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும். மார் எரிப்புக்கும் உப்பிசமுண்டா யிருக்கும். புளி யேப்பம் வரும். இதற்கு வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் நெல் கஞ்சி கொடுக்கவும்.

சீதக் கட்டுக்கு :- முருங்கைப் பட்டைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். இதற்கு பத்தியம் காஞ்ச மோருஞ் சோறும் கொடுக்கவும்.

சன்னி மேல் பிடிக்கிறத்துக்கு :- அசோகப் பட்டைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். சன்னி யுண்டான தெல்லாந் தீரும்.

நீளைக்க இருக்கிற பேருக்குச் சோறு செரியாமலிருந்தால் :- வெள்ளாட்டுப் பாலில் ஒரு குளிகை கொடுக்கவும். இதற்கு பத்தியம் காஞ்ச மோருஞ் சோறும் கொடுக்கவும்.

வாதம் ஸ்பரிசி நாசத்திற்கும்:- மாதுளையிலை சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். இதற்குப் பத்தியம் பாலுஞ் சோறும் கொடுக்கவும்.

சரத்திற்கு [illegible] உடம்பு பருத்திருக்கிறதற்கு:-

ஒற்று சீதேவி செங்கழுநீர் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். இதற்குப் பத்தியம் வெள்ளாட்டுப் பாலுஞ் சோறும் கொடுக்கவும்.

ரோமமெடுத்தால்:- வயிறு கடுப்பு உப்பிசமாயிருக்கும். உமிழ்ந்தால் கட்டியாயிருக்கும். இதற்கு நாரத்தை யிலைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். இதற்குப் பத்தியம் கஞ்சியுஞ் சோறும் கொடுக்கவும். குளி மானமிதான வயிற்றிலே பந்து போலே [illegible] வயறு வலி [illegible] யிருந்தால் பால், பழம், பச்சை மாங்கிப்பு, பொருந்தாது. இந்த வியாதி அறிய வேணுமென்றால் வெல்லந் தின்றால் அந்த வயறு உடனே ரோகம் நிற்கும். அது அறிந்து மருந்து கொடுக்கவும். இது கள்ளிப் பாலால் சுண்டாங்கியில் [illegible] கொடுக்கவும். கள்ளிக் கொழுந்து நொச்சிக் கொழுந்து கற்கொளிஞ்சிக் கொழுந்து கடுகு, மிளகு, [illegible], வெள் வெங்காயம், பாக்களவு அரைத்து முழுங்கவும். வெங்காரம் காச்சி பொறித்து வெண்ணெய்ச் சாற்றில் ஒரு அவரை அளவு அரைத்து முழுங்கவும். குளிமான விழும்.

தொடா [illegible] குளிகை:-

ரச நாவி, கெந்தகம், அரிதாரம், வெங்காரம், திப்பிலி, செவ்வரலாத் கோஷ்டம், கடுக்காய், [illegible] பருப்பு இவை யெல்லாம் ஒவ்வொன்று காசு தாம்பரம் அளவு பொடி கலந்து இவை யெல்லாஞ் சேரக் கட்டி கையாந்தகரைச் சாற்றில் ஒரு குளிகை அரைத்து [illegible] படி [illegible] ஒரு நாழிகையாக ஏழு நாள் அரைத்து உளுந்து ப் பிரமாணக் குளிகை செய்து நிழலிலுலர்த்திக் கொள்ளவும். ஒரு குளிகை எலுமிச்சம் பழச் சாற்றில் கொள்ள சகல வியாதியுந் தீரும்.

செரியாக் குன்மத்திற்கு:- ஒரு குளிகை பசுவின் நெய்யில் கொடுக்கவும்.

கிரணிக்கு:- சுக்கு நீர் வார்த்த மோரிலாவது இஞ்சிச் சாற்றிலாவது ஒரு குளிகை கொடுக்கவும்.

விரோசனத்திற்கு:- விளக்கெண்ணெயில் ஒரு குளிகை கொடுக்கவும்.

வயிற்றிலடிபட்டுக்கு:- வெல்லத்தில் ஒரு குளிகை கொடுக்கவும்.

பாம்பு புடிக்கு:- எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். வாயில் இடவும்.

[illegible]க்கு:- முருங்கைப் பட்டைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும்.

செரியாக் குன்மத்திற்கு: தயிரில் ஒரு குளிகைகொடுக்கவும்.

சன்னிக்கு:- [illegible] யிலைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும்.

[illegible] நசீத்திற்கு:- [illegible] யிலைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும்.

பித்த மாறல் கோமயத்தில் ஒரு குளிகை கொடுக்கவும்.

விஷ பாகத்திற்கு:- கையாந்த கரைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கத் தீரும்.

பித்தம் கண் புகைச்சல்:- எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு குளிகை அரைத்துப் பசக் கண் புகைச்சல் தீரும்.

[illegible] கர்மாலைக்கு:- தண்ணீரில் ஒரு குளிகை கொடுக்கவும்.

வாய்வுக்கு வாதத்திற்கும்:- சாதிக்காய் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும். அரசம் பட்டைச் சாற்றில் உள்ளிடக் கொடுக்கவும். பல் வியாதியுந் தீரும். ஒரு குளிகை கருஞ்சீரகம் பொடி செய்து சர்க்கரையில் கட்டிக் கொடுக்கவும் தீரும்.

சர்வாங்க வாதத்திற்கு:- வசம்பு தண்ணீரில் ஒரு குளிகை கொடுக்க சர்வாங்க வாதந் தீரும். வசம்புச் சாறு, பெருங்காயம், இந்துப்பு ஒமமும் கட்டி எருக்கிலம் பாலில் அரைத்துப் பூச சர்வாங்க வாதந் தீரும். தொடா [illegible] குளிகை முற்றும்.

உடல் [illegible] மெலிந்திருக்கிற பிள்ளைக்கு [illegible]:-

வடக்கே போகிற [illegible] வேர், வடக்கே போகிற பருத்தி வேர், வடக்கே போகிற வெடா வெள்ளி வேர் வடக்கே போகிற புன்னைக்குப் பது வேர், வடக்கே போகிற

பருத்தலாம் வேர் இது வெல்லாம் கொண்டு வந்து வெவ்வேறு ஒளிசம் பண்ணிப் பின்னை யடிச்சிக் கிழங்கும் ஒளிசம் பண்ணி வழித்துப் பிள்ளையார் வைத்து பூசை செய்து பலி கொடுத்து பருத்தலாம் வேர் ஒளிசம் கீழாக மாராடையாகக் குழந்தைக்குப் போடவும். உடலிளைத்து மெலிந்திருக்கிற பிள்ளைகளுக்கு ஒளிசங் கட்டுகிற விபரம் இளைத்த பிள்ளை தேறும்.

பசுங் ஒளி மூட்டுக்கு மருந்து :-

விடத்தெருப் பட்டையுமிலையும் வெள்வேல பட்டையு மிலையும் வினாவிலை சின்னியிலை கஞ்சாயிலை கோரையிலை செருப்படி வேரிலை சிறு பின்னடியிலை ஒருக் கொட்டை வெங்காயம் வசம்பு இது வெல்லாம் முலைப் பாலிலரைத்து வார்க்கவும். உடம்புக்குத் தடவவிடவும். சீலையில் முடிந்து கால் கையிற் கட்டவும். நாயுருவி வேர் அரைத்து உலை வைத்து பால் சோறுக்கி உண்ணத் தீரும்.
(வேறு) மலையேறு கரளை அரைத்து சோறு வேகிறதிற் போட்டு ஆக்கி உண்ணத் தீரும்.
பிள்ளை புகைத்த மூரியில் பில்லும் படு. கண்டதை எடுத்து வந்து ஒரு உள்ளி வசம்பு அரைத்து வரக் குணமாம்.

மச நரி கடித்தால் மருந்து :-

கடிவாயுக்கு சுக்கு, நல்ல வெல்லமும் அரைத்துக் கடி வாயிற் பூசவும். வேப்பங் கொழுந்தும் மிளகும் அரைத்துக் கடி வாயிற் பூசவும். அதை வைத்துக் கட்டவும். அப்பைக் கிழங்கு ஒரு எலுமிச்சங் காயளவு அரைத்து பாதி உள்ளுக்குங் கொடுத்து பாதி கடி வாயிற் கட்டவும். பேய்ச் மெட்டி காயை மேலோடு வாங்கிப் பேர்ட்டு அந்த விதை ஒரு பச்சைப் பாக்களவு அரைத்து உள்ளுக்குங் கொடுத்து கடி வாயுக்கும் வைத்துக் கட்டவும். அவிஞ்சி வேர் உள் சிராயை அரைத்துப் பசு கோமயத்தில் கொடுக்கவும். மிளாம் வேர் மரத் தாளவேரும் ஒரு எலுமிச்சங் காயளவு அரைத்து மோரிற் கரைத்து அரிசி போட்டுச் சோறுக்கி உண்ண மச நரி கடி தீரும்.

சிறு நாக்குக்கு மருந்து :-

வளையலுப்பு கறிய அன்னம்புஞ் சமன் கூட்டி அரைத்து உள் நாவில் வைக்கவும். குன்றிப் பருப்பு முன் நாவிலிடத் தீரும். புழுங்கலரிசியும் கறிச் சாரணை வேரும் அரைத்து உள் நாவில் அடைத்து வைக்கவும். அதையடை கட்டிச் சுட்டுத் தின்னத் தீரும். தானியிலை பசுவின் வெண்ணெய் கலந்து நடு நெற்றியில் வைக்கவும். நவச்சாரம், சுண்ணம்பு கூட்டி உள் நாவில் வைக்கவும். அல்லது வெற்றிலையில் வைத்துத் தின்னக் கொடுக்கத் தீரும்.

கண்டா மாலைக்கு மருந்து :-

நிலவிழா வேர், கோவைக் கிழங்கு, வெள்ளருகு சமூலமும் அரைத்துக் குடிக்க புழு சாகும்.

புண்ணில் ஆணி விழ மருந்து :-

சமுத்திராப் பழம், கெவுரி பாஷாணம், வெள்ளை பாஷாணம் சுக்கும் ஒரிசு இந்த நாலு வகையும் சமன் கொண்டு சீலையில் முடிந்து சுற்றி நெருப்பில் புடமிட்டு இந்த ஐந்து மருந்தும் சமன் கொண்டு முலைப் பாலிலரைத்து வெள்ளைச் சீலையிலிட்டு புண் மேல் போடவும் ஆணி கழன்று விழும். இந்தப் படி ஆணி விழ மட்டும் போட்டு புண்ணுக்கு களிம்பு வேளை வேர் பிரம்பட்டை வருகங் கிழங்கும் ஆவரங் கரி ஒட்டைக் கரிச புடமிட்டு அரைத்து விளக்கெண்ணெயில் அரைத்து வெள்ளைச் சீலையில் தடவி புண்ணின் மேல் போடவும். கண்ட மாலை சர கண்டமாலை தீரும். பத்தியம் காரப்பு, புளிப்பு விடவும்.

சருவாங்கிக்கு மருந்து :-

பெருங் குறிஞ்சா வேர் பட்டை பசுவின் பாலில் அரைத்து முள்ளிக் காயளவு உருட்டி பனை வெல்லம் நல்லெண்ணெய் கலந்து கொடுக்க சர்வாங்கி தீரும்.

யோனி மேகதிற்கு மருந்து :- மெட்டிலே தீராத விடத்திலே யிருக்கிற கொட்டாச் சாங்கி

ஒரு பிடி செந்நெல் அரிசியில் சம மூலமும் போட்டிடித்துக் களிக் கிண்டி வெல்லமிட்டு நெய் வார்த்துத் தின்னவும். இதற்குப் பத்தியம் பசுவின் பால், நெய் கூட்டி வரவும். இப்படி பன்னிரெண்டு நாள் தின்று ஏஏநாள் பத்தியம் பண்ணவும்.

எங்கல் இருமலுக்கு மருந்து :-

சுக்கு விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, அரத்தை விராகனிடை.க, கருஞ்சீரகம் விராகனிடை.க, கச்சன் விராகனிடை.க, கற்கடகச் சிங்கி விராகனிடை.க, கண்டு பறங்கி விராகனிடை.க, வெங்கா--- விராகனிடை.க, இவையெல்லாம் பொடித்து வஸ்திர காயம் பண்ணி வெருகடிப் பிரமாணம் எடுத்து நெய்யிலே பிசறி அதின் மேலே வெள்ளீட்டு நறுக்கி அதிலும் வெண்ணுரை வரும். அதுவுங் கூடக் கூட்டி பத்து நாள் கொள்ள எங் கலிருமல் உப்பிசமிவை தீரும்.

வயற்றிற் கிரிக்கு மருந்து :-

புரசங் கொட்டையை சாணியிற் புதைத்து எடுத்து நன்று அரைத்து உருண்டை பண்ணி கரி உரைத்துக் குடித்துப் பின்னை முருங்கவும். கிரி விழும். திரு மேனிப் புழு வெல்லாம் செத்து விழும்.

எந்த விக்கத்திற்கும் மருந்து :-

நேர்வாளம் எருக்கிலம் பால் விட்டரைத்துப் பூச எந்த விக்கமுங் கரையும்.

தேற்றான் வேர் பட்டை கற்பம் :-

தேற்றான் வேர் பட்டையை உலர்த்தி இடித்துச் சூரணஞ் செய்து தேற்றான் பழங் கொண்டு வந்து தவித்துக் கொட்டை தள்ளி உலர்த்தி இடித்த சூரணமும் அந்தப் பழமுஞ் சமன் கொண்டு உண்டை செய்து ஒரு உருண்டை புளித்த மோரிற் கொள்ள நஞ்சு தீரும் வாதம் பெருவயறு பித்தம், நீர்ப்பாடு, சுரம் இவை தீரும். வேப்பஞ் சாற்றில் கொள்ள ஒன்றை விட்டு மாறல் மூன்று மாறல் சுர காமாலை குடு கரமா வலிப்பு உள் வலிப்பு பிற வலிப்பு சர்வ விஷமுந் தீரும். வெந்நீரில் கொள்ள விரோசனமாம். மஞ்சள் பொடியிற் கொள்ள மூல வியாதி தீரும்.

பசுவின் பாலில் பச்சைப் பயறு போட்டுக் காய்ச்சி இதில் ஒரு ஒருபாடு பித்தம் தீரும். சிறு நீரிலாவது சாராயத்திலாவது கொள்ளச் சன்னி தீரும். சுக்கு கசாயத்தில் கொள் வயிற்று நேக்காடு சன்னி சுரம் தீரும். கடுக்காய் கசாயத்தில் தேன் கூடக் கொள்ளச் சன்னி தீரும். தேற்றான் கற்பம் முற்றும்.

சிறுநீர் எரிப்புக்கும் உள்ளங் கால் எரிப்புக்கும் மருந்து :-

எரி குன்மத்திற்கு நிலவிழார்விலை வைத்து ஒரு சிரங்கைச் சாறு கருப்புக் கட்டி கலந்து மூன்று நாள் குடிக்க எரி குன்மந் தீரும்.

நீரழிவு காலெரிவுக்கு :-

விடத் தேரிலை மூன்று பிடி பொறித்து மரக்கால் யிலொரு பிடி போட்டு நடு வழியிலே ஒன்று போட்டு ஒரு பிடி கொண்டு வந்து பூப் பார்த்து அரைத்துக் காராட்டுப் பாலில் வெல்லம் போட்டுக் குடிக்க எரிவு தீரும்.

உள்ளங்கால் எரிவுக்கு :-

மஞ்சத்தனையை அவைத்து காலில் தேய்க்கவும். ~~[illegible]~~ ஆவாரத்தழை அவைத்து உள்ளங் காலில் தேய்க்க உள்ளங்கால் எரிவு நிற்கும்.

எந்தப் பீனிசத்துக்கும் நசியம் :-

எந்தப் பீனிசத்துக்கும் நசியம் அறியும் விதம் முருக்கிலைச் சாறு இரண்டு பளி முருங்கை யிலைச் சாறு ஒரு பளி நல்லெண்ணெய் ஒரு மூன்றும் ஒன்றாய்ச் சாரித்து நாலு நாளைக் கொருக்கால் நசியம் பண்ணத் தீரும்.

பதினெட்டு வகை எலி கடிக்கு மருந்தும் குணமும்:-

ஆளி என்னும் எலி கடித்தால் உடம்பெங்கும் வீங்கும். கண்ணில் கருக்கிருக்கும். முண்டாயிருக்கும். இதற்கு மருந்து சிறுக்கீரை விரை அரைத்து தேனிற் குழப்பித் தின்னத் தீரும்.

மூலந்திரவென்னும் எலி கடிக்கு:-

உடம்பெங்கும் முட்டாய்க் கடிக்கும். பின்பு கருங் வட்டமாம். இதற்கு வான வேரை அரைத்து தேனிற் குழப்பிக் கொடுக்கத் தீரும்.

முந்தனனென்னும் எலி கடிக்கு:- என்னேரம் உள் வெக்கையுண்டாயிருக்கும். தலையை வெவிரு என்று சுற்றும். வாய் நாறும். இதற்கு மருந்து வாகைப் பட்டையும் வாகை விரையும் அரைத்துத் தேனிற் கொடுக்கத் தீரும்.

சிரி மண்டலி என்னும் எலி கடிக்கு:- சிறுநீர் இரத்தம் போலே விழும். கடித்த வாய் வட்டம் போலே வீங்கும். இதற்கு மருந்து மஞ்சிட்டியும் பற்படாகமும் அரைத்து நெய்யில் குழப்பிக் கொள்ளத் தீரும்.

அருணனென்னும் எலி கடித்தால்:- உடம்பு கருக்கும். விக்கும். இரும்பும். இதற்கு மருந்து முக்கக் காய், பற்படாகம் தேனிற் கொள்ளத் தீரும்.

சுலகன் என்னும் எலி கடிக்கு: கடுத்து நோகும். தலைவலிக்கும். இதற்கு மருந்து செஞ்சந்தனம் தேனிற் மறைத்து விழுங்கத் தீரும்.

குடன் என்னும் எலி கடிக்கு:- வண்டு கடித்தது போலே வீங்கும். இதற்கு மருந்து அப்பைக் கிழங்கு பாலில் அரைத்துக் குடிக்கத் தீரும். பனிப் பயறு பொடி செய்து பசுவின் நெய்யில் கொள்ளத் தீரும் வயறு கழிந்தால் மாதுளை எலுமிச்சம் பழச் சாறும் பாலும் காச்சிக் குடிக்கத் தீரும்.

உக்கமனென்னும் எலி கடித்தால்: கால் கோணும். இதற்கு மருந்து பேய்ப்பீர்க்கன் வேரும் அரிசி கழுவின கழுநீரில் அரைத்து மேலே பூசி, நீர்விரை பத்தியமிருக்கவும்.

மந்தனென்னும் எலி கடித்தால்:- நெருப்பு பட்டாற் போலே சுடுவலிக்கும். உடம்பு வெதும்பும். இதற்கு மருந்து நெல்லிப்பட்டை பன்னிரண்டு பலம் இரு நாழி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சி நல்லெண்ணெய் விட்டுக் குடிக்கத் தீரும்.

நீல கண்டனென்னும் எலி கடித்தால்:- வாயிற் நீர் வரும். சள வாய் விழும். இதற்கு மருந்து தென்னங் குருத்தை அரைத்து முழுங்கத் தீரும்.

செய்யான் கடிக்கு மருந்து:-

காதிற் குரும்பையை கடி வாயிற் பூச எரிப்பு நிற்கும். எருக்கிலை வேரை அரைத்து வைத்து சிறு நீர் விட்டு வழித்து கடிவாயிற் பிசைந்து கட்ட எரிப்பு நிற்கும். நிலக் குமிள் வேரை அரைத்து இள வெந்நீரில் கரைத்து கொடுத்து மேலும் பூச எரிப்பு நிற்கும். தேற்றான் வேர் பொடி செய்து தேனிற் கொடுக்க விஷம் மீறும். செய்யானுக்கு வெற்றிலையுடன் சீரா நெல்லி வேரை மென்று கடி வாயிற் கட்டத் தீரும். அகத்தியிலை சிறுநீரில் அரைத்துப் பூச எரிப்பு நிற்கும். ஊமத்தின் அஞ்சக் குழை அரைத்து கள்ளிப் பாலுடன் வீக்கத்திற்குப் பூசவும். நெரிஞ்சியை அரைத்துப் பூச செய்யான் கடி தீரும். நாவல் வடக்கே போகிற வேரையும், மீண்டும் அரைத்து நீரிற் கொடுத்து மேலும் பூசவும். வீக்சிறுல் கோர்வலை வேரை அரைத்துப் பூசி அதின் மேல் எருக்கிலை வாட்டிக் கட்ட புண்ணும். அதின் பிறகு ஆடு தின்னாப் பாலையை எலுமிச்சம் பழச் சாறு வார்த்து அரைத்துப் பூசப் புண்ணும்: கடி தீரும். பொரும் பிக்கமையை அரைத்து கடிவாயிற் பூசத் தீரும்.

எண்பது வகை காமாலைக்கு மருந்தும் குணமும்:-

வாத காமாலை செய்யுங் வகையதனைக் கேளீர்
போத வுண்டியாம் வயிற்றை பொருமும் மலங் கறியாது,
யோக வீங்கு முடம்பெல்லாம் புறங்கால் முகமும் கானைக்கும்
யோகச் செய்யும் வகை யன்றி யிருக்கு மேனி மொட்டாகே

ஒட்டா பயித்தியம் காமாலை உடம்பை வெளர்க்கும் பிரக்கையில்லை
மிட்ட படுக்கையது அன்னே மிகமே செய்ய வொட்டாது
மிட்டமுடன் வயிறு இறுக் செறியாக் கும் போல் வாயுளியும்
நட்டமான கண் விழிக்கும் நடக்க மிருக்க மிளைப்பாமே.

ஆமே சேற்றமக் காமாலை அமர்ந்து முட்டாய் மனதழியும்.
தாமே பிரமல் காலெடுக்கும் தலை முகமும் வெய்ய வரும்
தீமை செய்யும் நடக் கொட்டாது, செருக்கு மயிர்க் குத்திருக்கால் காமந் தீரும்
விழி பசிக்கும் நடுக்கும் நெஞ்சு காலாமே.

மேலே பயித்திய வாத சுர மாலை விலங்கும் வயிறு பசியில்லை
காது முகமுந் தான் வீங்கும் கடுக நடந்தால் மேலிளைப்பாகும்
பாலைக் கொண்டால் வயிறு ஊம் பருக்க விழியும் வெளு வெளுக்கும்
ஏலமிடவே கடுப்பெடுக்கும் வாந்தியாம் புளிச்சேக்கிடுமே.

சேக்சி வாத கர்மாலை சீரணமக வொட்டாது சூக்கும்
மூக்கும் வேர்வெடுக்கும் மூதி வயிறு காலாகும்
நாக்குங் கண்ணும் வெளுத்திருக்கும் நடக்கில் மேல் மூச்செறிந்திருக்கும்
வீக்க மெடுக்கும் மொழியதனில் விக்கல் இருமலுண்டாமே.

உண்டாஞ் சேற்ற காமாலை வாந்தி பண்ணும் செருமல் வரும்
வண்டாச் சுழல் மேல் மனதில்லை வயிறுங் கழியுந் தான் மரும்
உண்டாம் பாண்டு போலாடும் உள்ளக் குண்டால் சீரணமில்லை
உடம்பு வெளுக்கும் கை கால் மெலாமே.

ஆமே மூன்றும் அடுத்த காமாலை அவுத்தி யெடுக்கும் அச்சந்த வரும்
காமே வீலையு மிருமமாய் கண்ணீர் துலிக்கும் கடுப் பெடுக்கும்
போமே வருமே வீக்கமுந் தான் புளிக்கும் நெஞ்சு தான் பசிக்கும்
வேமே குளிருஞ் சோகை மிகும் வேற்கும் வயிறு விங்கிடுமே.

வீங்குஞ் சோகை காமாலை வேர்க்கும் வயிறு பசியாது
தாங்கும் வெய்யில் காய்விக்கும் சுவரில் மண்ணும் சாம்பலுண்ணும்
வாங்குமே இளைப்பாக வழியு நடக்க வொட்டாது
ஏங்கும் வீளைக்கும் வயிறு கழியு மிரத்த நிறமாய் நீர் விடுமே.-

நீரும் வெள்ளை மஞ்சருமாய் நீங்கா முகமும் காலுடனே
ஆருங் கண்ணும் மஞ்சளிக்கும் அசனம் விழுங்க வொட்டாது
ஊரு மேனி காது மஞ்சளிக்கும் முகம் வேர்க்கும் காலோயும்
நூரும் வளைப்பல காலும் சொன்னோ மினைச் சொன்னோமே.

இதற்கு மருந்து விபரம் அறியும்படி:--

கற்றாளைச் சாறு நாழி, கரப்பான் சாறு நாழி, எலுமிச்சம் பழச் சாறு நாழி அரப்பொடி நாழி ஊசிக் கர்ந்தம் பலம்.2, விரை போக்கின கடுக்காய் இந்த மூன்று வகையும் கையாந்தகரைச் சாறு விட்டரைத்து அந்தச் சாற்றில் கரைத்து விட்டரைத்து அந்தச் சாற்றில் கரைத்து காச்சிப் பதமான போது ஆம்பல் பனை வெல்லம் கட்டிப் போட்டுக் காச்சி காச்சின லேகியம் பதமான போதே இறக்கிக் கொண்டு விழுதுகள் பூசை செய்து கழற்சிக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி இரண்டு நேரத்திற்கும் இரண்டு உருண்டை கொடுக்க காமாலை, விஷ காமாலை, பாண்டு ரோகம் விஷ பாகம் இந்த ஒன்பது வகை காமாலை முற்றும் நீங்கும்.

முறை நோவு:-

சொர்ரை நோவாவது உடுப்பு நோக்காடு. குனிய ஒட்டாது. இதற்கு நல்லெண்ணெய்

ஒரு படி பொடி கரைச் சாறு பிடி.2, உத்தாமணி யிலைச் சாறு பிடி.உ, இம் மூன்றுஞ் சேர்த்துக் கொடுக்கவும். இந்தப்படி மூன்று நாள் குடிக்க இடுப்பு நோவு கொறுரை நோவு தீரும்.

வாய்வு குன்மத்தின் குணம்:-

வயறு பொருமிக் கொண்டு அசனஞ் செரியாமல் வயற்றுக்குள்ளே முக்கு நொந்து கீழ் நோக்காமல் வாய்வு மேல் நோக்கிக் கொண்டு பசியில்லாமல் யிருக்கும். வலி குன்மத்திற்கு விடி வெறு உண்ட சோறு செரியாமல் இருக்கும். அந்நியம் போல பொருமிக் கொண்டு வலித்து எகிறிடும். வாந்தி பண்ணும்.

இரத்த குன்மத்தின் குணம்:-

வயிற்றை வலித்து கூட்டு இரத்தம் போலே இரத்தமாய் விழும். வெடி வேறு அந்நியம் பொருமு வாயாலெடுக்கும்.

சிலேற்பன குன்மத்தின் குணம்:-

வயிற்றை வலித்து இரவும் பகலும் வெள்ளோக்காளமாய் எடுக்கும்.

வாத குன்மத்தின் குணம்:-

உடம்பு கடுத்து வயிறு வலித்துப் பொருமி அசனஞ் செல்லாது. செரியாது.

பித்த குன்மத்தின் குணம்:-

வயிற்றில் ஈரக் குலை பற்றி இரவும் பகலும் எரிக்கும். அசனம் பண்ணினால் அடங்கும் பின்னையும் எரிக்கும்.

இதற்கு மருந்து:-

சுக்கு, மிளகு, ஓமம், இந்துப்பு, நற்சீரகம், கருஞ்சீரகம், பெருங்காயம், நாய்க் கடுகு, வெள் வெங்காயம், கடுகு ரோகணி மயபடி இந்துப்பு வெள்ளுள்ளி பெருங் காயம், கடுகுரோகணி இந்த நால வகையும் பத்து வகையும் சமனாக வெவ்வேறே பொடி செய்து ஒன்றாய்க் கூட்டி கழற்சிக் காய் ஒரு சாமம் வெந்நீர் ஒரு சாமமாய் அரைத்து கழற்சிப் பிரமாணம் உருண்டை செய்து கொண்டு சேற்பன குன்மத்திற்கு திப்பிலி கடுக்காய், சிவதை வேர், நாழி நீர், உழக்காகக் காய்ச்சி இதில் ஒரு உருண்டை கலந்து கொடுக்கவும்.

வாத குன்மத்திற்கு மருந்து:-

மாதளங்காய் சாரணை வேர் வாத மடக்கி இலை மூன்றும் சமனாக நசுக்கி இரு நாழி நீர் உழக்காகக் காய்ச்சி அதில் ஒரு உருண்டை கொடுக்கவும்.

பித்த குன்மத்திற்கு மருந்து:-

தண்ணீர் ஒரு படி ஆழாக்காகக் காய்ச்சி ஆற வைத்து மூன்று காசிடை தேன் கூட்டி ஒரு உருண்டை கலக்கிச் கொடுக்கவும்.

எரி குன்மத்திற்கு மருந்து:-

எலுமிச்சம் பழம் ரு, நாழித் தண்ணீரில் நசுக்கிப் போட்டு உழக்காகக் காய்ச்சி அதில் ஒரு உருண்டை கொடுக்கவும். பருத்திக் காயில் இப்படி கொடுக்கவும். நாவலக் கொழுந்து நொச்சிப் பட்டை சமன் கொண்டு எருமை மோரில் அரைத்துக் கொடுக்க வயிற்று வலி தீரும். கை கண்டது.

கடகுறை கரு விப்புருதி மடி விப்புருதி ஆக மூன்றுக்கும் மருந்து:-

கரு விப்புருதிக் குணமும் மருந்தும்:-

நெஞ்சிலே நோகும். உள்ளே திரட்சியைப் போல கட்டிக் காணும். என் நேரமுஞ் சாச்சல் அடிக்கும். இருமலெடுத்து வாயிலே சீ விழும். உடம்பு இளைத்து காலோய்ந்து வரும். உண்ண ஒட்டாது. நாட் சென்றால் கால் முகமும் வீங்கும் பருத்தால் திரிதிரை வராது.

மடி விப்புருதி முடி வாதத்திற்கு:-

லிங்கமாகிற போது அடி வயிறு நோகும். உதிரங் கருப்பு நிறமாய் கட்டி கட்டியாய் விழும். மடி விப்புருதிக்கு நோவு வந்தவுடனே யோனி வயிறு சீழ்விழும். இட புறத்தில் வாழைக்காய் போலே கிடக்கும். இதற்கு பிள்ளையில்லாமற் போகும். கட கிரைக்கு. விலாப்புறத்திலே கொடிக் கட்டகிலே யிருந்து. மேல் நேர்க்கி உள்ளே கிண்ணி வட்டம் போலே வீங்கியிருக்கும். அமுக்கிப் பார்த்தால் மூழிக் கூடு போலே அரை அரையாய்க் காண்பிக்கும். இந்த நாவுக்கு மருந்து ஒன்று. சாரணை வேர், கருங்காவளை. வேர், மலை மலைக்கி வேர் இந்த மூன்றும். சாரணை வேரை இரண்டு. மூன்று நாளாய். பிளந்து புழுப் பார்த்து அதை பசுவின் பால் விட்டு நேகச் சிறு விளாங்காயளவு அரைத்து அம்மியை பின்னும் பசுவின் பாலில் கழுவி வழித்துக் கொண்டு இரண்டாவது கருங்காவளை கட்டி உள்ளுக்குக் கோர எடுத்துப். போட்டு. பட்டையை பசுவின் பால் விட்டு ஒரு முள்ளிக்காயளவு அரைத்துக் கொண்டு மலை கலக்கி வேரை கட்டி கோரை வாங்கிப் போட்டு அந்தப் பட்டையை பசுவின் பால் விட்டுக் கலக்கிக் கொடுக்கவும். இந்தப் படி மூன்று நாள் கொடுக்கவும்.. பலன். செட்ட. பேருக்கு ஒரு நாள் விட்டொரு நாள் கொடுக்கவும். அந்த வியாதி உடைந்து சீ விழும். நொங்கு போலே மலக் கட்டும். அம் மலக் கட்டும் சலக் கட்டும், வயற்றிலுள்ள வினைய மெல்லாம் போன பின்பு அசதியானால் மோருஞ் சோறும் கொடுக்கவும் தீரும். இரண்டு நாள் சென்ற பிறகு கனவன் மிளகு பலம்.க, சுக்கு பலம்.க, வெள் வெங்காயம் பலம்.க, கடுகு பலம்.க, நற்சீரகம் பலம்.க, ஓமம் பலம்.க, இந்த ஆறு வகையும் ஒவ்வொன்றாய் இள வெதுப்பாய் வெதுப்பிப் பொடி செய்து ஒரு படி பசுவின். நெய் காய வைத்து ஒரு பலம் பனை வெல்லம் பொடி செய்து ஆறு வகைப் பொடியும் போட்டு இரும்புக் கரண்டி உலர்த்தி அமர்ந்தவுடனே பின்னும் அடி பற்றாமல் கை விடாமல் கிளறி பொங்கி வருகிற பதத்தில் பனை வெல்லம் பொடி. போட்டு கூழ் போலே கண்டால் இறக்கிக் கொண்டு வேலிப் பருத்தி யிலையை மடியிலே வைத்து இறந்து அயிக்கமாய் எடுத்து ந நேகக்கி ஒரு துளி பிழியக் குப்பென்று பொங்கும். கரண்டியிலாக்கி அமர்ந்தவுடனேபின்னும் ஒரு துளி பிழியப் பொங்கும். அதையும் ஆற்றிப் பின்னும் பிழிந்து பொங்கா மலாக்கி வெள்ளைச் சீலையில் வெடு கட்டி வைத்துக் கொண்டு தினம் ஒரு மாங்காயளவு தின்னவும். இதற்கு பத்தியம் பசுவின் பால் பசுவின் நெய்யும் நச்சுப்பும் கட்டவும். புளிப் புகை ஆகாது. அந்த மருந்தும் நெய்யும் கலந்து கட்ட உள் புண்ணும் ஆறும்.

விரியன் கடி விஷத்திற்கு மருந்து:-

வரிக் கோவை வேரும் செந் சின்னி வேரும் வாகைப் பட்டையும் இவை வெல்லாம் ...ராக்கி வஸ்திர காயஞ் செய் கடி அறிந்து வெகு கடிப் பிரமாணம் இள வென்னீரில் கொடுக்க விரியன் கடி விஷம் தீரும். முக்கிர விளா மரத்தின் வேரை அரைத்து காடியிற் கொடுக்க தீரும். நீர்ப் புலான் வேரை அரைத்துப் பசுவின் பாலிற் கொடுக்க தீரும். நிலக் கடம்பின் வேரை மென்று மூன்று நாள் செவியிலூத தீரும். பேய்ப் பீர்க்கன் கூடு இள வென்னீரில் பிசைந்து கொடுக்க வாந்தியாம்.. வாந்தி யெடாத போனால். பசுவின் பால் கொடுக்கவும். விஷ தீரும். மலை தாங்கி வேரை தின்னக் கொடுத்து கடி வாயிலும் அரைத்துப் பூச தீரும். விரியன் கடி தீரும். சிறு சிறுப்பை சமூலமும் ...ள் பண்ணி வஸ்திர காயம் செய்து கொண்டு வெகு கடிப் பிரமாணம் இள வென்னீரில் கொள்ளத் தீரும். பேய்ப்பீர்க்கன் செடி சமூலமும் உலர்த்தி இடித்து வஸ்திர. காயஞ் செய்து கொண்டு தேள் பிடியளவு நல்லெண்ணெயிற் கொடுக்க விஷம் தீரும். கீழா நெல்லிச் சமூலமும் அரைத்து நல்லெண்ணெயிற் கொடுக்க விஷம் தீரும். வெள் வெங்காயம் வசம்பு பெருங்காயம் சிறுநீரில் அரைத்து உச்சியிலர். தேய்த்து நாசியில் நசியஞ் செய்து காதிலும் ஊத்த விஷம் தீரும். குப்பை மேனி யிலையை அரைத்து காடியிற் கொடுக்க எந்த விஷமும் தீரும். நல்ல முசுட்டை இலையை எலுமிச்சங் காயளவு அரைத்து தண்ணீரிற் கரைத்துக் கொடுக்க தீரும். வெள்ளை சிறு சிறுப்பை வேரை அரைத்து இள வென்னீரில் கொடுக்க தீரும். நாய் பாகல் வேரை அரைத்து இள வென்னீரிற் கொடுக்க தீரும். சீந்தில் விரையை ஏழு நாள் வெள்ளாட்டு மூத்திரத்தில் ஊறப் போட்டு எடுத்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு விஷந் தீண்டினவுடனே ஒரு விரையை எடுத்துக் கடிக்க தீரும். மீளா தென்மேல் அரைத்துத் தண்ணீரில் கொடுக்க தீரும்.

சுவட்டை கடிக்கு மருந்து:-

மிளகு பொடி செய்து சிறு நீரிற் பொட்டணம் செய்து பிடிக்க உச்சந் தலை, செவி மூக்கிலும் பிழியத் தீரும். குமிழம் வேரும், சுண்டை வேரும் அரைத்து இள வெந்நீரில் கொடுக்க இறங்கக் கடல விஷம் தீரும். நல்ல பீர்க்கன் விரையை அரைத்து வெந்நீரில் கொடுக்கத் தீரும்.

நல்ல பாம்பு கடிக்கு மருந்து:-

நல்ல பாம்பு கடிக்கு நீர்ப் பூலா வேரும் பொன்னங்காணி வேரும், சிறா செங்குருநீர் வேரும், சுக்கு, வசம்பு, வெள் வெங்காயம், இவை எல்லாம் அரைத்து விழுங்கிட நல்ல பாம்பின் விஷம் தீரும்

சிறுகுறிஞ்சா வேரும், வசம்பும், மிளகும் ஒரு கொட்டைப் பருமன் சமனாக அரைத்து முழுங்க நல்ல பாம்பு விஷம் தீரும். வீக்கத்திற்கு இப்பைப் புண்ணாக்கு எருக்கிலம் பாலில் அரைத்து இறங்கக் கடவத் தீரும். மாதளம் வேரை அரைத்து பாலில் கொடுக்க விஷம் தீரும். வெள் ளைக் காக்கணம் வேரை பாக்கு வெற்றிலையில் தின்ன தீரும். விரியனுக்கு கொட்டை மரத்தின் மேல் காளானை வெற்றிலையுடனே தின்று அந்தச் சாறு உள்ளே விழுங்கி அந்தக் கம்பலம் கடி வாயில் வைத்துக் கட்டவும் விஷம் தீரும். வீங்கினால் பரசம் பொரிசம் பட்டை வேரை அரைத்து நல்லெண்ணெயில் தேக வைத்துப் பசத் தீரும். நொச்சி யிலையும் எருமைச் சாணக்கமும் சிறு நீரிலே கொடுக்க விஷம் தீரும்.

விரியனுக்கு:-

மயிர் மாணிக்கம் சமூலமும் கசக்கி காடியிற் கொடுக்க விஷம் தீரும். இலவன் சிறுயும் புங்கன் சிறுயும் அப்பைக் கிழங்கும் இடித்துச் சாறு செய்து வைத்துக் கொண்டு இள வெந்நீரிற் கொடுக்க விஷம் தீரும்.

தலை விஷம் கொண்டால் இப்பைப் புண்ணாக்கு வசம்பும் நசுக்கி சிறு நீரில் குழைத்து இரண்டு நாசியிலும் நசியம் பண்ணினால் தலை விஷம் தீரும். புல்லா முனக்கிலை வசம்பு ஒரு கொட்டைப் பருமன் நசுக்கி சிறு நீருடனே நசியம் பண்ண தீரும். அளிஞ்சி விரை பேய் பீர்க்கன் விரை பேய்ச் சுரை விரை கழுதை எலும்பு முசலெலும்பு இவை யெல்லாம் சுட்டி எளித் தயிலம் இறக்கி வைத்துக் கொண்டு அந்தத் தயிலத்திலே வசம்பு அரைத்துக் கூட்டி நசியம் பண்ண எல்லா விஷமும் தீரும். வாயிலும் மூக்கிலும் நசியம் பண்ண செத்த பிணமும் எழுந்திருக்கும். கரும்பை வேரும், வெற்றிலை மூக்கும் நசுக்கி சிறு நீர் கூட்டி நசியம் பண்ண விரியன் கடி தீரும். சாறணை வேரும், ஒரு கொட்டைப் பருமன் வசம்பும் நசுக்கி சிறு நீரில் நசியம் பண்ண விஷம் தீரும். விருட்சபி வேரும் இலையும் ஒரு கொட்டைப் பருமன் வசம்பும் நசுக்கி சிறு நீரில் நசியம் பண்ண தீரும். இப்பை மேனியிலை புண்ணாக்குப் பருமன் ஒரு கொட்டைப்பருமன் வசம்பு நசுக்கி சிறு நீரில் நசியம் பண்ண எந்த விஷமும் தீரும். பேர் முருங்கைக் கொழுந்து இலையும் ஒரு கொட்டைப் பருமன் வசம்புங் கூட்டி சிறு நீரில் நசுக்கி நசியம் பண்ண தீரும். மகிழின் விரை செம்புளவு விரை மிளகு இரசம் இவை நாலும் சமன் கொண்டு எலுமிச்சம் பழத்துக்குள்ளே எட்டு நாளாற போட்டு எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து உளுந்தளவு பட்சி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு எலுமிச்சம் பழச் சாற்றில் மிளகுப் பிரமாணம் உரைத்து இரண்டு கண்ணிலும் இடச் செத்த பிணமும் எழுந்திருக்கும். விஷ மருந்தின் பிரயோகம் முற்றும்.

பிள்ளை விஷ மருந்து:-

சீலை சுட்ட சாம்பலை குளிக் காயளவு கருப்புக் கட்டி கூட்டி மத்தித்துக் கொடுக்க பிள்ளை விழும்.

சிறுநீரிற் குழும் மருந்தும்:-

பகலைக்கு பத்து தரம் இருபது தரம் ராத்திரிக்கு முப்பது தரம் நாற்பது தரம் வயிறு நொந்து நொந்து சீழும் இரத்தமுங் கழியும் போனால் கடுக்கும் மூலங் கடுக்கும். பலன வாய் நோகும். நித்திரை வராது. உடம்பு இளைக்கும். கண் பஞ்சடையும்

<u>இருமலுக்கு மருந்து</u> :-

எருமை வெண்ணெய் சிறு விளாங்காய் பிரமாணம் கலரிலே ராத்திரிமுப்பது நாழிகை இருக்க விட்டு மறுநாள் எடுத்துக் கொண்டு கையடங்க ஒரு பிடி மிளகு எடுத்து பொடித்துக் கட்டி பிழிந்து பட அரைத்து முழுங்கக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்க நாலு நாள், கொடுக்க தீரும். இதற்கு பத்தியம். மிளகு பொடியும், தயிரும் சோறும் அல்லது ஒன்றும் ஆகாது.

<u>திருக் கோவிலூராசியின் மருந்து</u> :-

நேர்வாளம் பலம்.உ, இதை எருமை சாணியில் போட்டு இரண்டு படி தண்ணீரில் கரைத்து வேக வைத்துக் குளிர்ந்த நீர் விட்டுக் கழுவி உடைத்து முளை வாங்கிப் போட்டு அந்தப் பருப்பைக் கற்றாழையைப் பிளந்து அதில் வைத்து மூடி பச்சைக் கொடியிற் கட்டி எருவில் கருக்காமல் வேக வைத்து எடுத்து பத்து விராகனிடை நேர் வாளத்திற்கு மூன்று விராகனிடை இரசம் விட்டு பின் வெல்லம் அரை வட்டுப் போட்டு தேங்காய் ஓடு சுட்ட கரி அவரைப் பருப்பத்தனைகூடப் போட்டு தேங்காய் பால் விட்டு அம்மியில் ஒட்டாமல் எழும்ப அரைத்து அதின் பிறகு அந்த வழித்துச் சிமிழில் அடைத்துக் கொண்டு விரேசனத்திற்கு ஒரு கழஞ்சுப் பிரமாணம் கொடுக்கவும். மாற்று குளிர்ந்த தண்ணீர் வார்த்துக் ~~கொடுக்கவும்~~. கொண்டு மோருஞ் சோறும் உண்ணவும். பயற்றின் கஞ்சி குடிக்கவும். முருங்கையிலையும் சீரகமும் கசாயம் வைத்துக் குடிக்க நிற்கும்.

<u>வேறு: மாட்டுப் பிணியாகில்</u> :-

அவரைப் பருப்பத்தனை நாக்கில் தேய்க்க சோளப் பயிறு சிற்றல் பிச்சு நோவு, கொடி முள்ளடைப்பான பின்னடைப்பன் செருமல் மூக்குச் சீழ் நாக்குச் சிழல் வயற்றுக் கல், உப்பிசம் கடி விஷடம் உடம்பு கடிப்பு மாட்டுக்கு சகல வியாதியுந் தீரும்.

மனிதருக்கு ஒரு குன்றிப் பிரமாணம் கொள்ள வயிற்று நோவு, வாய்க்கரட்சி பெரு வயிறு, காமாலை விஷ பாகம் மூன்று நாள் நாலா நாள் மாறல் விஷ கடி என்னப் பட்டதெல்லாந் தீரும். இந்த மருந்தைச் செம்பின் மேல் தேய்க்க வெள்ளியிலே நிறமாம் அறியவும்.

<u>பிள்ளையின் கண்ணோவுக்கு மருந்து</u> :-

செப்பு நெருஞ்சி வேர் பிடுங்கி அவர்கள் பேர் சொல்லி பிளந்து போடக் கண்ணோவு தீரும். தக்கி வேர், வடக்கே போகிற வேர், செவ்வாய்க் கிழமையிற் பிடுங்கி வந்து தீப தூபங் கொடுத்து காதிற் கட்டக் கண்ணோவு தீரும்.

<u>கண்ணிற் பல நோவுக்கும் சிமிழ் மருந்து</u> :-

மயில் துத்தம் விராகன்.க, படிகாரம் விராகன்.க, சீனிக் காரம் விராகன்.க, இம் மூன்று மருந்தும் வெவ்வேறும் பொடி செய்து இரும்புக் கரண்டியிலிட்டு பதத்தில் பொரித்துக் கொண்டு செருமாங் கொட்டை சுட்ட கரி விராகன்.க, இதுவும் பொடி செய்து. இந்த நாலு வகை மருந்துங் கலந்து மேல் வைத்து சிறு முள்ளிக்காயளவுப் பசுவின் வெண்ணெய் போட்டுக் காசுச் செம்பு கொண்டு ஒரு சாமம் அரைத்து வழித்துச் சிமிழில் அடைத்துக் கொண்டு ஒரு நாளெல்லாம் குளிர்ந்த தண்ணீர் போட்டு மற்ற நாளெடுத்துக் கண்ணோவுக்குப் பாசிப் பயறுமாதிரி போடவும். தீரும் வியாதி இந்த மருந்து விளக்கிற் காச்சிப் போடவும். இதற்கு கண்ணோவு அமரம் ஆளிப்பறிலம் அளிகள் தம்மாங்கிஷம் கண்ணிற் நீர்ப் பாச்சல் இளி கண் நேத்திர வியாதி முதலான தெல்லாந் தீரும். புளியாகாது.

<u>எந்த சுரத்திற்கும் கசாயம்</u> :-

கொத்தமல்லி முத்தக் காசு, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், பேய்ப் புடல் சீந்திக் கொடி வேப்பீர்க்கு, சுக்கு இவை யெல்லாம் சமன் செய்து கசாயம் வைத்துத் தேன் கலந்து கொடுக்கவும். எந்த சுரமும் போம்.

14.3.63.

<u>நீர்க் கோவைக்கு மருந்து</u> :-

உசிலம் பட்டைப் பொடி நாழி, கடுக்காய்ப் பொடி நாழி, சீலை வடி கொண்டு இரண்டு வகைப் பொடியுங் கலந்து கொடுக்கவும். நாலு மூன்று தரம் வயிறு கழியும். கஞ்சியும் சோறும் இப்படி எட்டு நாள் கொள்ளவும். முற்றின சாவலுக்கு நாழிக் கல்லுப் பாரயிட்டு வேக விட்டு உப்புக் கூட்டமாய் உலர்த்தி சோற்றுடன் கூட்டவும். நீர்க் கோவை போம்.

<u>குடல் வாதத்திற்கு மருந்து</u> :-

கறிய சுண்ணாம்பாம் ஒரு சுண்டைக் காயளவு வாழைப் பழத்தில் வைத்து விழுங்கவும். குடல் வாதம் தீரும். வெள்ளெழுத்துக்கு முசுறு முட்டை வெள் வெங்காயம் சக்கு இவை மூன்றும் அரைத்துப் பசுவின் பாலில் மூன்று நாள் கொள்ளத் தீரும். வெள்ளெழுத்து தீரும்.

<u>வெள்ளை விழுகிறதற்கு மருந்து</u> :-

நாராயண நாயக்கன் மருந்து.- மாம்பட்டையைக் கொண்டு வந்து இவைத்து வெள்ளாட்டுப் பாலில் ஒரு படி விட்டு பிசைந்து எடுத்துக் கொண்டு அதில் வெங்கக் கல் பொடி ஒரு சிறங்கை பொடிப் போட்டு சுண்ணாம்புத் தண்ணீர் ஒரு சிறங்கை கூட விட்டு இந்த மூன்றும் மருந்தும் சாரித்து ஆறு நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி யாகாது. இதுவும் பெரும்பூளை வேரைத் தவைத்து ஒரு புதுப் பானையிலே போட்டு எருமை மோர் நாழி மோர் விட்டு நற்சீரகம் ஒரு காசிடை நறுக்கிப் போட்டு மூன்று நாளைக்கு தினமொரு தரமாகக் கொடுக்கவும். இதுவும் கள்ளிச் செடி சர்வ மெல்லுங் கொண்டு வந்து தவைத்து எருமை மோரில் பிசைந்து முக்கால் படி சாறு மூன்று நாளைக்கு கொடுக்கவும். இதற்குப் பத்தியம் உப்பு, புளி யாகாது. முருங்கை ரச்சிரி மிளகு பொடி சேர்த்துக் கொள்ளவும்.

<u>வெள்ளெழுத்து மருந்து</u> :-

நல்ல சீரகம் பொடி செய்து வெள்ளைச் சீலையில் பொட்டணங் கட்டி முலைப் பாலில் ஊறி வைத்து ராத்திரிக்கு கண்ணில் பிழியத் தீரும்.

<u>வெள்ளை காசிக்கு மருந்து</u> :-

அப்பைக் கிழங்கு எலுமிச்சங் காயளவு அரைத்து இள வெந்நீரில் முன்னே கரிக்கி கொடுத்து பிறகு மருந்து கொடுக்கவும். மத்தியானத்திற்கு மேல் கருங் கோழி யடைத்து பலசம்பார மிட்டுச சாறு ஒரு படி கொடுக்கவும்.

<u>புவுசத்திற்கு</u> :-

குருவை அரிசி ஒரு படி முத்தின தேங்காய் இரண்டு காயத் துருவி பசுவின் பாலையுஞ் சமன் கொண்டு பேய்க் கருப்பனிலையை அரைத்து ஒரு விளாங்காய்ப் பிரமாணம் கருங்கோழி தலை கால் குடல் கள்ளித் தவைத்து எண்ணெயிற் கூடப் போட்டு பச்சை கொடி வேலிப் பட்டை செந்தாழைப் பட்டை கடுக்காய் ஒரு பலம் போட்டுக் காய்ச்சி தினம் ஒரு கறண்டி தின்னப் பவுத்திரம் தீரும்.

<u>பீனிசத்திற்கு எண்ணெய்</u> :-

நல்லெண்ணெய் படி.௧, மிளகு பலம்.௨ இந்த இரண்டு பல மிளகையும் ஒரு படி தண்ணீர் விட்டு அரைப்படியாகக் காய்ச்சி கொடுக்க விட்டு அந்தத் தண்ணீரை நல்லெண்ணெயில் விட்டுக் கலந்து அதின் பின் காழும்பு மூன்று கொண்டு வந்து முறத்திலே தட்டி விசைந்து தாளை எடுத்து பதமான போது அதை உள்ளே போட்டு பதத்தில் வடித்து முழுகவும்.

<u>பிள்ளைப் பிணிக்கு மருந்து</u> :-

அப்பக் கோவை, விளாந்தழை, கிள்ளித் தழை, திப்பிலி, வசம்பு, இந்தக் கொண்டு வந்து நசுக்கி மேலுகத்துத் தலை போடவும். இந்த ஐந்து வகையும் கழுத்தில கட்டவும்.

<u>நீர்எரிப்புக்கு:-</u> **14.3.63.**

பழம் பாசியிலை சமூலமும் தைவேளை நற்சீரகம் ஈர வெங்காயம் இவை மூன்றும் கூட்டி ஒன்றாய் இடித்து இத்துடன் கல்நார் பொடித்திடவு. சீனி சர்க்கரை கம்மஞ் சோற்றுக் கண்ணீர் எருமை மோர் இளநீர் இவையெல்லாம் சம்பாதித்து உள்ளுக்குக் கொள்ளவும். இதற்குப் பத்தியம் உப்புச புளி சேர்க்கலாம். சாதம் கம்மஞ் சாதம் காரமே ஆகாது.

<u>விக்கலெடுத்தால் மருந்து:-</u>

நதநிக் குழை கொண்டு வந்து அரைத்துப் பசுவின் வெண்ணெயில் குழைத்து மூன்று உருண்டை விழுங்கவும்.
(வேறு) இலவந் தழை இலவம் பட்டை இடித்து எருமை மோரில் பிசைந்து கம்பினியில் பிழிந்து வடித்துக் கொள்ளவும். ஏலம், கருஞ்சீரகம், நற்சீரகம் அரைத்துக் கலந்து சீனி சர்க்கரை கூட்டிக் கொள்ளவும். விக்கல் தீரும.

<u>ஜாகட மூ. நூ. குறை பொருள்:-</u>

முத்துக் கர் கோரைக் கிழங்கு, முதியார் கூந்தல்; சவுரிக் குடி; உத்தம காளி, உத்தர்மணி வெறுபபடக்கி யாவது வேலிப் பருத்தி, நாகமல்லியாவது வெலிய ஜெஞ்சான் திரிகூலமாவது வெற்றிலையாம். வட்டத் திருப்பியாவது மலை தாங்கி உத்திராணியாவது நாயருவி வேர், புலித்திருப்பன் அகத்திக் கொழுந்து, மேகநாதியாவது சிறுத்தேரையாம். நத்தை கட்டையாவது சிறு சாறணையாம். ஆகாயட்டியாவது, தாழ்கொட்டியாம், குளக் கட்டையாவது மாதேவியாம். ஒரு மடக்கியாவது ஆனிஞ்சியாம். விடு மருந்து நீர்ச் சுண்ணாம்பு. நன்னாரியாவது காட்டு மாகாளி. இரு வேலியாவது வெட்டி வேராம். திரிபலை என்பது நெல்லிக்காய், கடுக்காய், தானிக்காய் பேராமுட்டி பின் ரங்கள் கவிா மென்பது வில்வமாம். நிலக் கடம்பனுவது முக்கிருக்கள், பெருமாள் பரஞ்சோதி, பெருமாணடியிலை முடகுதெக்காலது புளிச்சால் பெயரே. அம்பிலி யென்பது கொளிஞ்சி, கிரியாம் சிலிமைப் பூடு தென்ன பாலை, நற்பாலை குளவித்து மாலை கஸ்தூரி மஞ்சள், செவ்வாளக் கொட்டை, நேர்வாளமாம், மண்ணில் வேந்தன் பூமி சர்க்கரைக் கிழங்கு, வயிரவ னென்பது நாய் வேளை அரகர் ஒளித்தது ஐவிரல் கொவ்வமுகை குப்பை மேனி வெந்தோன்றியாவது வெலியணராசன் முப்புற மெரித்தான் கோழிஞ்சிக்குப் பேர். குறண்டி யாம்பல் அல்லி நெய்தலாவது தாமரை, உப்புக்கு மூலாவது கருந் துளசி, நிலவாகையாவது நிலையாவரை, வெந்கொட்டி மயிரெசுளென்பது செம்பருத்தி யிங்கு யெனபது பெருங்காயம், கீழ மூல மென்பது நெருஞ்சி கொடும்பையாவது பொன்னாங்காளி கஞ்சாங் கோரையாவது கருநாய் துளசி, சாறுகி யென்பது வல்லாரை வேலிப் பருத்தி யுத்தது பெருங் குமிழமாவது பாதிரையாம். பொரமல்லி விடாச் செடி சித்தா மல்லி, கொம்மல்லி, சிறுபயிலை, முள்ளிச் செடி, வற்றிலையாவது கத்தரியாம். மந்தைப் பெருசசாளி ஆவரையாம். மடிச் சிலை பரிக்கான் பருவிலை அபரஞ்சியாவது கஞ்சா செம்மையாவது கோழியவரை முசுறு முட்டை செவ்வெறும்புக் கூடு நெல்லி முள்ளி நெல்லியின் கனியாம். மடியிற் குருவி வெற்றிலை சின்னது றொட்டிப் பெரியது றொட்டி சின்னமைப் பூடு பெரியமைப் பூடு இ_ர முறியாவது சிலந்திக் கொடி சித்திர மூலம் கொடி வேரியாம். காயைக் கொன்றான் பாலை ராமன் என்பது நல்ல துளசி. லட்சுமன் என்பது நாய் துளசி, மோகப் பாளை புன்னை குரிஞ்சி தம்பை பேராம். அதிர சாலம் ஈக்கு. கைச் செரியை மென்பது பூலாங் கிழங்கு, வச்சிர வல்லி பிரண்டை இன்டு யென்பது சீவக்காய் புலிதொடரியாவது காரிண்டம். இரு வேலியாவது பேடி பேராம். ஆவுண்டை யென்பது கோவை.

<u>முட்டப்பாக்கும் கடகன்ரக்கும மருந்து:-</u>

வாதமுள்ளி வேர் பட்டை மலையானத்து மஞ்சள் திப்பிலி; மிளகு; ஓமம் ஒரு கொட்டைப் பூடு பெருங்காயம், வசம்பு, ஆரவளி ஒன்பது இதை ஒக்கப் பொடி செய்து நீலை தரக்கீழ் தழைச் சாறு அஞ்சப் பட்டைச் சாறு இவைவிட்டு அரைப்புச் செய்து முள்ளிக் காயளவு உருண்டை செய்து நிழலிலுலர்த்தி அநுபானம் ஆண் பிள்ளைக்கு பெண் பிள்ளை சிறுநீர் கொடுக்கவும். பெண் பிள்ளைக்கு ஆண் பிள்ளை சிறுநீரில் கொடுக்கவும்.

பஞ்ச கோலமாவது :- அமிர்த வல்லி, ப்ரப்பைக் கிழங்கு கொடி யென்பது செவியம், இசரமூலி, சங்கன் குப்பி, கொட்டான கிழங்கு கரகக்கி, முக்கிழங்கு தண்ணு நோக் காடு நோவு எரண்டையாலை நுமணக்காம் எரியா மணக்கும் பஞ்ச கோலமாவது சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், செவியம், இது பஞ்ச கோலம்.

<u>நசியத்துக்கு விபரம்</u> :-

குப்பை மேனிக் கொழுந்து பருத்தலாங் கொழுந்து சுக்கு, வசம்பு ஒரு கொட் டைப்பூடு, சிறுநீர் விட்டுக் கட்டி சீலையில் பொட்டணம் பிடித்து நாசியில் நசியம் விடவும். மாந்த சன்னி விடும்.

<u>வாந்திக்கு மருந்து</u> :-

ஓமம், சிராம்பு, பன்னி கோரைக் கிழங்கு இலை சமன் சேர்த்து கொம் புத் தேனிலரைத்து தேனிற் கூட்டி வாயிலடக்கவும். மன சாமட்டும் நிற்கும்.

<u>வாய்விக்கு மருந்து</u> :-

சுக்கு, மிளகு, இந்துப்பு, ஓமம் இந் நாலும் சட்டி காய வறுத்து பாலால மோரால இந்தப் பொடியைப் போட்டுக குடிக்கவும் வாய்வு நிற்கும்.

<u>தாகத்திற்கு மருந்து</u> :-

மலை தாங்கி வேர், சிரலி வேர், பன்னை வேர், முள்ளுக்கீரை வேர், சுக்கு, மிளகு இவை சட்டி காய வைத்து ஒரு படி தண்ணீர் விட்டு கால் படியாகக் காய்வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும் தாகம் நிற்கும். மறுபடி சட்டியைக் காய வைத்து ஒரு சேரை மணல் போட்டு வறுத்து நிறையத் தண்ணீர் விட்டு இறுத்து உள்ளுக்குக் குடிக்க வும்.

<u>நாவுக்கு வம் போட மருந்து</u> .-

பூ நாகம் எடுத்து சட்டியில் போட்டு வறுக்கி ஒரு வள்ளம் நீர் விட்டுக் காய வைத்து இறக்கி வைத்துக் கொண்டு தாகமான போது குடிக்கவும். இப்படி போ கிக்கும் குடிக்கவும் நாவு வரட்சி தீரும்.

<u>வாய்வுக்கு மருந்து</u> :-

சுக்கு ஒரு பலம் அன்றும்புக் கள்ளிலை வேக வைத்து புடம் செய்து பொடி செய்து நாள் பன்னி பசவின் பாலில் கிளறி ஆறில் சொம்புத் தேன் விட்டுக் குழைத்து நெய் சீனி சர்க்கரை போட்டுக் கிளறி லேகியமாக செய்து கொண்டு காலமே பொழுதோடே சாப்பிடவும் வாய்வு குறைக்கும்:

<u>அதிசாரத்திற்கு குளிகை</u> :-

கள்ளு, மிளகு, திப்பிலி, நாவிப் பருப்பு, இந் நாலுஞ் சமனாகப் போட்டு சட்டியில் ஒரு வள்ளத் தண்ணீர் விட்டு சுருங்க காய்ச்சி இந்த கஷாயத்தில் அரைத்து குளிகை சேர்த்து கொள்ளவும். எருமை மோரில் ஒரு குளிகை சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவும். மூன்று நாளைக்கு அபானம் கொடுக்க அதிசாரம் நிற்கும்.

<u>கண்ணுக்கு அஞ்சனம்</u> :-

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், இந்துப்பு நேர்வாளம் சிராம்பு, நெய் வெந்தயம், தண்ணீரில் ஊறப் போட்டு அந்தத் தண்ணீரில் அரைப்பு செய்து பெரு விரல் பிரமாணம் உருண்டை செய்து முலைப் பாலிலாவது வெற்றிலைச் சாற்றிலாவது கண்ணில் போடவும்.

<u>நாக தோஷ தோஷத்திற்கு மருந்து</u> :-

பூநாகம், அபிமரம், அக்கிராகாரம், குக்கிராட்சம், கலங்கொம்பு, ஏலம், வால் மிளகு, மயிற்றுக் குரசர் கிழையைச் சுட்ட சாம்பல் இது எல்லாம்

முலைப்பாலில் அரைத்து நாவிற்றவும் போடவும்.

வாந்திக்கு மருந்து :-

பன்னி கோரைக் கிழங்கு நய்யக் கட்டி சீலையில் போட்டு உரிஞ்ச நிற்கும்.

பறலை செய்யான் கடிக்கு மருந்து :-

நிலவன் பூவும் கோவைத் தழையும் அரைத்து வெண்ணெயிற் குழைத்து கடவாயிற் பூசவும். ஆவாரக் கொழுந்து அரைத்துப் பசுவின் வெண்ணெயிற் குழைத்துப் பூசவும். பெருஞ் செய்யான் கடிக்கு மருந்து :- பல்லிப்பூடு சமூலமும் மிளகு [illegible] பாலுடன் கொடுக்கவும். மேலுந் தவளையிடவும். பெருஞ் செய்யான் கடி தீரும்,

பறலை செய்யானுக்கு மருந்து :-

முருங்கின் வேச்சப் பட்டையை இடித்துப் பிழிந்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்குந் தவளை யிடவும். கடிவாய் எரிந்தால் பொன்னாங் காணி வேர் அரைத்துப் பூசவும். பறலை செய்யான் கடி தீரும். தி கை கண்டது.

*****

முற்றும்.

ஒ.ச.:- 14.3.63.

Part I — 15 Pages.
Part II — 18 pages
Part III — 34 Pages
Total 67

Verified and compared
[signature]
6.9.63

309